Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

ரூபா 14/00

දිනමුරසු වාරමලර් நவ. 24-30, 2002

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 487



## புலிகளின் விட்டுக் கொடுப்பு எதுவரை?




## வாய்ப்புத் தேடும் லைலா

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

# ஆன்மீகம்

## ஆன் மீக சாதனை



உண்மையான ஆன்மீக சாதனை என்பது, அனைத்து வேலைகளையும் இறைவனின் பணியாக எண்ணிச் செய்வதுதான். வெறும் ஜபம், தியானம் இவையெல்லாம் அல்ல கடவுள். அவர் எங்கும் நிறைந்தவர். நீங்கள் யாரை வேண்டுமானாலும் ஏமாற்றலாம். ஆனால், கடவுளை மட்டும் ஏமாற்ற முடியாது. அவர் எப் போதும் உங்களைக் கவனித்துக் கொண்டிருக்கிறார். அவர் நிரந்தர சாட்சி. அவர் உன்னிடம் இருக்கிறார். எப்படி....? உன் கண்ணில் பார்வை எங்ஙனம் நிறைந்திருக்கிறதோ அப்படி ஒரு புல்லின் நுனியும் கூட அவரது சங்கல்பமின்றி அசையாது. "நான் செய்தேன்" என்ற எண்ணத்தில் மயங்கிவிடுவது முட்டாள்தனம். ஆகவே உனது சாதனைகளைப் பற்றிய வீண் பெருமை வேண்டாம். இறைவனே செய்கின்றான், அதன் பலனையும் அனுபவிக்கின்றான் என்ற புனித உணர்வுகளை வளர்த்துக் கொள்ளுங்கள். எல்லாமே இறைவனின சங்கல்பம் என்ற எண்ணம் வேண்டும். உனக்கு எது நடந்தாலும், அது இலாபமோ, நட்டமோ, துன்பமோ, மகிழ்ச்சியோ அது கடைசி முடிவாக நன்மையையே தரும் என்ற உறுதியான நம்பிக்கையை வளர்த்துக்கொள்! அதுவே ஆன்மீக சாதனையாகும்.

அ.கோபால், கோளாவில்-2.

## நீங்கள் கேட்பதற்கு முன்னமே உங்கள் தந்தைக்குத் தெரியும்

நீங்கள் செபம் செய்யும் பொழுது வெளிவேடக்காரரைப் போல் இருக்க வேண்டாம். ஏனெனில் அவர்கள் "மனிதர் பார்க்கும்படி செபக் கூடங்களிலும் தெருக்கோடிகளிலும் நின்று செபம் செய்ய விரும்புவர். அவர்கள் தங்கள் கைமாறு பெற்றுவிட்டனர் என்று உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார்.

நீயோ செபம் செய்யும் போது உன் அறைக்குள் சென்று கதவைத் தாளிட்டு மறைவாயுள்ள உன் தந்தையை நோக்கிச் செபம் செய், மறைவாயுள்ளதைக் காணும் உன் தந்தையும் உனக்குப் பிரதி பலன் அளிப்பார்.

ஏ.ரசேந்திரன்,
கீளியன்குடியிருப்பு.

## நோன்பின் சிறப்பு

ரமழானில் யார் ஈமானுடனும் நன்மையை எதிர்பார்த்தும் நோன்பு வைப்பாரோ அவருடைய முந்தைய பாவங்கள் மன்னிக்கப் படுமென நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்- அபூஹுரைரா (ரலி)
நூல்கள்- புஹாரீ, முஸ்லிம்.

இதன் விளக்கம் வருமாறு;

இஸ்லாத்தின் முக்கியமான கடமைகளில் நோன்பும் ஒன்றாகும். இதை ரமழான் மாதம் முழுவதும் அனைவரும் பேணிக் கடைப்பிடிக்க வேண்டும். இப்படி நோன்பு நோற்கும் போது ஈமானுடன், இதற்குரிய நன்மையை அல்லாஹ் விடம் எதிர்பார்த்திருந்தால் நாம் முன் செய்த சிறிய பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்படுகின்றன.

ஜனாபா, சஹுருல் சலாஹுடீன்,
உக்குவெல.

## கவிதைப் போட்டி இல.484



இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்

பரிசுக்குரிய கவிதை

### நன்றி

சளைத்தவர்கள் அல்ல நாங்கள்
சாதிப்பவர்கள் என்று
அழுக்குக் கூந்தலின் அபார
சக்தியால்,- ஆண்களின் அடிமைத்
தனத்தை அகற்றும் பெண்ணே
உனக்கு நன்றி.

ஞா.நிரோஸ், அக்கரைப்பற்று-07.

### ஏழைக்கே பலம்

மேட்டுக் குடியற்ற
வீட்டுப் பெண்ணொன்று
நாட்டுத் தெருவினில்
காட்டும் சாகசம்

சதீஸ்குமார் சகிலா-அரியாலை.

### சோ(சா)தனையா?

வேதனை கொண்டு சாதனை
செய்யும் மனிதனே!
ஒவ்வொரு மனிதனும் தம் உயிரால்
படும் வேதனை அவர்களிற்கு
சோதனையாகவும்
நீ உடம்பினால் படும் வேதனை
அவர்களிற்கு சாதனையாகவும்
எண்ணி
உன்னைச் சுற்றிக் கை தட்டும்
மற்றைய மனிதனைப் பார்!
இது தாண்டா உலகம்!

சு.சுமனோஜ், திருகோணமலை.

### நம்பினால்...

சேலை கட்டிய மாதரை நம்பினால்
தெருவினிலே நிற்பர் என்றார் அன்று!
சேலையால் சொன்னவரையே
தெருவில் நிற்க வைத்தாயோ இன்று!

வெலிமடை எம். ராமமூர்த்தி, ஊவா பென்ஹெட்.

### வீறுகொண்டெழு பெண்ணினமே...!

பெண்ணினம்-
கின்னஸ் கீரையா என்ன
எள்ளி நகையாட...
புதனிலே போய்
வரன் தேட
முதுகு முள்ளந்தண்டிலே
முயற்சி உள்ளபோது...
இந்தக் காரென்ன
அந்தக் காலனே வந்தாலும் கூட
இவர்களின் கால் தூசுக்கு
சமானம்தான்!

தாராபுரம் நிலாம்- பாலாவி.

### சுமைகள்!...

கார்ச் சுமையை;
இழுக்கிறார்கள்...
யாரும் சொல்லுவார்-
பிரமாதம்!
வாழ்க்கைச் சுமையை;
இழுக்கிறோம்...
யார் சொல்லுவார்-
அனுதாபம்?!

கோட்டை முனை
முத்துமணி- வாஹிட்
குத்தூஸ், பதுளை.

### இது தான் உலகம்!

கற்பின் பெருமையால்!
மதுரையை எரித்தாள்
அன்றைய கண்ணகி!
கணனியுகத்தினில்...!
கார் கூந்தலால்...!
மனதில் உறுதிகொண்டு!
காரை இழுக்கின்றாள்,
இன்றைய கண்ணகி!

ஹப்புத்தளையூர்,
மனோ கோபாலன்.

### இதயச் சுமை

தரையில் தவழும்
வண்டிச் சுமையை
வலிந்திழுப்பது
எளிதிலும் எளிது
விண்ணைத் தொட்டுவிட்ட
வாழ்க்கைச் செலவை
இழுக்கும் போதுதான்
இதயம் வெடிக்கிறது.

அ.சந்தியாகோ- கண்டி.

### அவனின் மனமோ....

தன்னை வருத்தி
தனியனின் சாகசம்....
சபையோர் மகிழ்ந்திருக்க
அவனின் மனமோ
துயரிற்துடிக்கும்...,
வறுமை விரட்டும்
வழியும் தேடி
விழியும் கரையும்...!

சி.மதியழகன், திக்கம்.

### புதுமைப் பெண்?

பார்த்து இரசிப்பதற்கு - இது
சினிமா காட்சிகள் அல்ல
பாரதி கண்ட புதுமைப்
பெண்ணின்
வீர விளையாட்டுக்கள்!

எஸ். ஸ்ரீ, காரைதீவு-8.

### சாதனை

காரை கட்டியிழுக்கும்
கண்கொள்ளாக் காட்சியை
கன்னத்தில் கைவைத்து
கவரும் கன்னியர்களே
சாதனையை நிலைநாட்ட
துணிந்த இவள்- நாளை
சரித்திரம் படைக்கமாட்டாளா?

துரைராஜா பரிமளாதேவி-கலஹா.

### உண்மை உணர்

சாதனை புரிவதற்காய்
உயிரை பணயம் வைக்கும் உலகமே
"ஆ" என்றால் அரிசி வரலாம்
"பா" என்றால் பாடல் வரலாம்
"வா" என்றால் வாராது
இறந்த காலமும் போன உயிரும்.

பெ.விக்னேஸ்வரன், ஹட்டன்.

### பாடம்

உடல் வலிமையொடு
மனத்திடமும் கூடி
உறுதியாகச் செயற்பட
இயங்கா நிற்கும் காரியமும்
இசைவாய் நகரும் எளிதாக
நீ புகட்டும் பாடம் அதுவோ?

செல்வி கௌசிகா மகேந்திரன்-
உடுவில்.

## கவிதைப் போட்டி இல.487



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 30.11.2002

கவிதைப் போட்டி இல.487
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

# உங்கள் பக்கம்

## வன்முறைக் கலாசாரம்

வன்முறைக் கலாசாரமானது சர்வதேச மட்டத்தில் நன்கு வளர்ந்து வேரூன்றியதொரு விடயம்தான்!

ஆனால், இலங்கையில் போல வேறெந்தவொரு நாட்டிலும் அது அனைத்து துறைகளிலும் ஊடுருவியிருப்பதனைக் காணுதல் அரிதிலும் அரிது!

"இனங்களுக்கிடையேயான உறவு", "பாடசாலைகள் தொடக்கம் பல்கலைக் கழகம் வரையில் கற்கும் மாணவர்கள் மத்தியிலான முன்னேற்றம்", "சிறுவர், சிறுமிகள், பெண்கள் போன்றோரைப் பேணவேண்டிய கடமைப்பாடு", "அரசியல் கட்சிகள் தொடக்கம் பாராளுமன்றம் வரையில் அமைய வேண்டிய மக்கள் சேவை" என்கின்ற அனைத்து துறைகளிலும் வன்முறை அரசோச்சுகின்றது!

இந்த வன்முறைகளைச் செய்பவர்கள் தம்மை மறைத்துக் கொண்டே காரியங்கள் ஆற்றுவர்.

ஆனால் பொதுப்படையாக இவர்கள் யார் எனின் அரசியல்வாதிகள், சட்டபூர்வமானதோ சட்டபூர்வ மற்றதோ மதுபானம், ஹீரோயின், கஞ்சா, அபின், போன்ற போதைப் பொருள் விநியோகஸ்தர்கள், விற்பனையாளர்கள் மற்றும் கள்ளச் சந்தை வியாபாரிகள், ஒப்பந்ததாரர்கள் என இப் பட்டியல் நீளும்....

இவர்கள் தமது காரியங்களைச் சாதிப்பதற்கு மறைமுகமாக நாடும் நபர்கள், ஆயத்த நிலையில் உள்ள சில குண்டர் கோஷ்டி மற்றும் பாதாள உலகத்தினர் ஆவர். இவை ஒப்பந்த அடிப்படையில் பணம் வழங்கி தூண்டிவிடப்படும் வன்முறைகளாகும். இப்படியாக தூண்டிவிடப்படும் வன்முறைகளே, "தனிநபர் கொலைகள்", வீடு, வியாபார ஸ்தலங்களுக்கு ஏற்படுத்தப்படும் சேதம் மற்றும் பெண்பாலாருக்கு இழைக்கப்படும் துரோகங்கள் ஆகும்.

இவற்றிற்கு அப்பால் பிரதானமாக அரசியல்வாதிகள் தமது அரசியல் நலன் கருதி பொதுமக்களை ஏமாற்றி வன்முறைகளுக்குத் தூபமிட்டு அவர்கள் மூலம் தமது நோக்கங்களை நிறைவேற்றுவர். இதனால் பொதுமக்கள் "காயங்களுக்கு உள்ளாகுதல்", "சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுதல்", "உயிராபத்துக்கு ஆளாகுதல்", "மற்றொரு குழுவினரின் அல்லது சமுதாயத்தின் எதிர்ப்புக்களுக்கு இலக்காகுதல்" ஆகிய அவலங்களுக்கு முகம் கொடுக்க நேரிடும்.

இப்படியான வன்முறைச் சம்பவங்கள் அதிக அளவில் தூண்டப்படும் இடங்களாக அடையாளம் காணப்படக் கூடியன, 'ஹர்த்தால்', 'பந்த்', 'துக்கதினம்', 'உண்ணாவிரதம்', 'சத்தியாக்கிரகம்', 'ஊர்வலம்', 'எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்', 'மறியல் போராட்டம்', போன்ற அஹிம்சை வழிமுறைப் போராட்ட நிகழ்வுகள் என்பதே மிக மிகக் கவலைக்குரிய விடயமாகும்.

இந்த ஏமாற்று வித்தைகளைப் புத்தி பூர்வமாக உணர்ந்து விலகி இருக்கும் பொதுமக்களைத் தவிர, உணர்ச்சிக்கு இடம் கொடுத்துத் தொல்லைகளுக்குத் தம்மை ஆளாக்கிக் கொள்ளும்- முக்கியமாக இளைஞர்கள்- விழிப்படைவது அவசியமாகும்!

ஜெயகாந்தி மாஸ்ரர்-திருகோணமலை.



தங்கத் தமிழ் முரசே, எம் மக்களின் நலன் பேணும் நல்லதோர் சேவையை நீ செய்கிறாய். முரசே! நீ தங்கத்தை விடவும் தரமானதாக எம்மிடத்தே தவழ்கிறாய். எம் மனதை கொள்ளை கொண்ட இன்ப முரசே, உனது ஒவ்வொரு கட்டுரையும் எம்மை மெய் சிலிர்க்க வைக்கின்றது.

மலையக மக்களையும் மக்களாக நினைத்து நீ சுமந்துவரும் ஒவ்வொரு ஆக்கமும் எம்மை சந்தோசத்தில் ஆழ்த்துகிறது, எம் மக்களின் குறை, நிறைகளைத் தீர்க்க நீ ஒருவனே போதும். ஆண்டாண்டு காலம் அடிமைகளாக உள்ள எம் சமுதாயத்தினை, அரசியல்வாதிகள் அன்பு வார்த்தை பேசி அரவணைப்பது போல் பாசாங்கு செய்வது தேர்தல் காலத்தில் மட்டுமே. பின் நடப்பவையோ கேளிக்கையானவை. அமைச்சுப் பதவிக்கும், நாற்காலிக்கும் அடித்துக் கொண்டு எம் மக்களைத் தாரை வார்க்கும் தனவந்தர்களாகின்றனர். இவற்றுக்கெல்லாம் விடை காண, விடிவினை ஏற்படுத்த ஓர் உத்தமனை உருவாக்குவது உன் கையில்.

முரசே நீ பல்லாயிரத்தாண்டுகள் வீர முரசாய்த் திகழ எனது இனிய வாழ்த்துக்கள். வாழ்க முரசு! வளர்க தமிழ்ச் சமூகம்.

த.மோகன்.

# வாசக[ர்] சாலை

"சமூகத்தின் குறைநிறைகளை வெளிக்காட்டுவதில் முரசுக்கு நிகர் முரசுதான். இவ்வார முரசில் குறிப்பிட்டு இருந்ததைப் போன்று எமது பகுதிக் கூட்டுறவுச் சங்கக் கடைகள் மூலமாக இடம் பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்படுகின்ற வெள்ளைப் பச்சை அரிசியானது வண்டுகள் நிறைந்து மிகவும் தரமற்றதாகவும் சாப்பிட முடியாமலும் இருக்கின்றது- இந்த அரிசியானது "உலக உணவு" திட்டத்தினால் வழங்கப்படவில்லை என்றால், இதனை இடம் பெயர்ந்த மக்களுக்கு வழங்குவதற்கு அனுமதி கொடுத்தவர் யார் என்பதை முரசு தான் எமக்கு வெளிக்காட்டவேண்டும்."

சி. பேரின்பராசா, நிலாவெளி.

என் இதயங்கவர் தினமுரசே!
நீ தாங்கி வரும் அனைத்து
விடயங்களும் வெகு பிரமாதம்.
அதிலும் குறிப்பாகக் கவிதைப்
போட்டி எம் போன்ற இளம்
தலைமுறையினருக்கு ஒரு
பயிற்சியாகவே அமைந்துள்ளது.
ஏனினும் அதற்காகத் தரப்படும்
புகைப்படம் இதை விட சற்றுத்
தெளிவாக இருந்தால் நன்றாக
இருக்கும் என்பதே எனது
அபிப்பிராயம். அனைத்து
விடயங்களையும் நாட்டுக்கு அறியத்
தரும் முரசே! உனது பணி
தொடர என் வாழ்த்துக்கள்
பலகோடி.

ஷர்மிலா காதர், திக்குவல்லை.

முரசு 482 இன் முகப்பு நன்றாக இருந்தது. மன்னாதிமன்னனின் தொடர்கதை தொடர என் வாழ்த்துக்கள். முரசுக்கு நாம் தகவல் அனுப்பினால் பிரசுரிப்பீர்களா? நல்ல தொடர்கதையை தொடங்குவீர்களா? அரசாட்சி, இராணுவ ஆட்சி போன்ற தொடர்கதைகளாயின் மிக நன்றாக இருக்கும். வளர்ந்து வரும் முரசு தனது ஐந்தாவது சதத்தைப் பெற என் வாழ்த்துக்கள்.

எஸ்.நிதிபன், யாழ்ப்பாணம்.

## அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தாலோ, உங்கள் முகவரிடம் திருப்பிக் கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாகச் சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்பவேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):-074-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@dialogsl.net
edmurasu@dialogsl.net

# ஹக்கீமின் தலைமைக்கு கிழக்கு எம்.பி.க்கள் நேரடி சவால்

கிழக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர் றவூப் ஹக்கீமின் தற்போதைய கட்சித் தலைமைக்கு நேரடியாகச் சவால் விடுத்துள்ளனர்.

முஸ்லிம் காங்கிரஸில் உள்ள 12 பாராளுமன்ற உறுப்பினர்களும் தற்போது குறைந்த பட்சம் 3 பிரிவுகளாகச் செயற்படுவதாக அந்தக் கட்சி வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது.

அமைச்சர் ஹக்கீமுடன் ஒரு சிலரும் அதாவுல்லாவின் தலைமையில் வேறு சிலரும் மீதமுள்ளோர் இவ்விரு தலைமைகளையும் நிராகரிக்கும் போக்கிலும் உள்ளனர்.

கடந்த சனிக்கிழமையன்று பாராளுமன்றத்தில் நடைபெற்ற கிழக்குப் பிராந்திய அபிவிருத்தி தொடர்பான கூட்டத்தின் போது பலத்த வாக்குவாதம் இடம்பெற்றதுடன் சில எம்.பி.க்கள் கூட்டத்தை விட்டு இடைநடுவில் எழுந்து சென்றனர்.

இந்தக் கூட்டத்தின் போது கிழக்கு மாகாண அபிவிருத்தி குறித்துப் பேச அமைச்சர் றவூப் ஹக்கீமுக்கு அருகதை கிடையாதென அந்தப் பிரதேசத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் எம்.பி.க்கள் காரசாரமாகச் சுட்டிக் காட்டினர்.

பாராளுமன்றப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வந்த எம்.பி.க்கள் குறைந்த பட்சம் 3 பேர் மீண்டும் றவூப் ஹக்கீமுடன் கருத்தொருமிப்புக்கு வர முயற்சி செய்துவருவதாகவும் முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதாவுல்லா கட்சியின் யாப்பைத் திருத்தித் தமக்கு இணைத் தலைமை வழங்கப்பட வேண்டுமெனக் கோரியதையடுத்து இந்தப் புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது. எவ்வாறெனினும் முஸ்லிம் காங்கிரஸிற்குள் நிலவும் உட்கட்சிப் பூசல் தணிந்துவிட்டதெனக் காண்பிக்க ஹக்கீம் சார்பில் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## தீவுப் பகுதியை விட்டு புலிகள் வெளியேறினால்
## ஈ.பி.டி.பி.யும் வெளியேறத் தயார்
## -கண்காணிப்புக் குழுவிடம் தெரிவிப்பு

யாழ் குடாநாட்டின் நெடுந்தீவுப் பகுதியிலிருந்து ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினரை வெளியேறுமாறு கோரி புலிகளால் நடத்தப்படும் ஆர்ப்பாட்டங்களுக்கான மக்கள் பங்களிப்புக் குறைந்து வருவதால் மன்னார் உட்பட சில வெளியிடங்களில் இருந்து தமது ஆதரவாளர்களை நெடுந்தீவுக்கு அழைத்துவரப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் பிரிவு உறுப்பினர்கள் முயற்சிகள் மேற்கொண்டு வருவதாகத் தெரியவருகிறது.

கடந்த சனிக்கிழமை அன்று ஈ.பி.டி.பி.யினர் நெடுந்தீவில் சென்று இறங்கியதும் தமக்கு ஆதரவான சிலரைத் திரட்டி புலிகளால் நடத்தப்பட்ட மறியல் போராட்டம் பலனளிக்காத நிலையில் ஈ.பி.டி.பி.யை அங்கிருந்து வெளியேற்றும் முயற்சி தடைப்பட்டுள்ளது.

ஈ.பி.டி.பி.யின் அலுவலகத்தைச் சுற்றி மக்களைத் தொடர்ச்சியாக நிறுத்தி வைக்க முடியாமல் போனதால் தற்போது பஸ்களில் பயணம் செய்யும் மக்களை அவ்விடத்திற்குத் திடீரெனக் கொண்டுவந்து இறக்கி கோசங்களை எழுப்பி மறியல் போராட்டத்தில் ஈடுபடுமாறு கேட்கப்படுகிறார்கள்.

எத்தகைய எதிர்ப்பு வந்தபோதிலும் நெடுந்தீவில் தமது அரசியல் பணிகளை தொடர போவதாக ஈ.பி.டி.பி. அறிவித்துள்ளது. சுமார் ஒரு தசாப்த காலமாகத் தீவுப் பகுதி மக்கள் தமது கட்சியுடன் நல்லுறவைப் பேணிவந்ததாகவும் புலிகளின் அரசியல் பிரவேசத்தின் பின்னர் புலிகள் தமது ஆதரவாளர்கள் சிலரைத் தூண்டிவிட்டு தீவுப்பகுதி அரசியல் நடவடிக்கைகளிலிருந்து ஈ.பி.டி.பி.யை ஓரங்கட்ட முயற்சியை மேற்கொண்டு வருவதாகவும் அந்தக் கட்சியின் செயலாளர்நாயகம் பாராளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா குற்றஞ்சாட்டியுள்ளார்.

எவ்வாறெனினும் தீவுப்பகுதியை விட்டு வெளியேறுமாறு சர்வதேச போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு விடுத்த வேண்டுகோளை ஈ.பி.டி.பி. திட்டவட்டமாக நிராகரித்துள்ளதுடன் அவ்வாறாயின் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு இது விடயத்தில் சுமுகமான தீர்வு காணப்படும் வரை புலிகளும், தீவுப் பகுதியை விட்டு வெளியேற வேண்டுமெனக் கேட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஈ.பி.டி.பி. வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு உண்மையான நிலைமைகளைத் தெளிவுபடுத்தி வருகிறது.

## ஒஸ்லோ மாநாட்டில் இந்தியா பங்கேற்காது?

நோர்வேயின் தலைநகரமான ஒஸ்லோவில் எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெறவிருக்கும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் உயர்மட்ட மாநாட்டில் இந்திய அரசாங்கத்தின் பிரதிநிதிகள் கலந்து கொள்ள மாட்டார்களெனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவின் சார்பில் இந்த மாநாட்டில் பிரதிநிதி ஒருவரைக் கலந்துகொள்ளச் செய்ய இலங்கை அரசாங்கமும் நோர்வேயும் பலத்த இராஜதந்திர முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

இதற்கென அமைச்சர் மிலிந்த மொறகொட மற்றும் நோர்வே அரசின் உயர்அதிகாரிகள் பலர் இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்டு உப ஜனாதிபதி எல்.கே. அத்வானி, வெளியுறவு அமைச்சர் ஜஸ்வன் சிங்கா உட்பட இந்தியத் தலைவர்கள் பலரையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

நோர்வேக்கான இந்தியத் தூதுவர் கோபாலகிருஷ்ண காந்தி தலைமையிலான குழு ஒன்று ஒஸ்லோ மாநாட்டில் பங்கேற்குமென முன்னதாகச் செய்திகள் வெளியாகியுள்ள போதிலும், இந்திய அதிகாரிகள் எவரும் இதில் கலந்து கொள்ளமாட்டார்களென இராஜதந்திர வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

## பொங்கித் தணிந்த அமைச்சர் ஆறுமுகன்

மலையகத்தில் உள்ள தொழிற் பயிற்சி நிலையம் ஒன்றிற்கான அதிபர் நியமனம் தொடர்பில் அமைச்சர் சந்திரசேகரனுடன் ஏற்பட்ட கருத்து மோதலால் இந்தப் பிரச்சனையை உடனடியாக தீர்க்காத பட்சத்தில் அரசாங்கத்திற்கு வழங்கும் ஆதரவை விலக்கிக் கொள்ளப்போவதாகக் கடந்த வாரம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்குக் கடிதம் எழுதிய அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் பின்னர் தனது முடிவை மாற்றிக் கொண்டுள்ளார்.

இந்தத் தொழிற் பயிற்சி நிலையத்தின் அதிபர் பதவிக்கு சாதாரண பாடசாலை அதிபர் ஒருவர் அமைச்சர் சந்திரசேகரனின் சிபார்சின் பேரில் நியமிக்கப்பட்டிருக்கிறார். இவரைப் பதவி விலக்குமாறு ஆறுமுகன் தொண்டமான் பலமுறை வலியுறுத்திக் கூறியும் அது நடைபெறவில்லை. வேறு சிலரின் உயர் பதவிகளுக்கான நியமனங்கள் தொடர்பிலும் ஆறுமுகனுக்கு அரசாங்கத்துடன் கருத்து முரண்பாடு இருந்து வந்தது. இதனால் இந்தப் பிரச்சனைகளுக்கு உடனடியாக உரிய பதில் தராவிடின் வரவு செலவுத் திட்டத்தின் போது அரசாங்கத்திற்கு எதிராகத் தமது கட்சி வாக்களிக்கும் எனக் கூறி, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆறுமுகன் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். இந்தக் கடிதம் பிரதமருக்குக் கிடைத்தபோது அவர் அரசாங்க ஊடகங்களின் தலைவர்கள் கலந்து கொண்ட கூட்டம் ஒன்றில் இருந்தார்.

கடிதத்தைக் கண்டதும் ஆத்திரமடைந்த ரணில் விக்கிரமசிங்க ஆறுமுகனின் இந்தக் கோரிக்கைகளைத் தான் ஒருபோதும் வழங்கப் போவதில்லை என கூட்டத்தினர் மத்தியில் கோபாவேசத்துடன் கூறியதோடு விரும்பியவர்களுக்கு அரசாங்கத்தை அமைக்க சொல்லிவிட்டு தான் எதிர்க்கட்சி ஆசனத்தில் போய் அமரப் போவதாக எரிச்சலுடன் கூறினார்.

எவ்வாறெனினும் பின்னர் ஆறுமுகனின் பிரச்சனைகள் தொடர்பாக அவருடன் பேச்சுவார்த்தை நடத்துமாறு உயர்கல்வி அமைச்சர் கபீர் ஹாஷிம் பிரதமரினால் பணிக்கப்பட்டார். இறுதியில் வரவு செலவுத் திட்டம் மீதான வாக்கெடுப்பு நடைபெறுவதற்கு இரண்டு மணித்தியாலங்கள் முன்னதாக ஆறுமுகன் அமைதியாக்கப்பட்டார்.

முஸ்லிம் காங்கிரஸின் ஒரு குழுவினரால் மேற்கொள்ளப்பட்டு வந்த பாராளுமன்றப் பகிஷ்கரிப்பு முடிவடைந்த அதே தினத்தில் ஆறுமுகன் தொண்டமான் தனது எச்சரிக்கைக் கடிதத்தை பிரதமருக்கு அனுப்பியிருந்தமை குறிப்பிடத் தக்கது.

## சமாதான முயற்சிகள் புலிகளின் திசையில்
## சரியாகச் செல்கிறது -பொ.ஐ.மு.

தற்போதைய சமாதான முயற்சிகள் சரியான திசையில் செல்வதாக நோர்வே ஏற்பாட்டாளர்கள் கூறுகின்ற போதிலும், பேச்சுக்கள் புலிகள் திசையில் சரியாகச் செல்கிறது என பொ.ஐ.மு. சமாதான நடவடிக்கைகளை விமர்சித்துள்ளது.

பொ.ஐ.மு.வினால் இது தொடர்பாகக் கடந்த வாரம் 7 பக்க அறிக்கையொன்று வெளியிடப்பட்டது. அந்த அறிக்கையில் பேச்சுக்களில் அந்தக் கட்சியினால், உணரப்பட்ட 3 முக்கிய குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

அதன்படி புலிகள், தமது நீதிமன்றங்கள், பொலிஸ் நிலையங்கள் போன்றவற்றை அமைப்பது பிரிவினைக்கு வழி வகுக்குமெனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நோர்வே ஏற்பாட்டாளர்கள் பக்கசார்பாகச் செயற்படுவதாகவும் எதிர்க்கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகள் ஒருபுறம் பயங்கரவாதத்திற்கு எதிரான போரெனச் செயலாற்றிவரும் அதேவேளை, இலங்கை விவகாரத்தில் பயங்கரவாதத்திற்கு மகுடம் சூட்ட முனைவதாகவும் அது தெரிவித்துள்ளது.

## எச்சரிக்கைக் கடிதங்கள்

எதிர்வரும் 25 ம் திகதி முதல் 27 ம் திகதி வரை அனுஷ்டிக்கப்படவிருக்கும் புலிகளின் மாவீரர் தின நிகழ்வுகளில் கலந்துகொள்ள வேண்டாமென திருகோணமலை அரச ஊழியர்கள் சிலருக்கு எச்சரிக்கைக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் எனத் தங்களை அடையாளப்படுத்திக் கொள்ளும் சிலரினால் இந்தக் கடிதங்கள் அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. ஆசிரியர்கள், கிராம சேவகர்கள் எனப் பல்வேறு தரத்திலுமுள்ள அரச ஊழியர்களுக்கு இந்தக் கடிதங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இம்முறை மாவீரர் தினக் கொண்டாட்டங்களின் முக்கிய நிகழ்வுகள் திருகோணமலையில் நடைபெற இருப்பது குறிப்பிடத் தக்கது.

## மாளிகாவத்தை வன்செயல்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு
## நட்டஈடு கிடைக்கும் சாத்தியமில்லை

கடந்த மாதம் பிற்பகுதியில் கொழும்பு மாளிகாவத்தைப் பிரதேசத்தில் ஏற்பட்ட இன வன்முறையின் போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு நட்டஈடு வழங்குவதாக அரசாங்கம் உறுதியளித்திருந்த போதிலும் தமது வீடு வாசல்களை இழந்து, பொது இடங்களில் தஞ்சமடைந்தவர்களுக்கேனும் எவ்வித நிவாரண உதவியும் அரசாங்கத்திடமிருந்து இதுவரை கிடைக்கவில்லை எனத் தெரியவருகிறது.

மாளிகாவத்தை வன்முறைகளின் போது போதிராஜ மாவத்தைப் பகுதியில் வசிக்கும் 333 குடும்பங்கள் பாதிக்கப்பட்டன. இதில் 118 வீடுகள் மீண்டும் குடியிருக்க முடியாதளவு சேதமாக்கப்பட்டதுடன் இந்த வீடுகளிலிருந்த ஒட்டுமொத்த உடைமைகளும் கொள்ளையடிக்கப்பட்டன, இதனையடுத்து இவற்றில் வசித்த குடும்பத்தினர் அயலிலுள்ள தர்ம ஸ்தாபன கட்டடங்களில் தஞ்சம் புகுந்தனர். இவர்களில் சிலருக்குத் தமது இருப்பிடங்களை மீளமைத்துக் கொள்வதற்கென பிரதேசத்தில் செயற்படும் சில பொது அமைப்புக்கள் குறைந்தளவு உதவிகளைச் செய்துள்ளன. ஆனால் பெருமளவிலான சொத்துக்களை இழந்த மக்களுக்கு அரசாங்கத்திடமிருந்து எவ்வித நிவாரணமும் இதுவரை கிடைக்கவில்லை எனப் பாதிக்கப்பட்டவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

## சிஹல உறுமய புகார்

புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட 200 ஆண்டு சிறைத் தண்டனையை எதிர்த்து யாழ்ப்பாணத்திலும் வேறு சில இடங்களிலும் நடத்தப்பட்ட ஊர்வலங்களை கொழும்பிலிருந்து வெளிவரும் சில பத்திரிகைகள் புகைப்படங்களுடன் பிரசுரித்ததன் மூலம் நீதிமன்றத்தை அவமதித்ததாக அந்தப் பத்திரிகைகளுக்கு எதிராக வழக்குத் தொடருமாறு கோரி சிஹல உறுமயக் கட்சியின் ஊடகச் செயலாளர் சுகத் கம்மன்பில பொலிஸ் தலைமையகத்தில் புகார் செய்திருக்கிறார்.

இதற்கிடையில் செவ்வாயன்று அம்பாறை மாவட்டத்திலும் பிரபாகரன் மீதான தண்டனையை ஆட்சேபித்து ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது. இதில் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

## மதுரங்குளியில் முஸ்லிம்களுக்குப் பெருமளவு சேதம்

புத்தளம் மதுரங்குளிப் பகுதியில், ஆட்டோ நிறுத்தும் இடம் தொடர்பாக இரு இனங்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலால் முஸ்லிம்களுக்குச் சொந்தமான பல வியாபார ஸ்தலங்களும், வாகனங்களும் சேதமாக்கப்பட்டுள்ளன.

கடந்த இரண்டு நாட்களாக அந்தப் பகுதியில் நிலவிய பதற்றம் தற்போது தணிந்திருப்பதாக முந்தல் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தனிப்பட்ட இருவருக்கிடையில் ஏற்பட்ட வாக்குவாதம் கடந்த வாரம் இன மோதலாக வெடித்தது. இதனால் புத்தளம் கொழும்பு வீதியில் போக்குவரத்து தடைப்பட்டிருந்ததுடன் மேலதிகப் பொலிஸாரும், படையினரும் குவிக்கப்பட்டிருந்தனர். சம்பவத்தில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான பல இலட்சம் ரூபாய் பெறுமதியான உடைமைகள் சேதமாக்கப்பட்டிருக்கின்றன.

# முரசம்

## ஒஸ்லோ மாநாடும் இந்தியாவின் முக்கியத்துவமும்

*அன்புள்ள உங்களுக்கு,*
*வணக்கம்.*

இலங்கையின் இனப்பிரச்சனைக்கு மத்தியில் பாரிய யுத்தம் நிகழ்ந்து வந்த நிலையில், இலங்கைக்கான நிதி வழங்கும் நாடுகளின் உதவிகள் படிப்படியாகக் குறைந்து வந்ததையே இது வரை அவதானிக்க முடிந்தது.

முன்னர், அரசாங்கத்திற்கு நேரடியாக நிதி உதவி வழங்கிய நாடுகள், அவ்வுதவிகள் பாரபட்சமாகப் பயன்படுத்தப்பட்டன என்ற ஐயப்பாட்டினால், தமது வழிமுறைகளை மாற்றி நேரடியாக ஒரு பகுதியை மட்டுமே வழங்கி மீதியைத் தமது அனுசரணையில் இயங்கும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாக, பல மனிதாபிமான வேலைத் திட்டங்கள் மூலம் முன்னெடுத்துச் செல்ல விளைந்துள்ளன.

தற்போது, இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் உச்சி மாநாடு இம் மாதம் 25ஆம் திகதி ஒஸ்லோவில் நிகழ்கிறது.

500 மில்லியன் டொலர்கள் வரை இம் மாநாட்டில் நிதியுதவி எதிர்பார்க்கப்பட்ட போதும், குறைந்த பட்சம் 400 மில்லியன் டொலர்களாவது கிடைக்குமெனப் பிரதமர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். புலிகள் இம் மாநாட்டில் பங்குபற்றுவது என்பது இத்தகைய அதிகரித்த நிதியுதவியினை ஈட்டுவதற்கான காரணமாக உணரப்படுகிறது.

அதாவது, யுத்தத்தில் ஈடுபட்டிருந்த தரப்பினரான புலிகள் தாம் யுத்தத்தைக் கைவிட்டு இலங்கையை வளப்படுத்துவதற்கானதும், அழிவுகளைப் புனர்நிர்மாணம் செய்வதற்கானதுமான முயற்சிகளில் ஒத்துழைக்கத் தயார் என வெளிப்படுத்துவதாகவே அவர்களின் பங்குபற்றல் உதவி வழங்கும் நாடுகளால் பொருள் கொள்ளப்படுகிறது.
ஆயினும், புலிகளைப் பொறுத்தவரை வடக்கு-கிழக்கு யுத்தத்திற்கான புனர்நிர்மாணப் பணிகளில் தமது பிடிமானத்தை வலியுறுத்துவதாகவே இது அமைகிறது.

எவ்வாறாயினும், இம் மாநாட்டில் இலங்கையின் அண்டை நாடான இந்தியாவின் பங்களிப்பு அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தது.
தமது நாட்டில் தடை செய்யப்பட்ட அமைப்பொன்றுடன் இன்னொரு நாட்டில் பேச்சுவார்த்தை நடத்துவதற்குத் தாம் தயார் இல்லை என்ற கொள்கையில் இந்தியா இந்த உச்சி மாநாட்டில் பங்குபற்றுவதற்கான அழைப்பை நிராகரித்துள்ளது.

எனினும் இந்தியாவைச் சாந்தப்படுத்தும் எத்தனங்கள் தொடர்ந்த வண்ணம் உள்ளன. எது எப்படியாயினும், இலங்கைப் பிரச்சனை தொடர்பாகப் பிரதானமான கட்டங்களில், இந்தியா உதாசீனப்படுத்த முடியாத ஒன்று என்பதை இச் சந்தர்ப்பத்தில் உணர்த்தியுள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணி தற்போது வெளியிட்டுள்ள அறிக்கையிலும் இந்தியாவின் முக்கியத்துவத்தை, மறைமுகமாகச் சுட்டிக் காட்டியுள்ளது.

சமாதான முயற்சியில் இறங்கியுள்ளவர்கள் இந்தியா தொடர்பாக எவ்வாறான அணுகுமுறையைக் கைக்கொள்ளப் போகிறார்கள் என்பதையிட்டே அதன் வெற்றியும் தங்கியுள்ளது.

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை*

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# புலிகளின் விட்டுக் கொடுப்பு எதுவரை?

நரன்

இலங்கையைப் பொறுத்தவரை பரபரப்புடனும், மிகுந்த எதிர்பார்ப்புடனும் நோக்கப்படுகின்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் உச்சி மாநாடு இம் மாதம் 25ஆம் திகதி நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் நிகழவுள்ளது.

இங்கு புதினமாகவும், வியப்பாகவும் நோக்கப்படும் விடயம் என்னவென்றால் இலங்கையில் தனிநாடு கோரி இலங்கை அரசுக்கெதிராகப் பிரிவினைப் போராட்டம் நிகழ்த்திய புலிகளின் உயர்மட்டப் பிரதிநிதிகளும் இப் பேச்சுவார்த்தையில், அரசாங்கத்தின் கூட்டாளிகளாகப் பங்குபற்றுவதுதான்.

இதில் ஆச்சரியந்தரத்தக்க முரண்நிலையாக இருக்கும் மற்றொரு விடயம் என்னவென்றால், இதே புலிகள் அமைப்பைத் தத்தம் நாடுகளில் பயங்கரவாத அமைப்புகள் என்று கூறித் தடைசெய்து,அவர்களின் பல கோடிக் கணக்கான வங்கிக் கணக்குகளை முடக்கி வைத்துள்ள நாடுகளான அமெரிக்கா,பிரிட்டன் போன்ற நாடுகளும் இப் பேச்சுவார்த்தையில் புலிகளுடன் கலந்துரையாடி அவர்களது சிபாரிசுடன் கோரப்படும் - பெரும்பாலும் அவர்களால் நடைமுறையில் செயற்படுத்தப்படும் - திட்டங்களுக்கு நிதி வழங்க வேண்டி ஆகியுள்ளதுதான்.

இதையேதான் இந்தியா நையாண்டித்தனமாக விமர்சித்து "நாம் எமது நாட்டில் தடைசெய்துவிட்டு, இன்னொரு நாட்டில் போய் அவர்களுடன் பேசப் போவதில்லை" என்று கூறியுள்ளது.

இலங்கை,நோர்வே அரசாங்கங்களின் உயர் மட்ட வேண்டுகோள்களுக்கு மத்தியிலும் இந்தியா, இம் மாநாட்டில் பங்குபற்றப் பிடிவாதமாக மறுத்து விட்டது.

இவ் வகையில் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த விவகாரத்தின் இறுதி விளைவு என்னவாக அமையப் போகிறது என நாம் எதிர்நோக்கியிருக்கும் வேளையில், இச் சமாதான முயற்சிகளின் போக்குத் தொடர்பாக இலங்கை அரசின் அதிஉயர்பீடமான ஜனாதிபதியின் கருத்தும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது.

அவரது கட்சியான பொதுஜன ஐக்கிய முன்னணி, சமாதான முயற்சிகளின் இன்றைய நிலைமை தொடர்பாக வெளியிட்டிருந்த 7 பக்க அறிக்கை மிகக் காரசாரமானதாக அமைந்திருந்தது.

அதில், விடயங்கள் புலிகளுக்குச் சாதகமான திசைவழியிலேயே இட்டுச் செல்லப்படுவதாகவும், பிரிவினைக்கான பாரிய ஆபத்தான சூழ்நிலையை உருவாக்கி வருவதாகவும், ஏற்பாட்டாளராகச் செயற்பட வந்த நோர்வே, புலிகளுக்குச் சார்பாக செயற்படுவதாகவும், உலகளாவிய ரீதியில் பயங்கரவாதத்தை முறியடிக்க வேண்டும் என்று பிரகடனப்படுத்தி அதனடிப்படையில் புலிகளையும் தடைசெய்துள்ள அமெரிக்கா, பிரித்தானியா ஆகிய நாடுகள் அதற்கு மாறாகப் பயங்கரவாதத்திற்குப் பரிசளிக்கும் வகையிலேயே செயற்படுகின்றன எனவும் விமர்சிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை முஸ்லிம் தரப்பினரும், தமிழ்த் தரப்பினரிடையேயுள்ள மாற்றுக் கருத்துக் கொண்ட கட்சிகளும் இது விடயத்தில் அதிருப்திகளைக் கொண்டுள்ளன.

அத்துடன் மலையகத் தமிழர்களிடையேயும் தமது பிரச்சனைகள் இங்கே எடுத்து ஆராயப்படவில்லை என்ற ஆதங்கமும் உண்டு.

இவை யாவும் தற்போதைய சவாலான முன்னெடுப்புகளின் போக்குக்குப் பாரிய எதிர்ப்பாக எழாவிட்டாலும் இப் போக்கின் அடுத்தடுத்த திருப்பங்களினால் ஏற்படக்கூடிய இறுகல் நிலையில் இம் மூன்று தரப்பினரின் நியாயங்கள் விஸ்வரூபமடையலாம்.

இதேவேளை, புலிகளின் பிரதானமான எழுச்சித் தினமான மாவீரர் தினம் - நவம்பர் 27- நெருங்கி வருகிறது.

இத் தினமே புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மாவீரர் தின உரை ஆற்றப்படும் தினம், புலிகளின் எண்ணப்பாடுகள் வெளிப்படுத்தப்படும் தினம்.

இம்முறை மாவீரர் தின உரையில் பேச்சுவார்த்தைகளின், பெறுபேறுகள் பற்றிப் புலிகள் தலைவரின் திருப்தி, அதிருப்தி என்பன எவ்வாறு வெளிப்படுகிறது என்பது சகலரும் எதிர்பார்க்கும் விடயமாகும்.

புலிகள் தலைவர் மீது இலங்கையின் உயர் நீதிமன்றம் 200 வருடக் கடூழியச் சிறைத்தண்டனை வழங்கித் தீர்ப்பளித்ததானது அவருக்கு எத்தகைய விசனத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை இவ்வுரையில் யாவரும் எதிர்பார்த்திருக்கிறார்கள்.

இவ்வுரை சமாதானப் பேச்சுவார்த்தையின் தலைவிதியையும் தீர்மானிக்கும் தாற்பரியத்தைக் கொண்டது.

புலிகளைப் பொறுத்தவரையில் இம்முறை மிக வித்தியாசமான வகையில் இச் சமாதான முயற்சிகளில் நடந்து கொள்வதை யாவரும் அவதானித்துள்ளார்கள்.

சிறிய விடயங்களுக்கும் உணர்ச்சிவசப்பட்டுப் பேச்சுவார்த்தையை முறித்துக் கொள்ளாமல், பல்வேறு பாரிய சிக்கல்களை எதிர்கொண்டபோதும் அவற்றைத் தாண்டிச் சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்ல வழிவிட்டுக் கொடுத்துள்ளார்.

இப் பேச்சுவார்த்தை முயற்சியானது ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஆட்சிக்கு வர முன்னரே புலிகளுக்கும் ஐ.தே.க.வுக்குமிடையே ஏற்பாடாகியிருந்தது.

ஐ.தே.கட்சி சார்பில் புலிகளுக்குப் பல உத்தரவாதங்களை வழங்கியிருந்ததாகவும் அறியப்படுகிறது.

இவ் வகையில் புலிகளுக்குக் குறைந்தது இரண்டு வருட காலத்திற்காவது இடைக்கால நிர்வாக சபையை வழங்குவதாக, உறுதியளிக்கப்பட்டிருந்தது.

இதை நம்பியே புலிகள் தலைவர் பிரபாகரன் நடத்திய பத்திரிகையாளர் மகாநாடு முதல் புலிகள் தாம் இடைக்கால நிர்வாகத்தை பொறுப்பேற்போம் என்பதை உறுதியாகக் கூறிவந்தனர்.

புலிகளுக்கும், அரசாங்கத்திற்கும் இடையில் தாய்லாந்தில் நிகழ்ந்த முதலாவது பேச்சுவார்த்தைக்குப் பின் பத்திரிகைப் பேட்டிகளிலும், அன்டன் பாலசிங்கம் இடைக்கால நிர்வாக சபையைப் புலிகள் பொறுப்பேற்பர் என்பதை வலியுறுத்தியிருந்தார்.

ஆயினும் தற்போதைய நிலையில் இந்த உத்தரவாதத்தை அமுலாக்கக்கூடிய நிலையில் அரசாங்கம் இல்லை.

> **இதில் ஆச்சரியந்தரத்தக்க முரண் நிலையாக இருக்கும் மற்றொரு விடயம் என்னவென்றால், இதே புலிகள் அமைப்பைத் தத்தம் நாடுகளில் பயங்கரவாத அமைப்புகள் என்று கூறித் தடைசெய்து, அவர்களின் வங்கிக் கணக்குகளை முடக்கி வைத்துள்ள நாடுகளான அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளும் இப் பேச்சுவார்த்தையில் புலிகளின் திட்டங்களுக்கு நிதி வழங்க வேண்டி ஆகியுள்ளதுதான்.**

இதனால், புலிகள் ஏமாற்றத்துக்கு உள்ளாக்கப்பட்ட நிலையிலும் அதைச் சகித்துக் கொண்டு இடைக்கால நிர்வாக சபையைக் கைவிடுவதற்கும் கடந்த பேச்சுவார்த்தையில் முன்வந்திருந்தார்கள்.

இதே போல் கடந்த பேச்சுவார்த்தையின் போது பாலசிங்கம் தெரிவித்திருந்த மற்றொரு நம்பிக்கையும் சாத்தியமற்றதாகிவிட்டது.

அதாவது, ஜனாதிபதியின் அதிகாரச் சிறகுகளை வெட்டி , 19ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றி , தமக்குக் காத்திரமான உத்தரவாதங்களை வழங்கக்கூடிய உறுதியானதாக ஐ.தே.மு, அரசாங்கம் அடுத்த பேச்சுவார்த்தைக்கு வருமென அவரே எதிர்வு கூறியிருந்தார்.

ஆனால், மாறாக 19 ஆவது திருத்தச் சட்டம் தோல்வியடைந்த நிலையில், ஜனாதிபதியின் அதிகாரங்களை மீள உறுதிப்படுத்தி அதற்கு ஒரு உந்துசக்தியைக் கொடுத்துவிட்ட நிலையில் பலயீனமான, பாரிய விடயங்கள் எதையும் உத்தரவாதமளிக்க முடியாத அரசாங்கமாகவே அது அடுத்த பேச்சுவார்த்தைக்கு முகம்கொடுக்க நேர்ந்தது.

இந் நிலையில் இடைக்கால நிர்வாக சபையை மட்டுமல்ல, முன்னைய பேச்சுவார்த்தையில் முடிவு செய்யப்பட்ட ஒருங்கிணைந்த செயற்குழுக்களை அமைக்கக் கூடிய சட்டவலுவற்ற நிலையில், அவற்றையும் கைவிட வேண்டிய நிலை புலிகளுக்கு ஏற்பட்டது.

ஆனாலும், இவை குறித்துப் பேச்சுவார்த்தையைக் கைவிடாமல், மாற்று வழிகளை ஏற்படுத்திக்கொள்ளப் புலிகள், முன்வந்தனர்.

அதனால், ஒருங்கிணைந்த செயற்குழுக்களுக்குப் பதிலாகப் பேச்சுவார்த்தையின் உபகுழுக்களாக அவற்றை அமைப்பதில் இணக்கம் கண்டனர்.

இதேவேளை, புலிகளின் தலைவர் பிரபாகரன் மீது இலங்கை உயர்நீதிமன்றம் வழங்கிய இருநூறு வருடக் கடூழியச் சிறைத்தண்டனை என்ற தீர்ப்பையிட்டு, தம்மை அவமதித்துவிட்டதாகத் தமது எதிர்ப்பைத் தெரிவித்துக் கொண்டாலும் அதையிட்டுப் பேச்சுவார்த்தையை முறித்துக் கொள்ளவில்லை.

மாறாக நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் உச்சி மாநாட்டில் கலந்து கொண்டு இலங்கை அரசாங்கத்துடன் கூட்டாக நிதியுதவி கோரவும் முன்வந்தனர்.

இவ்வாறு பல்வேறு விடயங்களிலும் புலிகள் விட்டுக் கொடுத்து நெகிழ்வுடன் செயற்படுவது பலருக்கு ஆச்சரியமாகவும், அதேவேளை சிலருக்குச் சந்தேகத்துக்குரியதாகவும் உள்ளது.

எனினும் புலிகள் முன்னரும் இவ்வாறான நெகிழ்வுப் போக்குத் தன்மையை வெளிப்படுத்தியிருந்தனர்.

பிரேமதாசா காலத்தில் அவருடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளிலும், புலிகள் பாரிய நம்பிக்கைகளை வெளிப்படுத்தியிருந்தமையை இங்கு நினைவு கூரலாம்.

அப்போதும் பிரேமதாசா போன்ற தலைவர் எவருமில்லை என்று சிலாகித்துப் பத்திரிகை அறிக்கைகள் விட்டிருந்தனர்.

எனினும் பிரேமதாசாவுடனான பேச்சுவார்த்தைகள் திடீரென முறிந்து பாரிய யுத்தம் மீண்டும் வெடித்தது.

இவ்வாறான பேச்சுவார்த்தைகளில் என்ன பேசப்பட்டது என்பதும் எவருக்கும் வெளித் தெரியாது இருந்தது.

எனினும் அண்மையில் வெளியிடப்பட்ட அடேல் பாலசிங்கத்தின் (அன்ரன் பாலசிங்கத்தின் மனைவி) விடுதலை வேட்கை என்ற நூலில் பிரேமதாசா காலத்துப் பேச்சுவார்த்தைகள் முறிந்த விதம் பற்றி எழுதியுள்ளார்.

அதில் அவர், இடைக்கால நிர்வாகம் ஒன்றின் மூலம் மாகாண சபையின் ஆட்சிப் பொறுப்பைப் புலிகளிடம் கையளிக்கப் பிரேமதாசா முன்வந்திருந்தார் என்றும், எனினும் இதற்கு முன்னர் ஆயுதங்களைக் கையளிக்க வேண்டுமென்று கோரி அமைச்சர் ஏ.சி.எஸ். ஹமீதைத் தூதனுப்பியிருந்தார் என்றும், அப்போதுதான் பிரேமதாசாவின் கபட நோக்கம் தமக்குப் புரிந்ததாகவும் குறிப்பிட்டிருந்தார்.

இப்போது நடக்கும் பேச்சுவார்த்தைகளில் ஆயுதக் கையளிப்புப் பற்றிய விடயத்தையிட்டு, அரசாங்கம் இதுவரை மூச்சுவிடவில்லை.

எனினும், பேச்சுவார்த்தையில் இறுதித் தீர்வொன்றை எய்துவதாக இருந்தால், அவ்வாறான ஒரு கோரிக்கை தவிர்க்க முடியாது எழுப்பப்படவே செய்யும்.

புலிகளைப் பொறுத்தவரையில் தற்போது மேற்கொள்ளும் விட்டுக்கொடுப்புகள் உரிய பிரதிபலனைத் தராவிடின் நிலைமை இறுக்கமடையும்.

முக்கியமாக, நிகழவுள்ள ஒஸ்லோ மாநாட்டில், புலிகளுக்கு உயரிய கௌரவம் வழங்கப்படுவதுடன் அங்கு தீர்மானிக்கப்படும் நிதி உதவிகள், புலிகள் எதிர்பார்த்த வகையில் பயன்படுத்தக் கூடியதாக அமைய வேண்டும்.

அவ்வாறன்றி புலிகள் பேரளவில் மட்டுமே சம்பந்தப்பட்டு அந் நிதி உதவிகள் புலிகளால் பயன்படுத்த முடியாததாக அமையுமானால்,- அது புலிகளின் பேரில் இலங்கை அரசு நிதியுதவிகளைத் தட்டிக் கொண்டு சென்று விடுவதற்கு வழி வகுப்பதாக அமையுமானால் - புலிகள் விசனம் கொள்ளவே செய்வர்.

கடந்த பேச்சுவார்த்தையில் தீர்மானிக்கப்பட்டதற்கு அமைய, சென்ற சனிக்கிழமை முகமாலையில் நிகழ்ந்த உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பான புலிகள் - அரச படையினர் சந்திப்பு திருப்திகரமானதாக இல்லையெனப் புலிகள் ஏற்கெனவே விசனம் தெரிவித்துள்ளார் கள்.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் புலிகள் யுத்தநிறுத்தத்தை மீறும் வகையில் ஆயுதங்களுடன் நடமாடுவதாகப் படைத்தரப்பினர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

முஸ்லிம் தரப்பில், அமைச்சர் ஹக்கீமும், கிழக்கு மாகாணத்தில் புலிகளின் பொலிஸ் நிலையங்கள் விஸ்தரிக்கப்படுவது குறித்துப் பிரதமரிடம் முறைப்பட்டுள்ளார்.

இவற்றுக்கு மத்தியில், ஜனாதிபதியின் அழுத்தமும் சமாதானத் தீர்வொன்று காணும் வரையில் வடக்கு-கிழக்கில் படையினருக்கான கடப்பாடுகளை முதன்மைப்படுத்துவதாக உள்ளது.

இவ்வாறான புற நிலைமைகளில் புலிகளின் எதிர்பார்ப்புகளுக்கு அமைய விடயங்கள் முன்னேற்றமடையாவிட்டால் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கான புலிகளின் விட்டுக் கொடுப்புகள் அவர்களைப் பொறுத்தவரை பயனற்றவையாகிவிடும்.

ஆக, தம்மைச் சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் வன்முறையைக் கைவிட்டு ஜனநாயகப் பாதைக்கு வருவதற்கான உத்தரவாதத்தை வழங்க மட்டுமே நிர்ப்பந்தித்துவிட்டு, அதைவிட்டு மீற முடியாத இக்கட்டுக்குள் ஆழ்த்திவிட்டுக் காத்திரமான எந்தவொரு பெறுபேற்றையும் அடையாமல் ஏமாற்றிவிட்டதாகவே கருதுவார்கள்.

இதில் புலிகளின் இலாப நட்டக் கணக்கை மதிப்பிடுகின்ற முக்கியமான உரைகல்லாக எதிர்வரும் ஒஸ்லோ மாநாடே அமையப் போகிறது.

இதன் பின்னர்தான் புலிகளின் விட்டுக் கொடுப்புகள் எதுவரை தொடரும் என்பது வெளிச்சமாகும்.

# கிழக்கின் முஸ்லிம் குழுக்களுக்கு வெளிநாட்டில் ஆயுதப் பயிற்சி?

கிழக்கு மாகாணத்தில் நிலவி வரும் பதற்றமான சூழ்நிலையைத் தொடர்ந்து, முஸ்லிம்களுக்கு நியாயமான அரசியல் தீர்வொன்று வழங்கப்படாத பட்சத்தில் மற்றொரு ஆயுதப் போராட்டம் வெடிக்கலாம் என ஆய்வாளர்கள் முதல் அரசியல்வாதிகள் வரை எதிர்வு கூறிக்கொண்டிருக்க, கிழக்கில் உள்ள முஸ்லிம் அமைப்புக்கள் சில ஏற்கனவே வெளிநாடுகளில் ஆயுதப் பயிற்சி பெற்று ஆயுதம் தாங்கிய குழுக்களாகத் தங்களை ஸ்திரப்படுத்தி வருவதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

கிழக்கில் முஸ்லிம் அமைப்புக்கள் பல வெளிநாடுகளின் உதவியுடன் ஆயுதங்களைச் சேகரித்து வருவதாகவும், தமது அணிகளுக்கு ஆட்களைத் திரட்டி வருவதாகவும் அரசாங்கத்திற்கு வழங்கப்பட்டிருக்கும் இரகசிய அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆறு வெளிநாட்டு அடிப்படைவாத இயக்கங்களின் கீழ்ப் பயிற்சி பெற்ற நான்கு அமைப்புக்கள் கிழக்கு மாகாணத்தில் தற்போது ஆரம்ப நிலையில் செயற்பட்டு வருவதாக அரசாங்க உளவுப் பிரிவுகளால் தயாரிக்கப்பட்டிருக்கும் அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த இயக்கங்களுக்கு நிதி மற்றும் வெளிநாடுகளில் பயிற்சி வழங்க கொழும்பில் இருந்து செயற்படும் அரச சார்பற்ற நிறுவனங்கள் இரண்டு உதவியாகச் செயற்பட்டுள்ளன என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதாகச் செய்திகள் வெளியாகி உள்ளன.

இத்தகைய இரகசிய அறிக்கை ஒன்று தற்போது என்ன நோக்கத்திற்காகத் தயாரிக்கப்பட்டது என்பது குறித்தோ இவற்றைத் தயார் செய்த அதிகாரிகளின் நம்பகத் தன்மை குறித்தோ உறுதியாக எதுவும் தெரியவரவில்லை. இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் பாரதூரமான விடயங்கள் தொடர்பாக அரசாங்கத்தின் கருத்து என்ன என்று இதுவரையும் எந்தத் தகவலும் வெளியிடப்படவில்லை.

எவ்வாறெனினும் அரசாங்க உளவுப் பிரிவினால் தயாரிக்கப்பட்டிருக்கும் இந்த அறிக்கையில் உள்ள விடயங்கள் முழுதும் உண்மையானவையாக இருப்பின், கிழக்கு மாகாணத்தில் நிலைமை வெகு விரைவில் மோசமான கட்டத்தை அடைந்து, மற்றொரு போர் வெடிப்பதற்கான சாத்தியம் குறித்த போதிய சான்றுகள் உள்ளன.

இந்த முஸ்லிம் அமைப்புக்கள் ஒசாமா, நொக்ஸ், ஜெட் மற்றும் முஜாஹிதீன் ஆகிய பெயர்களில் செயற்படுகின்றன. இவற்றின் உறுப்பினர்கள் இஸ்ரேல், பாகிஸ்தான், பங்களாதேஷ், ஈரான், குவைத், லிபியா ஆகிய நாடுகளில் பயிற்சி பெற்றிருக்கிறார்கள்.

இலங்கையில் இந்த அமைப்புக்களின் உறுப்பினர்களுக்கு இராணுவத்திலிருந்து தப்பிச் சென்ற முஸ்லிம் இளைஞர்கள் சிலராலும் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதில் அரசாங்க ஊழியர்கள் பலரும் அடங்குவதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நான்கு இஸ்லாமிய தீவிரவாத இயக்கங்களும் தென் இந்தியாவில் செயற்படும் தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம் என்ற இயக்கத்துடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

இந்த அமைப்புக்களால் கடந்த ஆகஸ்ட் மாதம் 9ம் திகதி முதல் செப்டம்பர் 29ம் திகதிக்கு இடைப்பட்ட காலப் பகுதியில் கொழும்பு, குருநாகல், திகாரிய ஆகிய இடங்களில் கருத்தரங்குகள் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இந்த இடங்களில் தெரிவு செய்யப்பட்ட இளைஞர்களுக்குக் கராத்தே பயிற்சி வகுப்புக்களும் நடத்தப்பட்டுள்ளன.

இந்த நான்கு இயக்கங்களையும் வழிநடத்தும் முக்கியஸ்தர்கள் சிலர் குறித்த விபரங்களையும் அரசாங்க உளவுப் பிரிவு திரட்டியுள்ளது. ஆனால் இவற்றின் தலைவர்களாகச் செயற்படும் பலர் தமது தேர்தல் பதிவுகளில் போலியான தகவல்களையே சமர்ப்பித்துள்ளதால் அவர்கள் தொடர்பான மேலதிக விபரங்களைத் திரட்ட முடியாமல் இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

இந்த அமைப்புக்களின் ஆயுதக் கையிருப்புத் தொடர்பாகவும் அந்த அறிக்கையில் விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரி 56 ரக துப்பாக்கிகள், கைக் குண்டுகள், கிளைமோர் குண்டுகள் போன்றவற்றை இந்தச் சகல குழுக்களும் கொண்டிருக்கின்றன. இவ்வாறு செயற்படும் இயக்கங்களுக்கு மத்தியில் கூடுதலான உறுப்பினர்களையும் ஆயுதங்களையும் கொண்டிருக்கும் அமைப்பு முஜாஹுதீன் அமைப்பு எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவற்றில் ஒரு இயக்கத்தின் முக்கியஸ்தர்களுக்கு முஸ்லிம் அரசியல் வாதிகள் சிலருடனும் நெருங்கிய தொடர்புகள் இருப்பதாக அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.


எவ்வாறெனினும் இந்த அறிக்கை குறித்து அரசாங்கம் மேலதிக தகவல் எதனையும் வெளியிடவில்லை. முஸ்லிம் அரசியல்வாதிகளும் மௌனம் சாதித்து வருகின்றனர்.

கிழக்கில் தற்போது நிலவிவரும் பதற்றமான சூழ்நிலை தொடரும் பட்சத்தில் இத்தகைய ஆயுதக் குழுக்கள் தங்களது நடவடிக்கைகளை முன்னெடுக்க ஏதுவான சூழ்நிலை தோற்றம் பெறும் என்று சுட்டிக் காட்டப் படுகின்றது. ●

# மகேஸ்வரனாரின் மட்டுநகர் விஜயம்

இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் கடந்த சனிக்கிழமை மட்டக்களப்புக்கு விஜயம் செய்து நாவற்குடாவிலுள்ள இந்து கலாசார மண்டபத்தில் நடமாடும் சேவையொன்றை நடாத்திவிட்டுச் சென்றுள்ளார்.

இந்த நடமாடும் சேவையின் போது மட்டக்களப்பு, அம்பாறை பகுதிகளைச் சேர்ந்த, முன் கூட்டியே அமைச்சராலும் அவரோட சுத்தித் திரியிற அதிகாரிகளாலும் தெரிவு செய்யப்பட்ட ஆலய தர்மகர்த்தாக்களுக்குக் காசோலைகளை கையளித்திருக்கிறார்.



அதோட இந்த நடமாடும் சேவைக்கு பத்திரிகைக்காரர்களைக் கூப்பிட்டுக் காட்டவில்லை. என்ன காரணத்துக்காக அமைச்சர் இப்பிடி நடந்து கொண்டார் எண்டு யாருக்கும் தெரியவில்லை. அதேமாதிரி சில ஊடகங்களில் பெருமளவானோர் கலந்து கொண்டார்கள் எண்ட மாதிரி செய்தி. அப்படியொண்டுமில்ல. அழைத்தவர்களைத் தவிர அழைக்காமல் போனவர்கள் எண்டு பார்த்தால் என்னோட சேர்த்து பத்தோ பதினைந்து பேர் எண்டுதான் வரும்.

நடமாடும் சேவையைத் தவிர சித்தாண்டியில உள்ள கோயிலில நித்திய அன்னதான வைபவத்தையும் அமைச்சர் மகேஸ்வரன் ஆரம்பித்து வைத்தார். இதற்கு மாசாமாசம் ஒரு இலட்சம் ரூபா ஒதுக்கிறதாகவும் அமைச்சர் தெரிவித்திருக்கிறார். எத்தனை நாளைக்கு எண்டு தான் யாருக்கும் தெரியவில்லை.

இதைவிட அமைச்சரின் நடமாடும் சேவையில காசோலைக்கு விண்ணப்பித்தும் கிடைக்காத கோயிற்காரர்கள் புறுபுறுத்துக் கொண்டு திரியிறாங்க. எனக்கெண்டால் இதில நியாயமிருக்கிறதாக தெரியவில்லை. ஏன் தெரிஞ்சவங்க கோபிக்கிறதில நியாயமில்லை பாருங்க.

ஏனெண்டால் எங்கட இந்து காலாசார அமைச்சர் ஒரு வித்தியாசமான மனிசன். அடிக்கடி 'தசாவதாரம்' எடுப்பவர். எங்களின் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன்தான் என்று முழங்குவார். இன்னொரு இடத்தில் ரணில் விக்கிரம சிங்கதான் என்று அறிக்கை விடுவார். தமிழ்த் தேசிய கூட்டமைப்பைத் துரோகிகள் என்று கர்ஜிப்பார், ஈ.பி.டி.பி.யை அழிக்காமல் விடமாட்டேன் என்று சபதம் எடுப்பார், பாராளுமன்றத்தைப் பகிஷ்கரிப்பார். இரண்டொரு தினங்களில் சத்தம் போடாமல் போய் சபையில் குந்திக் கொள்வார், ரணிலுக்கு எதிராகப் பக்கம் பக்கமாக அறிக்கை விடுவார், கிளிநொச்சி அரசியல் நடுவகத்துக்கு அழைத்து விசாரணை நடைபெற்றால் இனிமேல் அரசியலே வேண்டாமென்று வேண்டியவர்களிடம் சொல்வார். இப்படிப்பட்ட சகல தந்திரோபாயங்களைக் கொண்டவர் எங்களுக்கு இந்து கலாசார அமைச்சராகக் கிடைத்திருப்பது பெருமைக்குரிய விசயம்தானே.

இதையெல்லாம் விட இன்னொரு விசயத்தையும் என்னால இந்த நேரத்தில் சொல்லாமல் இருக்க முடியாது. முந்தி எனக்கு யாழப்பாணத்துச் சனத்தில் நல்ல மரியாதை இருந்தது. படிச்சவங்க, தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு பெரும் பங்காற்றியவங்க அப்பிடி இப்படியெல்லாம் நல்ல மரியாதை இருந்தது. ஆனால் அது கொஞ்சக் காலமாக இல்லாமல் போயித்து. எங்கட சனத்த அழிக்கிறதுக்கான இனவாத யுத்தத்தை ஆரம்பிச்சுவச்ச யு.என்.பி. கட்சியில போட்டியிட்ட ஒருவரை அதுவும் இந்தக் காலத்தில தேர்ந்தெடுத்தாங்களே! அது தான் இப்பவும் மனசுக் குள்ள கொஞ்சம் கஸ்ரமாக இருக்குது.

## கிழக்கான்

சரி அதுதான் போகட்டுமே, மட்டக்களப்புக்கு வந்து போற எந்த அமைச்சரோ அதிகாரிகளோ படுவாங்கரப் பக்கம் போய் கொக்கட்டிச்சோலையில அவங்கள சந்திச்சு மீன், நண்டு, இறால் எண்டு வயிறு நிறையச் சாப்பிட்டிட்டுப் போட்டோ எடுக்காமல் வாறதேயில்ல.


ஆனால் அமைச்சர் மகேஸ்வரன் மட்டும் அங்காலப் பக்கம் போகவுமில்லை. அவங்களச் சந்திக்கவுமில்லை. ஏனெண்டு சொல்லித்தான் தெரிய வேண்டுமா?

அதுதான் போகட்டும் கொக்கட்டிச்சோலையில இருக்கிற 'தான்தோன்றீஸ்வரர்' கூட இந்து கலாசார அமைச்சரைக் கூப்பிட்டிருக்கலாம் தானே. அவரும் கைவிட்டு விட்டாரோ தெரியல்ல. எல்லாம் அந்த தான்தோன்றீஸ்வரனுக்கு தான் தெரியும்.

# புலிகளின் பொலிஸ் நிலையங்கள் மு.கா. தலைவர்கள் சங்கடத்தில்

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களிடமிருந்து புலிகள் கப்பம் அறவிடுகிறார்கள் என்பது குறித்த சர்ச்சை முடிவதற்குள்ளேயே மற்றொரு பிரச்சனை உருவாகியிருக்கிறது.

கிழக்கில் புலிகள் தமது நீதி நிருவாக நடவடிக்கைகளை விஸ்தரிக்கும் முகமாக பொலிஸ் நிலையங்களையும் நீதி மன்றங்களையும் அமைத்து வருகின்றனர். இவ்வாறு அமைக்கப்படும் பொலிஸ் நிலையங்கள், நீதி மன்றங்கள் போன்றவற்றின் செயற்பாடு கிழக்கில் வாழும் முஸ்லிம்களுக்கு அச்சுறுத்தலாக அமையலாம் என்ற காரணத்தினால் இந்தப் பொலிஸ் நிலையங்கள் தொடர்பில் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தமது ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளார். இவ்வாறு பொலிஸ் நிலையங்கள் அமைக்கப்படுவது புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறும் செயல் எனச் சுட்டிக்காட்டி, பிரதமருக்கும் நோர்வே ஏற்பாட்டாளர்களுக்கும் கடிதங்களை அனுப்பியிருக்கிறார் ஹக்கீம். இந்த விடயம் அடுத்த கட்ட சமாதானப் பேச்சுக்களின் போது கருத்திற் கொள்ளப்படும் என்று ரவூப் ஹக்கீமுக்கு அரசாங்கத் தரப்பினால் உறுதியளிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.



எவ்வாறெனினும் புலிகள் மட்டக்களப்பிலும் அண்மித்த பகுதிகளிலும் பொலிஸ் நிலையங்களைத் திறந்து அவற்றிற்கு ஆட்களையும் திரட்டி வருகின்றனர். முறைப்பாடுகள் பதியப்படுகின்றன. விசாரணைகள் நடத்தப்படுகின்றன. இந் நிலையில் கிழக்கில் முஸ்லிம்களை இத்தகைய செயற்பாடுகள் எவ்வாறு பாதிக்கும் என்பது குறித்துப் பலத்த சர்ச்சைகள் நிலவி வருகின்றன. அரசாங்கம் இதனைக் கண்டும் காணாதது போல் நடந்து கொள்கிறது. புலிகள் தமது உறுப்பினர்களைக் கட்டுக்கோப்பாக வைத்து சமாதான முயற்சிகளை மேலும் வலுப்படுத்த இவ்வாறு பொலிஸ் நிலையங்களைத் திறந்திருக்கலாம் என்று உள்துறை அமைச்சர் ஜோன் அமரத்துங்க பாராளுமன்றத்தில் புலிகளை நியாயப்படுத்திப் பேசியிருக்கிறார். ஆனால் இது விடயத்தில் ஹக்கீம் தரப்பினர் தெளிவான சங்கடத்தில் சிக்கியிருக்கிறார்கள். கிழக்கு முஸ்லிம்கள் மத்தியில் இந்தப் பொலிஸ் நிலையங்கள் தொடர்பாகக் கடுமையான அதிருப்தியும் அச்ச உணர்வும் நிலவுகிறது. இதனைப் போக்க அல்லது இந்த நீதி நிருவாகத்தில் இருந்து முஸ்லிம்களை வேறுபடுத்த முஸ்லிம் தலைவர்கள் உரிய நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் நிலைமை மேலும் மோசமாகலாம்.

ஏற்கனவே அமைச்சர் ஹக்கீமுக்கு முஸ்லிம் காங்கிரஸ் தலைமை தொடர்பில் சவால்களும் எதிர்ப்புகளும் வந்த வண்ணம் உள்ள நிலையில் இந்தப் பொலிஸ் நிலையச் சர்ச்சையும் சேர்ந்து கொண்டிருக்கிறது. எனவே இது விடயத்தில் கூடுதல் அக்கறை செலுத்திப் பிரச்சனையைத் தீர்க்கும் பொறுப்பு ஹக்கீம் மீது இரட்டிப்பாகச் சுமத்தப்படுகிறது.

புலிகளால் நடத்தப்படும் பொலிஸ் நிலையங்களில் முஸ்லிம்கள் சம்பந்தமான முறைப்பாடுகள் பதியப்பட்டு அவை விசாரணைக்கு வரும் போது அல்லது நீதி மன்றத்தில் முஸ்லிம்கள் குற்றவாளிகளாகத் தீர்ப்பளிக்கப்பட்டு தண்டனைகள் வழங்கப்படும் போது இந்தப் பிரச்சனை மேலும் உக்கிரமான கட்டத்தை அடைய வாய்ப்பிருக்கிறது. அதற்கு முன்னர் இரு தரப்பினரும் கலந்தாலோசித்து சுமுகமான ஒரு தீர்வுக்கு வருவார்களாயின் ஆரோக்கியமானதாக இருக்கும். ●

# NAVEEN CERAMIC

தரமான

☛ Wall Tiles, ☛ Floor Tiles

மற்றும் **குளியலறை உபகரணங்களை**

*Spain, Italy, Thailand, Malaysia, India, Indonesia* போன்ற நாடுகளில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்து விநியோகிப்பவர்கள்



**Naveen Ceramic** No.307, George R. De Silva Mawatta, Kotahena, Colombo-13. Sri Lanka. Tel : 345197-8

**எமது புதிய காட்சியறை**
184-A, Havelock Road, Colombo-05.
Tel :01-507334

500க்கும் மேற்பட்ட அழகிய, பல வர்ண, வடிவங்கள் உங்கள் தெரிவுக்காக எம்மிடம் உண்டு.

---

## சிங்கப்பூரில் திருமணம்

சிங்கப்பூரில் திருமணப் பதிவு செய்து, திருமணம் செய்ய வருவோருக்கு சகல வசதியும் தளபாட சாமான்களோடு கூடிய தங்குமிட வசதியும், இலங்கை முறைப்படி கல்யாண ஏற்பாடும் அவரவர் வசதிக்கு ஏற்ப செய்து தரப்படும். இலவச விமான நிலைய வாகன வசதி, சலுகைக் கட்டணத்தில் வாடகைக் கார்.

விபரத்திற்கு:-

**LINGAM WEDDING SERVICE**

10, Anson Road, # 15-14 International Plaza, Singapore-079903

எந்நேரத்திலும் தொடர்பு கொள்வதற்கு வசதியாக கைத் தொலைபேசி

அழைப்பு: 0065-975 14 941

---

**மணமகன் தேவை** இந்து வேளாளர் குடும்பத்தைச் சேர்ந்த 26 வயதுடைய தற்பொழுது சுவிசில் வசிக்கும் வாய் பேச முடியாத, (காது கேளாத) கைதடி நவீல்ட் பாடசாலையில் உயர் தரம் படித்து முடித்த மணமகளுக்கு பெற்றோர் தகுந்த வரனைத் தேடுகின்றனர். ஐரோப்பிய நாடுகளிலுள்ளவர்கள் விரும்பத் தக்கது. ஏனைய விபரங்கள் நேரில் பேசப்படும்.
தொடர்புகளுக்கு: தொ.பே:- சுவிஸ்- 0041-0764534701.

---

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனம்

வீட்டுப் பணிப்பெண்கள், ஆண்களுக்கான எல்லாவிதமான தொழில்கள்

**சவுதி அரேபியா, குவைட், டுபாய், கட்டார், ஜோர்டான், லெபனான்.**

| இருவழிப் பயணச் சீட்டு, உணவு, தங்குமிடம், மருத்துவ வசதிகள் | சேவைக் காலமான 2 வருடத்திற்குள் பிரச்சனைகள் ஏற்படின் உடனடியாகத் தீர்வு பெற்றுத் தரப்படும். |
|---|---|

பணிப்பெண்களுக்கு இலவசம்

**ZAHANA INTERNATIONAL**
*Manpower Supply*

10 நாட்களுக்குள் வெளிநாடு புறப்படுவதற்காக கடவுச் சீட்டு, புகைப் படங்கள், வளைகுடா வாகன சாரதி அனுமதிப் பத்திரம் என்பவற்றுடன் நேரில் வரவும்.

Tel : 074-610301, 074-618502
Fax : 074-724324
Mobile: 072-426669.
E-mail : zahana@dialogsl.net
LLNO: 1845

75/2, 2nd Floor, Armour Street, Colombo 12, Sri Lanka.

---

## பரம்பரையாக தொடர்ந்து வரும் பிரபல மலையாள மாந்திரீகம் மூலம் உங்கள் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ளுங்கள். 23 வருட அனுபவபூர்வ சேவை



பிரச்சினைகளை மனதில் மறைத்துக் கொண்டு துன்பப்பட வேண்டுமா?

பல்லாயிரக் கணக்கானவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்ததை போன்று உங்களுடைய பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பேன், நீங்கள் விரும்பும் காதலரை 24 மணி நேரத்தில் உங்கள் வசமாக்குவேன். பிரிந்தவர்களை சேரவைக்கவும், வேண்டாதவர்களை தள்ளி வைக்கவும்,வீடுகளை காவல் செய்யவும்,வியாபாரம் தழைக்கவும், பிள்ளை பேறு கிடைக்கவும், தொழில் கிடைக்கவும்,வெளிநாட்டு வேலைவாய்ப்பு கிடைக்கவும்,பெரும் சூனியத்தை வெட்டவும் முடியும். இது போன்ற வேறு மந்திர வேலைகளையும் செய்து தருவேன். சந்திப்பு : ஞாயிறு,புதன் - மு.ப.9.00 - பி.ப.5.00

**வெளிநாட்டில் உள்ளவர்களுக்கு விசேட பாதுகாப்பு அளிக்கும் மந்திர உபாயங்கள் என்னிடம் உண்டு.**

வெளிநாட்டில் இருந்தவாறே தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு அதிஷ்டமான வாழ்க்கை நடத்துவோர் அதிகம். எனது திறமையின் பலன்களை அவர்களிடம் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

**பாரத ஜெயதேவ** பாரம்பரிய மலையாள மஹா மாந்திரீகர்

65, High Level Road, Kirullapone, Colombo - 06.
T.P : 734678, 514349 Fax : 514349

சந்திப்புக் கட்டணம் - ரூ 250/=

---

## ஞானம் பிரின்டர்ஸ்

பிரதான வீதி, பெரியகல்லாறு, கல்லாறு என்ற முகவரியில் அமைந்துள்ள ஞானம் பிரின்டர்ஸிடம் தினமுரசு வாரமலரைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதை வாசகர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம்.

---

## வதிவிட விசா பெற்று வெளிநாடு செல்கிறீர்களா?

**உங்கள் பாரத்தை நாங்கள் சுமக்கத்தயார் !**

உலகின் எப்பாகத்திற்கும் தங்களது வீட்டுப் பொருட்களை குறைந்த செலவில் துரிதமாய் அனுப்புவோம்.

- ☞ அம்மி முதல் ஆட்டுக்கல் வரை
- ☞ வெள்ளிப்பாத்திரம் முதல் குத்துவிளக்கு வரை
- ☞ உணவுப் பொருள் முதல் உடுதுணி வரை
- ☞ தளபாடங்கள் முதல் தரைவிரிப்பு வரை

சகல பொருடகளையும் சிறப்பான முறையில் பொதி செய்து சுங்கத்திணைக்கள நடைமுறைக்கு அமைய காப்புறுதி செய்து பொதிகளாகவோ, கொள்கலன் களாகவோ அனுப்பிவைக்கப்படும்.

**பிரயாணத்திற்கு 10 நாட்களுக்கு முன் தொடர்பு கொள்க**

**DIRECTLINE INTERNATIONAL (PVT) LTD.**
164-1/2, Maha Vidyala Mawatha, Colombo-13
Tel: 074-610877 - 8 Fax: 94-1-543204
E-mail: directline@wow.lk

(சுங்கத்திணைக்கள அனுமதி பெற்ற முகவர்)

---

## வெள்ளவத்தை

(கொழும்பு தெற்கு)

**Eric Rajapakse** Opticians

நீங்கள் அடுத்த முறை மூக்குக்கண்ணாடி அல்லது கண்டாக்ட் லென்ஸ் வாங்கும்போது மூக்குக்கண்ணாடி தயாரிப்பில் விற்பன்னர்களும் கண்டாக்ட் லென்ஸ் தயாரிப்பில் கைதேர்ந்தவர்களுமான எம்மை நாடுங்கள்.

இல.539, காலி வீதி, வெள்ளவத்தை.
தொலைபேசி: 01-362971,553877

பிரதி வியாழக்கிழமைகளில் முன் அனுமதியுடன் கண் வைத்திய நிபுணர்களைச் சந்திக்கலாம்

---

## ஹோமியோபதி சிகிச்சை

தமிழ்நாட்டின் பிரபல ஹோமியோபதி சிகிச்சை நிபுனரும் தமிழக அரசின் ஹோமியோபதி கவுன்சில் உறுப்பினருமான,

Dr. R. தியாகராஜன் D.H.M.S,AMRSH (LON)

நீரிழிவு, ஆஸ்மா, மூட்டுவாதம், தோல் வியாதிகள், ஆண்மைக் குறைவு போன்ற நாட்பட்ட வியாதிகளுக்கும் சிறந்த முறையில் சிகிச்சை அளிக்கிறார்.

காலம் : 21.11.2002 முதல் 24.11.2002 வரை

இடம் : ஹோட்டல் கிறீன்லண்ட்ஸ், பம்பலப்பிட்டி.

தொலைபேசி : 585592, 581986.HOTLINE : 077-602513.

---



## இலங்கையில் அற்புத மலையாள மாந்திரீக சக்தி

மலையாள மாந்திரீக சித்தர் பேராசிரியர்.
டாக்டர் P.K சாமி (J.D.G.AN) JP அவர்களைச் சந்தியுங்கள்.

1. பிரிந்தவர் ஒன்று சேர.
2. காதல் கைகூட.
3. கணவன் மனைவி ஒருவரை விட்டு ஒருவர் பிரியாதிருக்க.
4. காதலன் காதலி தேடிவர.
5. எதிரியின் தொல்லை இன்றி நிம்மதி பெற.
6. குபேர வாழ்வு பெற.
7. குழந்தைப் பாக்கியம் பெற.
8. திருமணம் தோஷ நிவர்த்தி பெற. 9. வலம்புரி மகாலட்சுமி கடாட்சம் பெற.
10. ஓடிப்போனவர் தேடிவர. 11. வெளிநாட்டுப் பிரயாணம் தடை நீங்க.
12. தீராத நோய் தீர. 13. தெய்வீக சக்தியால் ஔடதம் மூலம் கூந்தல் வளர.
14. கடன் தொல்லை சிறுக சிறுக குறைய. 15. கையில் பணம் சேர.
16. அதிஷ்ட வீடு கட்ட.



**உங்கள் விதியைத் தெரிந்து கொள்ள**

உங்கள் குறைகளை திட்டவட்டமாக, தெளிவாக மாந்திரீகத் துறையில் 41 வருடங்களாகத் தனக்கென ஒரு பாணியை அமைத்துத் தன்னடக்கத்துடன் சேவை புரியும். P.K. சாமி ஐயா அவர்களைக் கண்டு உங்கள் குறைகளை நீக்கி வாழ்வில் வெற்றி பெறுங்கள். அது மட்டுமா வாழ்வில் தோல்வியில் துவண்டு ஐயாவின் ஆசீர்வாதம் பெற்றபின் வெற்றி பெற்றவர்களின் திட்டவட்டமான, தெளிவான, நூற்றுக்கு நூறு உண்மையென உங்களால் உறுதி செய்யப்பட்ட ஜாதக விவரணம்.

சாஸ்திரம். இது தர்மத்திற்கு இணையாவது. தர்மத்தை மிஞ்சிய விதி இல்லை. விதியின் விவரணம் சாஸ்திரம். சாஸ்திரத்தின் சாம்ராஜ்யம் மலையாளம் கொச்சியம். மலையாளத்தின் மகத்துவம் மாந்திரீகம். மாந்திரீகத்தின் அரசர், பேராசிரியர் டாக்டர் P.K. சாமி ஐயா அவர்கள் இது ஒரு மயங்க வைக்கும் மாத்திரை அல்ல. மாயா ஜால வித்தையும் அல்ல. பரிபூரண மலையாள துர்க்கையின் தெய்வீக அற்புத அருள் கடாட்சமே.

அருள் ஞானத்துடன் கூறப்படும் ஜாதகம் என்றுமே பிழைத்ததில்லை. உங்களுக்கு நடந்தது. நடக்கப்போவது நடக்க இருப்பது, உங்கள் விதியின் விவரணம் என்ன? அன்றைய வருடம் எப்படி? அன்றைய மாதம் எப்படி? அன்றைய நாள் எப்படி? என்பதை அறியவும்.

குறிப்பாகச் **"செய்யும் தொழிலை செய்யாதவன் கெட்டான். செய்யத் தெரியாத தொழிலை செய்தவனும் கெட்டான்"** என்ற வாக்கியத்திற்கு ஏற்ப உங்களின் தொழில் எப்படி அமைய வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ளவும். உங்களின் குழந்தையால் உங்களுக்கு யோகமா? உங்கள் திருமணம் எப்பொழுது? எங்கு நடைபெறும். எத்தனையாம் திகதி? என்ற விபரங்களை அறிந்து கொள்ள வேண்டுமா? உங்களின் இல்லம் வாஸ்து சாஸ்திர முறையில் அமைய வேண்டுமா? உங்கள் பிறப்பின் இரகசியம் அறிந்து கொள்ள காண்ட அடிப்படையில் ஜாதகம் எழுதிக் கொள்ளவும்.

**★ஜேர்மனி அன்பர் அனாவின் மடல், பிரிந்த குடும்பம் ஒன்று கூடியது.**

கருணை மிகுந்த கண்ணியத்துக்குரிய ஐயா அவர்களுக்கு, என்றென்றும் உங்கள் நல்லாசிகள் எனக்குத் தேவை. ஐயா ஒரு வருடமாக எனது கணவர் வேற்று மத பெண்ணோடு தொடர்பு ஏற்பட்டதால் தினமும் என் கணவனால் நொந்து, வெந்து கொண்டிருந்தேன். என் மன வேதனையை என் தோழியிடம் கூறி ஆறுதல் தேடும்போது அவர் மூலமாக உங்களின் சக்தியை அறிந்து கொண்டு, தங்களோடு தொடர்பை ஏற்படுத்தி என் நிலைமைகளை விளக்கினேன். உங்கள் சக்தியால் ஸ்ரீ துர்க்கையின் பூரண அருள் கிடைக்கப் பெற்று, ஐயா இப்பொழுது என் கணவர் மனம் திருந்தி என்னிடமே வந்து விட்டார். என்னோடு மிகவும் பிரியமாகவும் அன்பாகவும் நடந்து கொள்கின்றார். எனது வாழ்வில் நான் நிம்மதியாகவும், சந்தோசமாகவும் இருக்கின்றேன். எல்லாம் உங்கள் அருள் சக்தியின் மகிமையால் நடந்தது. எனது வாழ்க்கையில் ஒளி ஏற்படுத்திய உங்களுக்கு எனது ஆயிரமாயிரம் நன்றிகள்.

**★ கனடா அன்பரின் மடல், புத்தி பேதலித்தவர் பூரண நலம்.**

பெருமைக்குரிய டாக்டர் ஐயா அவர்களுக்கு, எனது மகளுக்கு 07 வருட காலமாக இருந்த மனப்பிரச்சனை, மனப் பயம், பைத்தியம் அனைத்தும் உங்கள் தெய்வ அருளால் பூரண சுகம் கிட்டியது. உங்களுக்கு எனது நன்றிகள்.

**★ டென் மார்க் அன்பரின் மடல், அதிசயிக்கத் தக்க முடி வளர்ச்சி**

அன்புள்ளம் கொண்ட ஐயா, தலையில் தலைமுடி உதிர்வதைத் தடுத்து, நீண்ட கூந்தலுடன் இவ்வுலகில் நலமுடன் வாழ எனக்கு வழி காட்டியமைக்கு என்றென்றும், தங்களுக்கும் துர்க்கை அம்மனுக்கும் நன்றி கூறுகின்றேன்.

**★ லண்டன் அன்பரின் மடல், என் இனியவள் என்னிடமே வந்தாள்**


மதிப்புக்குரிய ஐயாவுக்கு, என்னை வெறுத்து, என்னைப் பிரிந்து சென்ற என் ஆருயிர் காதலியை மீண்டும் என்னிடத்தில் வந்து சேர வைத்தமைக்கு ஆயிரம் நன்றிகள்.

**★ ஜேர்மனி அன்பரின் மடல், தெய்வீக சக்தியில் பேசும் மழலை**

மனித தெய்வமே! உங்களின் தெய்வீக சக்தியினால் பேசாத எம் 03 வயது மழலையை பேச வைத்து எம்மை ஆனந்தத்தில் மூழ்க வைத்த உங்களுக்குக் கோடானு கோடி நமஸ்காரங்கள்.

**★ மட்டக்களப்பு அன்பரின் மடல், துரித கதியில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு.**

மதிப்புக்குரிய ஐயா அவர்களுக்கு, தங்களின் அருள் சக்தியின் மூலம் நீண்ட காலமாகத் தடைப்பட்டு வந்த எனது வெளிநாட்டுப் பிரயாணம் தங்களோடு தொடர்பு ஏற்படுத்திய பின் உங்கள் சக்தியினால் துரித கதியில் எனக்கு வாய்ப்புக் கிட்டியது. உங்களுக்கு எனது நன்றிகள்.



**★ மாத்தளை அன்பரின் மடல், கை கூடிய திருமணம்.**

ஐயா அவர்களுக்கு, திருமணம் செய்ய இஸ்டமில்லாமல் இருந்த எனது மகளுக்கு திருமணத்தில் விருப்பம் தெரிவித்து, ஒரு வெளிநாட்டு வரனைத் தங்கள் கிருபையால் தந்து நல்லபடியாகத் திருமணத்தை முடித்துத் தந்தீர்கள். எங்களது மனமார்ந்த நன்றிகள்.

**★ கொழும்பு அன்பரின் மடல், தீய பழக்கத்தில் இருந்து மீட்பு.**

மதிப்புக்குரிய ஐயா அவர்களுக்கு, தீய பழக்கம் உள்ள எனது தம்பியை மீட்டு, அவருக்கு புது வாழ்வும், அவருடைய மகளுக்குத் திக்கு வாய் குணமடையவும், எனது மைத்துனிக்கு கிடைக்க வேண்டிய காசு கிடைக்கவும், எனது மைத்துனனின் மகன் வெளிநாடு செல்லவும் தங்கள் அருள் சக்தியின் மூலம் நிறைவேற்றிய உங்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

**★ லெபனான் அன்பர் வரைந்த மடல், மனநோயில் இருந்து மீட்பு.**

கனம் மதிப்புக்குரிய டாக்டர் ஐயா அவர்களுக்கு. நீண்ட காலமாக இருந்து வந்த எனது நோய் பூரணமாகச் சுகம் பெற்று இவ்வுலகில் என்னையும் ஒரு சாதாரண பெண்ணாக வாழ வழியமைத்துக் கொடுத்து நீண்ட நாள் நரக வேதனையில் இருந்து மீட்டுத் தந்தமைக்கு நன்றிள்.

**★ யாழ்ப்பாணம் அன்பரின் மடல், அச்சொட்டான ஜாதக பலன்.**

ஐயா அவர்களுக்கு என்னுடைய ஜாதக பலனை விரிவாக அறியத் தந்தீர்கள். தாங்கள் கூறியது போல் அனைத்தும் நிகழ்வதையிட்டு ஆச்சரியமும் மகிழ்ச்சியும் அடைகின்றேன். என்றென்றும் உங்களுக்கு நன்றி.

**★ சுவிற்ஸர்லாந்து சுரேஷின் மடல்.**

அன்புள்ளம் கொண்ட ஐயாவக்கு, சுரேஷர் எழுதிக் கொள்வது. ஆச்சரியமும் ஆனந்தமாய் இருக்கிறது உங்கள் சேவை. நான் பணம் அனுப்பி. என் பிரச்சனையை தொலைபேசி வாயிலாக "என் காதலியை அழைத்துத் தாருங்கள். அவள் இல்லாமல் என்னால் வாழ முடியாது." என்ற எனது அழுகைக் குரலுக்கு மனமிரங்கி, தொலைபேசி வாயிலாகவே ஒரு மணி நேரத்திற்குள் 7000 மைலுக்கு அப்பால் இருந்து நீங்கள் செய்த அருள் சக்தி மாந்திரிகத்தின் சக்தியால் என் காதலிஎன்னை வந்து அடைந்து விடடாள். தங்கள் சேவை மீண்டும் மீண்டும் மக்களுக்குக் கிடைக்கத் துர்க்கையின் ஆசீர்வாதங்கள்.

**★ சுவிஸ் அன்பரின் மடல். நீண்டு வளர்ந்த கூந்தல்**

ஐயா அவர்களுக்கு, நீண்ட காலமாக முடி உதிர்ந்து முடி கட்டையாகி வெளியில் செல்ல முடியாது. வெட்கப்பட்டுக் கொண்டிருந்த எனக்கு உங்கள் அருள் சக்தியின் மூலம் கூந்தல் நீண்டு கறுப்பாய் இருக்க அருள்புரிந்தீர்கள். ஐயா! உங்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

**★ ஒப்டன் அன்பரின் மடல். சுகமாகிய புற்றுநோய்.**

ஐயா அவர்களுக்கு, நீண்டகாலமாக புற்று நோயால் அவதிப்பட்ட என் மனைவிக்கு தங்களின்அருள் சக்தியின் மூலம் பூரணமாக சுகம் கிடைத்தது. எங்கள் வாழ்வில் ஒளி வீசிய உங்களுக்கு கோடான கோடி நமஸ்காரங்கள்.

*உலக மாந்திரீக சக்கரவர்த்தி.*

**Prot. Dr. P.K Samy ( J.D.G.AN) J.P.**
Sri. Durgadevi. mantharika Utchada Peedam,
162. Kotahena Street. Colombo-13.
T.P. 466271, 466571, 342463, 466620, 431137, 466820. Fax: 0094-1-344831.
E.mail: drpk samy . @ sttnet.lk.

பார்வை நேரம் கொழும்பில் காலை 8.00-5.00 மணிவரை
வெளிநாட்டவர் தொ.பே. தொடர்பு காலை 6.00 இரவு 9.00 மணிவரை மட்டுமே. (இலங்கை நேரப்படி)
நுவரெலியாவில் காலை 8.00-6.00 மணிவரை

நுவரெலிய கிளை.

33, Daily Fair Complex, Kandy Road, Nuwara - Eliya.
(நுவரெலியாவில் மட்டுமே கிளை உண்டு.)
T.P. 052 -22508, 35097, 23093, 23336, 23570 Fax: 00945-235097
w.w.w. imexpo lanka . com. drpk samy.

## அண்டை மண்டலத்திலிருந்து...

# கருணாநிதியும் பிராமணர் எதிர்ப்பும்

**ஆர். கண்ணன்**

**மீ**ண்டும் பிராமணர்-பிராமணரல்லாதார் மோதல் தமிழகத்தில் தலை தூக்கியுள்ளது. 70 ஆண்டுகளுக்கு முன்னால் நீதிகட்சி என்று ஓர் கட்சி தமிழகத்தில் பிராமண எதிர்ப்புக்கென உருவாகி ஆட்சியையும் பிடித்தது. அதன் பிறகு 1952 ல் உதயமான திராவிட முன்னேற்றக் கழகமும் பிராமண எதிர்ப்பை-பெரியார் வழியில்-வெளிப்படுத்தத் தயங்கவில்லை. எனினும் 1967 ல் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பின்னர் தி.மு.க. தனது பிராமண எதிர்ப்பை மிகவும் அடக்கி வாசித்தது.

காஞ்சி பீடாதிபதி ஸ்ரீஜெயந்திரரால் அண்மையில் ஓர் நூல் வெளியிடப்பட்டது. அதன் பெயர் 'அருந்தொண்டு ஆற்றிய தமிழக அந்தணர்கள். நான்கு பெரிய வால்யூம்களில் வெளியிடப்பட்ட இந் நூல் விஞ்ஞான மேதை சர்.சி.வி.ராமன் தொடங்கி சினிமா கலைஞர் ஜெய்சங்கர் வரை ஆயிரத்திற்கு மேற்பட்ட பிராமணர்களைப் பட்டியலிட்டுப் பாராட்டி 'இவர்கள் எல்லாம் பிராமணர்கள்தான்' என்று உரிமை பாராட்டியுள்ளது. அறிவியல்துறை, கல்வித்துறை, அரசுத்துறை, இசைத்துறை, இராணுவத்துறை, இலக்கியத்துறை என்று அனைத்திலும் சாதனை செய்த சாதனையாளர்களைப் பட்டியலிட்டுள்ளதானது தமிழகத்தில் ஒரு வித சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் ஆர்.நல்லகண்ணு கடும் கண்டனம் வெளியிட்டார். "சுதந்திரப் போராட்டத்தில் முக்கிய பங்கு வகித்த தலைவர்கள் பாரதியார், ராஜாஜி போன்றவர்களின் சேவைகளைப் பாராட்ட வேண்டிய நாம் குறுகிய வட்டத்தில் இவர்களை அடக்கும் முயற்சிகளை முறியடிக்க வேண்டும். ஜாதியைச் சொல்லித்தான் இது போன்ற தலைவர்களை அடையாளம் காண வேண்டும்" என்று ஏற்பட்டால், தமிழகம் மீண்டும் 20-ம் நூற்றாண்டின் தொடக்கத்துக்கே சென்றுவிட்டதாகிவிடும் என்றார் நல்லகண்ணு.

இந்த நூல் வெளியீட்டு விழாவில் காஞ்சி ஜெயந்திரர் சுவாமிகள் பேசிய பேச்சு இப்போது திராவிட இயக்கங்களின் கடும் விமர்சனத்திற்குள்ளாகியுள்ளது. "அந்தணர் முதல் எல்லா ராஜாக்களும் அந்தணர் சொல்படிதான் நடந்து வந்தனர். அனைத்துக்கும் வழி காட்டும் அந்தணர்கள் கோபத்திற்கும் ஆளாகலாம். ஆனால் அந்தணரின் கோபத்திற்கு ஆளானால் நாடு தாங்காது என்று தமிழ் நூல்களே சொல்லியுள்ளன" என்றார் ஸ்ரீ ஜெயந்திரர்.

இந்த நூல் வெளியாகக் காரணமான பிரபல நரம்பியல் மருத்துவர் ஒருவர் இந் நூலின் முகப்புரையில் ஜாடைமாடையாகத் திராவிட இயக்கங்களை விமர்சித்து "சமூக புரட்சி என்ற காரணத்தைக் காட்டி, சில சாரார் அந்தணர்களைத் தூற்ற ஆரம்பித்துள்ளனர். அவர்கள் மீது வெறுப்பையும் கிளறிவிட்டு, அந்தணர்கள் தமிழ்நாட்டுக்கு எந்த நன்மையும் செய்யவில்லை என்ற ஒரு அவதூறைக் கிளப்பிவிட்டு, அதைச் சிலர் நம்பும்படி கூடச் செய்தனர். அரசியல்வாதிகள் அதன் மூலமாக அரசியலில் வெற்றி கண்டார்கள். ஆனால் சமூகம் மாறவில்லை" என்று குறிப்பிட்டுள்ளார்.

இதனால் வெகுண்டெழுந்த கருணாநிதி இந் நூல் வெளியீடு பற்றி ஒரு பிடிபிடித்தார். அந்தணர் என்றால் அது பிராமணர் என்று அர்த்தமாகாது. அந்தணர் என்றால் அனைத்து உயிர்கள் மீது அன்பு கொண்டு ஒழுகும் சான்றோர் என்றுதான் பொருள்.

அப்படியிருக்க அந்தணர் என்றால் ஒரு தனி ஜாதியெனக் கூறிக்கொண்டு விழா, மாநாடு, நூல் வெளியீடு செய்வதெல்லாம் பழைய கால பத்தாம்பசலித்தனமாக வர்ணாஸ்ரமத்துக்கு வலிமை சேர்த்திடும் வேண்டாத முயற்சி என்று கூறிய கருணாநிதி, "அந்தணர் குலத்தில் பிறந்தவர்கள் தர்மத்தை விடக் கூடாது என்று காஞ்சி சங்கராச்சாரியார் பேசியதை அடிக்கோடிட்டு அப்படியானால் காந்தியை கோட்சே என்ற பிராமணன் சுட்டுக் கொன்றது தான் தர்மத்தை விடாததற்கு எடுத்துக்காட்டா? 'சம்பூகன் என்ற சூத்திரன் தவம் செய்ய அனுமதியில்லை' என்று அவன் தலையைக் கொய்து எரித்த இராமரின் செயல் தர்மத்தை விடாததற்கு எடுத்துக் காட்டா? என்று அடுக்கடுக்காகக் கேள்விகளைத் தொடுத்தார். இப்போது கருணாநிதிக்கு ஆதரவாகச் சில திராவிட இயக்க முக்கியஸ்தர்களும் களத்தில் இறங்கிப் பிராமணீயத்தையும், பிராமணீய ஆதிக்கத்தையும் கடுமையாக விமர்சித்து வருகின்றனர்.

முதல்வர் ஜெயலலிதா கொண்டு வந்த கட்டாய மதமாற்றத் தடுப்புச், சட்டம் அதற்கு ஸ்ரீ ஜெயந்திரர் மற்றும் பிராமணர்கள் பலரிடமிருந்து வந்த ஆதரவு போன்றவை தி.மு.க.வை கோபம் கொள்ளச் செய்துள்ளது. இந்து மதத்திலுள்ள தீண்டாமைக் கொடுமைகள், ஏற்றத்தாழ்வு போன்றவைகளால்தான் தாழ்த்தப்பட்டவர்கள் மதம் மாற நேரிடுகிறது என்று தி.மு.க. வாதிடுகிறது. அதற்கு மேலும் ஒரு படி சென்று இந்து என்றால் திருடன் என்ற ஓர் அர்த்தம் இருப்பதாகத் தி.மு.க. தலைவர் கருணாநிதி பேசியதால் அவர் மீது ஒரு சிலர் வழக்குத் தொடுத்துள்ளனர். இந்த வழக்குக் குறித்துப் பேசும் போது கருணாநிதி, "தாரளமாக வழக்குப் போடட்டும். மதம் என்றால் என்ன அர்த்தம் என்பது பற்றி நான் மேலும் விளக்கமாக பேச எனக்கு நல்ல வாய்ப்புத் தான்" என்றார்.

ஆட்சியிலிருந்த காலகட்டங்களிலெல்லாம் பிராமணர்களை மிகவும் அனுசரித்துப் போனவர் கருணாநிதி, பிராமணர்களின் ஆதிக்கம் மிகுந்த பாரதீய ஜனதாவுடன் இப்போதும் கூட்டாக இருப்பவர்தான் கருணாநிதி, ஆனால் முதல்வர் ஜெயலலிதாவின் அணுகுமுறைகளால் உயர்ஜாதி இந்துக்களிடமும், பிராமணர்களிடமும் ஏற்பட்டு வரும் அபாரமான செல்வாக்கை உணர்ந்ததன் விளைவாகவே கருணாநிதி இப்படிப் பேசுகிறார். இதன் மூலம் தாழ்த்தப்பட்ட சிறுபான்மையினரின் ஒட்டுமொத்த ஆதரவைத் தனக்குச் சாதகமாக்கிக் கொள்ளலாம் என்பதுதான் கருணாநிதியின் நோக்கம் என்று அரசியல் பார்வையாளர்கள் கருதுகிறார்கள்.

முதல்வர் ஜெயலலிதா பிறப்பால் ஒரு பிராமணர். பிராமணர்கள் மட்டுமல்லாது வீரமணி தலைமையிலான திராவிட இயக்கமும் ஜெயலலிதாவை ஆதரிக்கிறது. ஆகவே ஒரு பிராமண எதிர்ப்பாளராகக் காட்டிக் கொண்டு அதன் மூலம் பெரும்பான்மையான பிராமணரல்லாதவர்களுக்கான ஒரே பிரதிநிதி நான்தான் என்று காட்டிக்கொள்வது கருணாநிதியின் நோக்கங்களில் ஒன்றாகும்.

# அனைவரையும் அரவணைக்கும் ஒருங்கிணைந்த செயற்பாடே இன்றைய தேவை

**வ**டக்கு கிழக்கில் தனிநாடு அமையும் பட்சத்தில் நோர்வேயின் வரம்பு மீறிய தலையீடு பற்றி பொதுஜன ஐக்கிய முன்னணியின் 7 பக்க அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இது இவ்வாறிருக்க பொதுஜன ஐக்கிய முன்னணியின் அங்கத்துவக் கட்சிகளான லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியன தமக்கெதுவும் தெரியாதென ஆதங்கப் பட்டுள்ளன.

நோர்வேயின் செயற்பாடுகள் பாரபட்சமானவையாகவும் இலங்கையின் இறைமையை மீறுவதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கும் கருத்துக்கள் தொடர்பில் நோர்வே பதிலளிக்க வேண்டிய சங்கடமான நிலையிலிருக்கிறதென்றே கூற வேண்டும்.

ஏனெனில் பொதுஜன ஐக்கிய முன்னணி தவிர்ந்த இனவாதக் கட்சிகளான ஜே.வி.பி.,சிஹல உறுமய போன்றனவும் நோர்வேயை விமர்சித்து வருகின்றன.

நோர்வே எடுத்துள்ள முயற்சிக்கு இத்தகைய தடங்கல்கள், சிக்கல்கள் வரும் என்பது ஏற்கனவே எதிர்பார்க்கப் பட்டதுதான். 20 வருடங்களுக்கு மேற்பட்ட யுத்தம், கடும் பகை நிரம்பிய இன முரண்பாட்டுச் சிக்கலைத் தீர்ப்பதில் இத்தகைய பிரச்சனைகள் எதிர்பார்க்கப்பட்டவையே.

அடுத்தபடியாக உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் பிரிட்டனும், அமெரிக்காவும் கலந்துகொள்ள இருப்பது பற்றியும் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதாவது இந்த நாடுகள் புலிகளைப் பயங்கரவாத இயக்கமாகப் பிரகடனம் செய்து தடைசெய்த நாடுகள். இந்த நாடுகளின் அரசாங்கப் பிரதிநிதிகள் ஒஸ்லோவில் பங்குபற்றுவது புலிகளுக்கு ஒரு சர்வதேச அங்கீகாரத்தை வழங்குவதோடு இந்த நாடுகளில் புலிகள் மீது தடை என்பதும் பலவீனமடையலாம்.

வெவ்வேறு நாடுகளுக்கு வெவ்வேறு அளவீடுகள் வைத்திருப்பதாகவும் இந்த நாடுகள் குற்றம் சாட்டப்பட்டுள்ளன. தமது நாட்டில் தடைசெய்யப்பட்ட இயக்கத்துடன் இவர்கள் எவ்வாறு பேச்சுவார்த்தை நடாத்தலாம் என்றும் கேட்கப்படுகிறது. இந்தியா ஒஸ்லோ மாநாட்டில் பங்குபற்றத் திட்டவட்டமாக மறுத்திருப்பது பொதுஜன ஐக்கிய முன்னணியால் உற்சாகத்துடன் வரவேற்கப்பட்டுள்ளது.

பேச்சுவார்த்தைகளில் இந்தியாவின் நிலைப்பாடும் கருத்திற்கெடுக்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கலாநிதி விக்கிரமபாகு கருணரட்ண ஐ.தே.மு-புலிகள் இரு தரப்பினரும் ஒஸ்லோவிற்குப் பிச்சாபாத்திரமேந்திச் செல்ல இருப்பது பற்றி ஆதங்கப்பட்டிருக்கிறார்.

மாவோவாதியான ஆஜித் ரூபசிங்க ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கம் ஒன்றை உருவாக்கியிருக்கிறார். இலங்கையில் அமெரிக்காவின் பிரசன்னத்தைக் கடுமையாக விமர்சனம் செய்துள்ளார். அதிகாரங்கள் பகிரப்பட வேண்டிய அதேவேளை வடக்கு கிழக்கில் உள்ள சிங்கள மக்களின் உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

முஸ்லீம் மக்கள் தற்போதெழுந்துள்ள சூழ்நிலையில் தமது இருப்பு, தனித்துவம், பாதுகாப்பு போன்ற கோரிக்கைகளைத் தொடர்ச்சியாக வலியுறுத்துகின்றனர்.

வடக்கு கிழக்கில் மாற்றுத் தமிழ் அமைப்புக்கள் பன்முகத்தன்மை, ஜனநாயகம், மனித உரிமைகளை வலியுறுத்தியுள்ளன.

அரச சார்பற்ற நிறுவனங்களும் மனித உரிமை அமைப்புக்களும் சிவில் சமுதாயத்தின் பங்குபற்றல் பற்றி வலியுறுத்துகின்றன.

சிறுபான்மைச் சமூகங்களுக்கு எதையும் வழங்கக் கூடாது என்ற துவேச மனப்பான்மையில் செயற்படும், கருத்துக் கூறும் சக்திகளை நாம் ஒதுக்கி விடலாம்.

ஆனால் இந்த நாட்டின் வெவ்வேறு சமூகங்களின் நலனையொட்டி பல்வேறு தரப்பு மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் சமூக சக்திகளின் அபிப்பிராயங்களைப் புறந்தள்ளிவிட முடியாது.

சமாதானம் என்பதும் இனப் பிரச்சனைத் தீர்வு என்பதும் ஐ.தே.மு-புலிகளுக்கு மாத்திரம் உரிய தனிப்பட்ட விவகாரம் அல்ல. அது இந்த நாட்டின் பல்வேறு மக்கள் பிரிவினர், பல்வேறு அரசியல், சமூக, இயக்கங்கள் சம்பந்தப்பட்ட விடயம்.

பல்வேறு சக்திகளும் பங்குபற்றக் கூடிய விதமாக, அபிப்பிராயம் தெரிவிக்கும் விதமான பொறி முறை உருவாக்கப்படாவிட்டால் முழுச் சமாதான முயற்சிகளும் பொறிக்குள் அகப்படும் நிலை ஏற்படலாம்.

ஆத்திரமூட்டல்கள், குறுகிய அரசியல் நலன்கள் மேற் கிளம்புவதற்கு வழிவகுக்கலாம். மாறி மாறி இரு பிரதான அரசியற் கட்சிகளும் பதவிக்கு

**தாகூர்**

வரும்போது ஒன்றின் முயற்சியை மற்றது மறுதலிப்பதென்பது பாரம்பரியமாகவே இங்கு நிலவி வந்தது.

அந்தப் பாரம்பரியத்திலிருந்து விலகி நின்று சிந்திக்க வேண்டிய வரலாற்று நிர்ப்பந்தம் இரு கட்சிகளுக்கும் உருவாகிவிட்டதென்றே கருத வேண்டியிருக்கிறது.

ஐ.தே.மு.வும் புலிகளும் தம் இரு தரப்பினரதும் தீர்மானங்கள் போதுமானவை, மற்றவர்களின் அபிப்பிராயங்கள் தேவை இல்லை என்று சிந்தித்தால் அது பாரிய வரலாற்றுத் தவறாகும்.

பேச்சுவார்த்தைகள் ஒரு நெருக்கடிக்குள் போய்க்கொண்டிருப்பது போல் தெரிகிறது. இதிலிருந்து மீள்வதானால் ஒரு பரந்த தளம் உருவாக்கப்பட வேண்டும்.

இந்த நாட்டின் பெரும்பான்மையான தமிழ், சிங்கள, முஸ்லீம் மக்கள் இன்னுமொரு இரத்தம் சிந்துதலையோ அல்லது தங்கள் மீது மேலாதிக்க வகைப்பட்ட, கேள்விக்கிடமற்ற ஆட்சியையோ விரும்பவில்லை.

எனவே அவர்களின் இந்த அபிலாசை நிறைவேற உழைப்பதே சகலருடைய கடமையாகவும் இருக்க முடியும்.

குறுகிய காலத் தேர்தல் நலன்களுக்காக நீண்டகால நலன்கள் அடகு வைக்கப்பட்டதன் விளைவே இந்த நாடு பேரழிவைச் சந்தித்ததற்குப் பிரதான காரணம்.

இந்த அரசியல் இருக்கும் வரை இந்த நாட்டைச் சிங்கப்பூராக மாற்ற முடியாது. இனப் பிரச்சனையையும் தீர்க்க முடியாது.

ஜனநாயகத்துடன் கூடிய இணக்கப்பாட்டு அரசியலே இன்றைய தேவை.

# அதிரடி அய்யாத்துரை



**ரெண்டெழுத்தாரோட** ஒன்று கலந்த பிறகு அவையால கொல்லப்பட்ட தங்கட தலைவர்களுக்கு நினைவுதினம் கொண்டாட கூட்டுக் கட்சிக்காரரால முடியேல்லை. ஆனாலும் அதிசயமா இந்தமுறை நவாம்பர் 19ம் திகதி திருகோணமலையில, பத்மநாபாவுக்கு நினைவுதினம் கொண்டாடியிருக்கினம் சுரேஷ் அணிக்காரர். துணிச்சலான காரியந்தான், பாராட்டாட்டால் குற்றம். அதில, சுவாரசியம் என்னவெண்டால் அந்தக் கூட்டத்தில பேச முன்வந்த பிரமுகர்கள் யாரெண்டதுதான். சம்பந்தர், சிறீகாந்தர் எல்லாம் மேடையேறியிருக்கினம். தங்கட தலைவர்மாருக்கு நினைவு தினம் கொண்டாடாத பாவத்தை இதில கழுவலாமெண்டு நினைச்சிச்சினமோ தெரியாது. அதுசரி, இவையெல்லாம் என்னத்தப் பேசுவினம்? என்ன பத்மநாபா மாமனிதரெண்டா? இல்லை, அதுவும் ஒரு துன்பியல் சம்பவமெண்டா? வீல்லங்கத்தில மாட்டுப்படப் போகினமே..!

**புலிகள் தலைவர்** பிரபாவுக்கு 200 வருடக் கடூழியத் தண்டனை வழங்கியதுக்கு எதிரா அங்கொன்றும் இங்கொன்றுமாப் போராட்டங்கள் நடந்தாலும் பொங்கு தமிழ் காலம்போல பெரும் எதிர்ப்பலைகள் கிளம்பயில்லை. இதுக்கு ஒரு முக்கிய காரணம் எங்கட கூட்டமைப்புக் காரார் இந்த எதிர்ப்புகளுக்குப் பின்னடிக்கிறதுதானாம். கூட்டமைப்பு கட்சிகளின்ர முன்னணித் தலைவர்கள் கனபேர் சட்டத்தரணிகளா இருக்கிறதால, தாங்கள் நீதிமன்றத் தீர்ப்பு ஒன்றுக்கெதிரா கண்டனக் குரல் எழுப்பினால் தங்கட உத்தியோகத்துக்கு கேடு வந்திடுமெண்ட பயத்தில கமுக்கமா இருக்கினமாம். ம்... உரிய இடம் கண்டு கொள்ளாத மாதிரி தப்பிக் கொண்டால் சாமர்த்தியம்தான்!

**ஒஸ்லோ மாநாட்டுக்கு** இந்தியா வரப்போறதில்லையெண்டு பிடிவாதமாச் சொன்ன பிறகும் காலைப் பிடிக்காத குறையாக் கெஞ்சிக் கொண்டிருக்கினம் அரசாங்கத்தாரும் நோர்வேக்காரரும். இந்தியா இடம் பெறாட்டால் அபசகுனமாப் போயிடுமெண்டு பயப்பிடுகினம். ஆரம்ப விழாவுக்கு நோர்வே இராஜதந்திரிகளுக்கு விடுத்த அழைப்பிலயாவது இந்தியாவின் நோர்வேத் தூதுவர் கலந்து கொண்டால் அதை இந்தியாவும் கலந்து கொண்டதாக் காட்டலாமெண்டு ஒரு நப்பாசைப்படுகினம். ஆனால் அதிலயும் கலந்துகொள்ளாட்டால் விசயம் பிசகொண்டெல்லோ முடியப் போகுது..?

**கடைசியா** ஒரு சாப்பாட்டுக் கதை. பட்ஜெட் விவாதத்தில ஒவ்வொரு அமைச்சரும் ஏதேதோ அபிவிருத்தித் திட்டங்கள் குடுத்திருக்க எங்கட மகேஸ்வரனார் என்ன திட்டம் குடுத்திருக்கிறார் தெரியுமோ, கோயில்களில அன்னதானம் குடுக்கப் போறாராம். கணக்கு வழக்குத் தெரியாத திட்டம் ஆற்ர வயிற நிரப்பப் போகுதோ யாருக்குத் தெரியும்?

**வரவர** சமாதானம் போற போக்குக்கு எதிர்ப்பு மேகங்கள் தெற்கு வானத்தில களைகட்டுது. ஜே.வி.பி, சிஹல உறுமய ஆரம்பந் தொட்டே எதிப்பெண்டது தெரிஞ்ச விசயம். ஆனால் பி.ஏயும் இப்ப மும்முரமா எதிர்க்கிற கட்டத்துக்கு வந்திட்டினம். நோர்வேய பக்கசார்பா நடக்கிறதாச் சாடி, அமெரிக்கா, பிருட்டனையும் பயங்கரவாதத்துக்குப் பரிசளிக்கினமெண்டு வலு காட்டமான அறிக்கையொண்ட விட்டிருக்கினம். இந்தியாவும் இப்ப தன்ர அதிருப்திய சில அறிகுறிகளில வெளிப்படுத்திறதாத் தெரியுது. எல்லாரும் வெண்ணை திரளுறதா வாய்ப்பாத்திருக்கக்க. கீழால சட்டி வெடிப்புக் காணுது. உரிய நேரத்தில 'பச்' போடத் தவறினால், பிறகு எல்லாமே அடுப்புக்குள்ளதான்!

**பொலிஸ்** செய்ய வேண்டிய வேலையெல்லாத்தையும் அங்க ரெண்டெழுத்தார் பாரமெடுத்திட்டதால, வடக்கு கிழக்கில பொலீஸாருக்கு இப்ப நல்ல ஓய்வாம். காலுக்கு மேல கால் போட்டுக்கொண்டிருந்து டீவீ பாக்கிறதுதான் பொழுதுபோக்கா மாறிவருதாம். எங்கட நீதிபதிமாரும் கெதியில வீட்டுக்கு சாய்மனைகள் ஓடர் பண்ணவேண்டி வருமெண்டு கொஞ்சம் கவலையோட சொன்னார் ஒரு சட்டத்தரணி. ஏனெண்டால், அவையின்ர நீதிமன்றங்கள் இயங்கத் துடங்கிட்டால் தனக்கு வழக்குப் பேச வாய்ப்பில்லாமல் போடுமெண்ட கவலை அவருக்கு. ம்... வட் டு டு?

# ஸ்போர்ட்ஸ்

## மேற்கிந்தியத் தீவு முன்னிலையில்

இந்திய அணியுடனான 7 போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரில் ஆடிவரும் மேற்கிந்திய தீவுகள் அணி 5 ஆவது போட்டியில் வெற்றி பெற்றதோடு 3-2 என்ற அடிப்படையில் முன்னிலையில் நிற்கிறது.

திங்களன்று இடம்பெற்ற போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணி 5 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 50 ஓவர் முடிவில் 8 விக்கெட் இழப்பிற்கு 290 ஓட்டங்களைப் பெற்றது கங்குலி (53) ஷெவாக் (52).

மேற்கிந்திய தீவுகள் அணியின் கிரிஸ் கோல் 107 பந்துகளுக்கு முகம் கொடுத்து 101 ஓட்டங்களைப் பெற்று அணியின் வெற்றிக்கு வழிவகுத்தார்.

இதேவேளை அடுத்த இரண்டு போட்டிகளிலும் கங்குலி இடம்பெற மாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

முதுகுவலி காரணமாக கங்குலியை அடுத்துவரும் போட்டிகளில் ஓய்வெடுக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

## தென்னாபிரிக்காவுக்கு டெஸ்ட் தொடர் வெற்றி

பிரிட்டோரியா சென்ச்சூரியன் பாக்கில் நடைபெறும் இலங்கை தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் நான்காவது நாள் முடிவின் போது இலங்கை அணி அதன் இரண்டாம் இனிங்ஸில் 3 விக்கெட் இழப்பிற்கு 180 ஓட்டங்களைப் பெற்று 55 ஓட்டங்களால் முன்னணியில் இருந்தது.

முதல் இனிங்ஸில் இலங்கை அணி 323 ஓட்டங்களைப் பெற்றது. தென்னாபிரிக்கா 428 ஓட்டங்களைப் பெற்றது.

அனேகமாக இப்போட்டி வெற்றி தோல்வி இன்றி முடிவடையும் சாத்தியமுள்ளது.

அவ்வாறு நிகழுமாயின் இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் வெற்றியை தென்னாபிரிக்கா பெற்றுக் கொள்ளும்

## சிந்தியா பதில்கள்

**★ தென்னாபிரிக்காவுடனான முதல் டெஸ்ட்டில் நம்மவரின் தோல்வி?**

ஜெ.திவ்வியராஜன், கிருலப்பனை.

தன்னுடைய தவறை மறைத்துத் தன்னைத் தற்காத்துக் கொள்ள வேண்டும் என்ற நிலைமைக்கு வந்துவிட்ட தலைவரின் சரிவுதான் அதிக ஏமாற்றத்தைத் தந்தது.

**★ உண்மையான மனிதர்களைக் காண்பது ஏன் அரிதாக இருக்கிறது?**

எம். ஹிஸ்புல்லா, பிரைந்துறைச்சேனை.

மனிதர்கள் விரும்புவது உண்மைகளை அல்ல; வாய் வல்லானொருவன் மகிழ்ச்சி தரும்படியாகச் சொல்லும் பொய்களை!

**★ ரூபவாஹினி 'ஐ' அலைவரிசையில் தமிழ் நிகழ்ச்சிகள் களை கட்டுகின்றனவே?**

ஏ.ஜே. டியானா, கொழும்பு-13.

நிகழ்ச்சி நேரங்களுக்கான விளம்பரங்களைக் கூட புதிதாகத் தயாரிக்காமல் தொடக்க விளம்பரமே தொடருகின்ற நிலையில், அதிகம் சந்தோசப்பட்டுக் கொள்ள இன்னமும் அறிகுறிகள் தென்படவில்லை என்றே சொல்வேன். இன்ன நேரம் இன்ன நிகழ்ச்சி என்று கறாரான நேர அட்டவணையை அவர்கள் வெளியிடும் வரைக்கும் இடைக்கால ஏற்பாடே இது என்பது போலத் தெரியும் தமிழ் நிகழ்ச்சிகளை நம்பிக்கையின்றியே பார்க்க வேண்டியிருக்கிறது.

**★ பட்ஜெட்டில் நம் அன்றாடக் கவலைகள் தீருவதற்கு எதுவுமில்லையே சிந்தியா?**

கே. அக்கீத், செட்டிகுளம்.

அதில் இல்லாவிட்டால் என்ன? டிசம்பர் மாதம் முழுவதும் வீதிகளில் வண்ண விளக்குகளும் வாண வேடிக்கைகளுமாய் மக்களை மகிழ்ச்சிப்படுத்தப் போவதாய் உள்துறை அமைச்சர் உறுதி அளித்திருக்கிறார். கவலையை விடுங்கள்!

**★ தெரியாததைத் தெரிந்து கொள்ளத்தானே கேள்வி-பதில்?**

எஸ்.சுதாஷ், பூண்டுலோயா.

ஆமாம். பதில் சொல்லப்படாமல் மலையளவு குவிந்து கிடக்கும் உங்கள் கேள்வி அட்டைகளைப் பார்க்கும் போதெல்லாம் எனக்குத் தெரியாதவை எவ்வளவு என்று நான் தெரிந்து கொள்வதற்கும்.

**★ஆண்களுக்கு நாணம் தேவையில்லையா?**

மார்க்கண்டு வாணி, கிரான்.

பிழை செய்தவருக்கு நன்னயம் செய்து அவர் நாண விடுவது இருபாலாருக்கும்தான் சொல்லப்பட்டிருக்கிறது. "தாமரை வதனம் சாய்த்து தனு நெடுந் தரையில் ஊன்றி" மாமியார் கூட்டத்திடையே வந்த புது மருமகனைப் போல் நெளிந்த வீராதி வீரர்களெல்லாம் இருந்திருக்கிறார்கள். இது பெண்களுக்கு மட்டும்தான் வேண்டும் என்று பிழை பேசியவர்களைப் பார்த்துத்தான் பொங்கினான் மீசைக்காரன்.

**★ இறைவன் உங்களுக்கு இரண்டு மனங்களைக் கொடுத்தால் எதை நினைத்து, எதை மறக்க விரும்புவீர்கள்?**

ஜே.லக்கி, பெரியகல்லாறு.

முடியுமாக இருந்தால்...

எனக்குள்ளிருந்த வெறியைத் தணித்து ஆசுவாசமும் பெருமையும் கொள்ள- மீட்டுத் தரப்பட்ட பீடுடைய இன வாழ்வை நினைத்து, என் சார்பாக நடந்த குரூரக் கொலைகளை எல்லாம் நான் மறந்துவிட வேண்டும்.

**★ முதலிரண்டு ஒருநாள் போட்டிகளிலும் இந்தியாவை வென்ற மேற்கிந்திய அணியினரின் விளையாட்டு எப்படி?**

ரா.ரஞ்சன் விஜயசிங்க, இராகலை.

முதலாவது போட்டியில் கடைசிப் பந்தில் பவுண்டரி விளாசிய சர்வான் மற்றொரு மியான்டாட் ஆக மனதில் பதிந்தார். 250க்கு மேலான ஓட்டங்களை இன்னொரு அணியினர் துரத்தி வெல்லும் போது அந்தப் போட்டியில் கிடைக்கிற பரபரப்பே த்ரில்லான அனுபவம்தான். வெறுப்பேற்படுத்தியவர்கள் இந்திய இரசிகர்கள். வியப்பேற்படுத்திக் கொண்டிருப்பவர் செவாக்.

**★ சிறந்த நடிகருக்கான விருதை கமல் ஹாசனுக்கும், சிறந்த நடிகைக்கான விருதை சிம்ரனுக்கும் சேர்த்தே கொடுத்திருப்பது யாருடைய குசும்பு?**


நிஹாறா ஜெஸபர், புதிய காத்தான்குடி-6.

இப்போதைய குசும்புக்கு முன்பே அவர்களிருவரும் சிறந்த நடிகர்கள் தான்.

**★ உங்கள் உதவியால் முன்னேறியவர்கள் என்று யாராவது உண்டா சிந்தியா?**

சு.கோபிசங்கர், செம்புகவத்தை.

இன்றிருக்கும் பிரபலமான எழுத்தாளர்கள் பலரும் என் உதவியாலும் முன்னுக்கு வந்தவர்கள்தான். நானும் ஒரு புத்தகம் எழுதியிருக்கிறேன் என்று சொல்லி, அதற்கு முன்னுரை கேட்டுப் போய் அவர்களுடைய படைப்பாற்றல் நேரத்தைப் பறித்துக் கொள்ளாமல் இருந்தேன் என்பதே அவர்களுக்கு நான் செய்த பெரிய உதவிதானே!



**★ முன்னொரு காலத்தில் அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் ஆகியோரைப் பேச விடாமல் பாராளுமன்றத்தில் சிங்கள எம்.பி.க்கள் கூச்சலிட்டார்கள். அந்த நிலைமை மாறி, இப்போது வீரவங்ச எம்.பி.யைப் பேசவிடாது தமிழ் அமைச்சரும் எம்.பி.க்களும் கூச்சலிட்டிருப்பது நாட்டில் நடந்திருக்கும் முன்னேற்றத்தின் அறிகுறி இல்லையா?**

எம். தர்ஷன், கொழும்பு-6.

என்னைப் பொறுத்தவரை சிங்களக் கூச்சலாயிருந்தாலும் சரி, தமிழ்க் கூச்சலாயிருந்தாலும் சரி பாராளுமன்றத்தில் இவர்கள் சண்டையிடும் முறையைப் பார்க்கிறபோது, நம் எல்லோரினதும் பிரதிநிதிகள் இவர்கள் என்பது நினைவில் உறைத்து வெட்கப்பட வைக்கிறது. வேறு பல நாடுகளில் சட்டமன்றங்கள், நாடாளுமன்றங்கள் என்றால் அவை நகைச்சுவைச் சுரங்கங்களாக இருக்கின்றன. அங்கு போகிறவர்களின் புத்திக் கூர்மையையும், எதிராளி சொல்கிற விசயத்துக்கு அதே வேகத்தில் திருப்பியடிக்கிற திறமையையும் பத்திரிகைகளில் படிக்கிற போது நம்மை நினைத்துக் கழிவிரக்கம் மேலிடுகிறது. உதாரணம் ஒன்று தருகிறேன்.

அமைச்சரைப் பதில் சொல்ல விடாமல் எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் தாக்கிப் பேசிக் கொண்டிருக்கிறார். அமைச்சர் குறுக்கிட்ட போதெல்லாம் "நான் இன்னும் முடிக்கவில்லை" என்று உறுப்பினர் தொடர்ந்து சத்தமிட்டுக் கொண்டிருந்தார். பல முறை குறுக்கிட முயன்றும் இதே பதிலே வந்து கொண்டிருந்தது ஸ்ரீ. ஒரு வழியாக உறுப்பினர் முடித்ததும் அமைச்சர் எழுந்து கேட்டார். "இப்போது முடித்துவிட்டீர்களா?" "ஆம்" என்றார் அமைச்சர். சபை சிரிப்பால் அதிர்ந்தது.

## இலக்கிய நயம்

### விழிக் கடலில் விசம அலைகள்

தருவது முழடிஸ்யன்

விடியாமல் இருந்துவிடக் கூடாதா?" என்றாள் அஸ்வினின் கைச்சிறைக்குள் இருந்த சித்ராங்கி.

அஸ்வினிடமிருந்து எந்தப் பதிலும் வராததைக் கண்டு, அவன் பிடிக்குள்ளேயே சிறிது அசைந்த சித்ராங்கி கேட்டாள் "என்ன தூங்கிவிட்டீர்களா?"

"இல்லை"

"அப்போ என்ன சத்தத்தையே காணோம்..."

அஸ்வின் சிரித்தான்.

"இதற்கும் சிரிப்புத்தானா?" என்றாள் நாடகப் பாணிக் குரலில்.

"இல்லை சித்ரா, விடியலை எதிர்பார்ப்பதுதான் உலக இயற்கை. நீ இயற்கைக்கு மாறாக இருக்கிறாய். இருளையே விரும்புகிறாய்..."

"ஏன் உங்களுக்கு இரவு வேண்டாமா?" என்றாள் இகழ்ச்சி ததும்பிய குரலில்.

அஸ்வின், அவளது அடர்ந்த கூந்தலைச் சரி இரு பகுதிகளாகப் பிரித்து வழிய விட்ட உச்சி வகிட்டைப் பார்த்தான். அவளது கூந்தலின் நறுமணத்தை நெஞ்சு முழுக்க நிரப்பினான்.

மயக்கத்தோடு அவளது உச்சந் தலையில் கன்னத்தைச் சாய்த்தபடி " நீ அருகில் இருக்கும் போது எனக்கு இரவு பகல் தெரிவதில்லை" என்று உணர்ச்சியில் தோய்ந்த சொற்களை உதிரவிட்டான். "ஏன் தெரியவில்லை?" என்று மெல்ல வினவினாள் சித்ராங்கி அவன் மார்பில் மேலும் இழைந்தவாறு.

"தெரியவில்லை. ஒருவேளை உன் கண்களின் ஒளியில் இரவும் விடிந்து விடுகிறதோ என்னவோ? அல்லது...."

"அல்லது?"

"இரவும் பகலும் ஒன்றாயிருப்பது பார்வையற்றவர்களுக்குத்தானே? என் கண்களும் குருட்டுக் கண்கள் ஆகிவிடுகின்றனவோ?"

"குருட்டுக் கண்களில்லை, திருட்டுக் கண்கள்" சொல்லியபடி தன் முதுகுப் புறத்தால் அவன் மார்பை அழுத்தினாள் சித்ராங்கி.

"அதுவும் சரிதான்" என்று சொல்லிய அஸ்வினின் வலது கை அவள் கழுத்தைச் சுற்றி வந்து மார்புக்குச் சற்று மேற்புறத்தில் பதிந்தது. அவள் சற்றுச் சங்கடத்துடன் நெளிந்தாள். அஸ்வின் கை மேலும் கீழிறங்கியது. உணர்ச்சிகளெல்லாம் அவன் வசப்பட்டுக் கிடந்த நிலையில் சித்ராங்கி கேட்டாள் "எது சரிதான்?" என்று.

"அசையும் ஜீவராசிகள் அனைத்தும் அடங்கிவிட்ட இரவுப் பொழுதில் அடங்காதவை இரண்டு. அதிலொன்று திருட்டு..."

"மற்றது?"

"காமம்" இதைக் குனித்து கன்னத்தோடு கன்னத்தை இழைத்தவாறே கூறிய அஸ்வின், முகத்தை மேலும் சரித்து உதடுகளை அவள் கழுத்தில் புதைத்தான். மல்லிகைப் பந்தலின் ஒரு கம்பத்தில் முதுகைச் சாய்த்து அமர்ந்திருந்த அஸ்வினின் மார்பில் தன் முதுகைச் சாய்த்து அமர்ந்திருந்தாள் சித்ராங்கி. அவன் கைகளும் உதடுகளும் படப்பட அவள் அங்கங்கள் துடித்தன. சூழலின் குளுமை வேறு அவளெதிரே சொர்க்கத்தைச் சிருஷ்டித்திருந்தது. பந்தலிலிருந்த மல்லிகை மலர்களும் இலைகளும் கொடியும் உருவாக்கியிருந்த இருளைக் கிழித்து உள் நுழைந்த சந்திர கிரணங்கள் நிலத்தில் வட்ட வட்டமான ஒளி முத்துக்களை இழைத்திருந்தன. அந்த இருளும் ஒளியும் கலந்த வட்டங்கள் அவர்கள் உடலிலும் சித்திரங்களை வரைந்திருந்தன.

அஸ்வின் சித்ராங்கியின் முகத்தை நிமிர்த்திப் பாதி இருளிலும் ஒளியிலுமாகப் பிரகாசித்த அழகை இரசித்தான். அவள் மோவாயைக் கையில் ஏந்தியபடியே, "கிரகணம் பிடிக்கும் நேரத்தில் நீ வெளியே வந்து விடக் கூடாது" என்று மெல்லச் சொன்னான்.

"ஏன்?"

"நீதான் நிலா என்று நினைத்து ராகு உன்னைப் பிடித்துக் கொள்ளப் போகிறான்."

"அடடா நல்ல உவமை!" என்று முகத்தை வலித்தாள் சித்ராங்கி.

"பாராட்டுக்கு நன்றி. உவமை என்னுடையதல்ல, மகாகவி காளிதாசனுடையது."

"அதுதான் பார்த்தேன். சந்திர கிரகணத்துக்குக் காரணம் தெரியாத வெறும் புளுகுக் கவியாகிவிட்டீர்களோவென்று."

"உண்மைகளை விட உவமைகளும் ஊகங்களும் எப்போதும் அழகானவை சித்ரா! அதிலும் காளிதாசன் அழகிய உவமைகளின் களஞ்சியம்."

"எல்லாக் கவிகளுமே பெண்ணை வர்ணிப்பதில் பித்தர்கள்தான்!"

"வர்ணிப்பதில் மட்டுமல்ல"

"என்ன?" என்று கேட்டபடியே அவனை நோக்கிச் சுழன்று திரும்பினாள் சித்ராங்கி. அந்தத் திரும்பலில் அவள் தேகம் முழுவதும் அவன் உடலில் மோதி இழைந்தது. மேற்கொண்டு இருவரும் பேசமுடியாமல் சில நிமிடங்கள் கரைந்தன. இதயங்கள் இணைந்தன. இதயத்தை உள்ளே ஒளித்து வைத்திருந்த வெளிப்பகுதிகளும் இணைந்து அழுந்தின. அந் நிலையில் இருவர் உதடுகளும் இணைந்தன.

விடுவித்துக் கொண்டு அவள் விலக முற்பட்ட வேளையில் அஸ்வின் சொன்னான். "கவியின் வர்ணனைகளெல்லாம் எத்துணை அழகானவை, என் சித்ராங்கியைப் போல..."

கனவிற் போலக் கேட்ட அவன் குரலுக்கு 'ம்ஹூம்' என்ற முனகலைப் பதிலாய்த் தந்து அனிச்சையாய் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

அஸ்வின் அவள் காதுக்குள் பேசினான்.

"காளிதாசனின் விலாசினிதேவி தனிமைக்குக் காத்திருக்கவில்லை. தன் தோழிகளின் எதிரிலேயே அவன் உதடுகளோடு தன் உதடுகளைச் சேர்க்க முயன்றாள் பாவம், அங்கே அவன் முகத்தைத் திருப்பிக் கொண்டான். "ஏன் முகத்தைத் திருப்புகிறாய், வெட்கமா?" என்று கேலி பேசினாள் தேவி. காளிதாசன் சமாளிக்கிறான். "இல்லை தேவி, எனக்கு முன்னால் உன் முகமாகிய பூரண சந்திரன் இருக்கிறது. சந்திரன் முன்னால் இருந்தால் பின்னால் நிழல் விழ வேண்டுமே, விழுகிறதா? என்று பார்த்தேன்" என்று வழிந்த அசடை வெற்றிகரமாகத் துடைத்துக் கொண்டான் அந்த மகாகவி!"

"அடடா, எல்லாம் ஒரே வம்சம்!" என்றாள் சித்ராங்கி தன் அழகிய நயனங்களை அவன் விழிகளில் நாட்டி.

அந்த விழிக்கடலில் தாண்டவமாடிய விசம அலைகள் அஸ்வினைக் கபளீகரம் செய்துவிடுவது போல் நிலைத்து விழித்தன.

தடுமாறியபடியே, "ஒன்றல்ல இரண்டு பாம்புகள் "என்றான். விசமம் அழிந்து வினா எழுந்தது அவள் விழிகளில்.

"நிலவைப் பாம்பு விழுங்கும் போது, அதைத் தடுக்க முடியாமற் போனாலும், அந்த நிலவுக்காக வருந்தவாவது ஆட்கள் இருப்பார்கள். இதோ! இந்தப் பாம்புகள் என்னை விழுங்குகின்றனவே...உன் பார்வையின் விசம் தீண்டி என் நெஞ்சு துடிக்கிறதே... எனக்கு இரக்கம் காட்ட இங்கு யாரிருக்கிறார்கள்?"

அவள் இமைகளை மூடினாள். அவன் அந்த இமைகளின் மீது முத்தமிட்டான். உடல்கள் நெருங்கின. உணர்ச்சிகள் கரை உடைத்துக் கொண்டன.

திங்கள் அரவுறின்
தீர்க்கலா ராயினும்
தங்காதல் காட்டுவர்
சான்றவர் இன்சாயல்
ஒண்டொடி நோய் நோக்கிற்
பட்ட என் நெஞ்சநோய்
கண்டுங்கண்
ணோடாது இவ்வூர்

(கலித்தொகை: 23: 17-20)

# தேடுதல் வேட்டை



சீனாவின் தினமென் சதுக்கத்தில் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் வருடாந்தப் பொதுக் கூட்டம் கடந்த வாரம் நடந்து முடிந்தது.

இக் கூட்டத்தின் போது சீன ஆளும் கட்சியான கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரும் ஜனாதிபதியுமான சியாங் செமின் தனது பதவிக் காலத்தை முடித்துக் கொண்டு உப ஜனாதிபதியாக இருந்தவரிடம் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஒப்படைத்தார்.

இந்த மாநாட்டை முன்னிட்டு தினமென் சதுக்கம் ஒரு வார காலமாக விழாக் கோலம் பூண்டிருந்தது. நாட்டின் முக்கிய தலைவர்கள் வெளிநாட்டு இராஜதந்திரிகள் என ஏராளமான வி.ஐ.பிக்கள் மாநாட்டில் கலந்து கொண்டார்கள்.

இந்த வி.ஐ.பிக்களின் வருகைக்காகத் தினமென் சதுக்கம், புதுப்பிக்கப்பட்டு அழகுபடுத்தப்பட்டது.

சதுக்கத்தின் அருகிலுள்ள பலகைகளில் ஒட்டியிருக்கும் சப்பிவிட்டுத் துப்பிய சுவிங்கங்களைக் கழற்றிச் சுத்தம் செய்யும் பணி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

பொலிஸார், இவ்வாறு ஒட்டியிருந்த நான்கு இலட்சம் சுவிங்கங்களை இந்த இடங்களிலிருந்து கழற்றி அப்புறப்படுத்தியுள்ளார்கள்.

சுற்றுலாப் பயணிகள் நடனமாட அவர்களிடமிருந்து ஆசீர்வாதம் பெறுவது போல் பொலிஸார் குனிந்து கொண்டு சுவிங்கம் தேடும் காட்சிதான் இது.



# கப்பலேறிய விமானம்

விமானத்தைப் பார்ஸல் பண்ணிக் கப்பலில் ஏற்றி வைத்திருக்கிறார்கள். பிலிப்பைன்ஸின் தலைநகரான மணிலாவில்தான் இந்த விமானம் விழுந்து நொருங்கியது. மணிலாவிலிருந்து 34 பயணிகளுடன் புறப்பட்ட இச் சிறிய விமானம் சிறிது நேரத்திலேயே உடைந்து வீழ்ந்தது.

இந்த அனர்த்தத்தில் 18 பேர் கொல்லப்பட்டார்கள். ஏனையவர்கள் கடும் காயங்களுடன் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆழம் குறைந்த கடற்பகுதியில் வீழ்ந்த விமானத்தை எடுத்து வேறொரு இடத்திற்குக் கொண்டு செல்வதற்காக இவ்வாறு கயிற்றால் கட்டி கப்பலில் ஏற்றி வைத்துள்ளார்கள்.

உலகம் முழுவதிலும் இடம்பெறும் மனித உரிமை மீறல்களைப் பட்டியலிட்டு அவற்றுக்கெதிராகக் குரல் கொடுத்து வரும் அமைப்பு சர்வதேச் மன்னிப்புச் சபை. இந்த மனித உரிமை அமைப்பு நிறுவப்பட்டு 40 ஆண்டுகளாகின்றன. தங்களது அமைப்பின் 40 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு சர்வதேச மன்னிப்புச் சபையின் செயற்பாட்டாளர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தினார்கள்.

# மன்னிப்பின் பிறந்தநாள்

'சிறைக் கைதிகளின் மனச் சாட்சி' என்ற தலைப்பில் பாரிஸில் உள்ள பியவ்ட்பேர்க் கலை நிலையத்திற்கு முன்பாக வைக்கப்பட்டிருந்த பாரிய பலகை மனிதன் .



# தகவல் பெட்டி

தொழிற்சங்கங்கள் ஆர்ப்பாட்டங்கள், எதிர்ப்பு ஊர்வலங்கள் போன்றவற்றை நடத்தும் போது நமது நாட்டில் என்றால் பெரும்பாலும் பொலிஸாரின் தடியடிப் பிரயோகம் கிடைக்கும்.

வீதியால் சென்று கொண்டிருக்கும் அப்பாவிகளும் சேர்ந்து காயமடைவது போன்ற சம்பவங்கள் நடப்பதுண்டு.

இங்கே படத்தில் காண்பதும் ஒரு ஊர்வலம்தான். வித்தியாசமானது மட்டுமன்றி பார்ப்பவர்களின் கவனத்தை ஈர்க்கக் கூடியதும் கூட. பிரிட்டனில் உள்ள தொழிற்சங்கமொன்று சம்பள அதிகரிப்புக் கோரி அந் நாட்டுப் பாராளுமன்றத்திற்கு முன்பாக ஊர்வலம் நடத்துகிறார்கள்.

கையிலேந்தி இருப்பது பென்ஸ் நாணயம்.

(இலங்கையில் இப்படிப் பணத்தை உயர்த்திப் பிடித்துக் கொண்டு ஊர்வலம் செய்தால் அதைப் பறித்துக் கொண்டு போய்விடுவார்கள்).

# சம்பள உயர்வு வேண்டும்



# விஜய்யின் ஆசை

'பகவதி'யுடன் 33 தமிழ்ப் படங்களில் நடித்துள்ள விஜய், 'முதல்வன்' உருவான நேரத்தில் ஒட்டுமொத்தமாகக் கால்ஷீட் கேட்ட காரணத்தால் ஷங்கர் இயக்கத்தில் நடிக்க முடியாமல் போனதை நினைத்து வருத்தப்படுகிறார். "இதுவரை பல டைரக்டர்கள் படத்துல நடிச்சுட்டேன். நான் ரொம்ப ஆசைப்படறது மணிரத்னம் சார் டைரக்ஷன்ல ஒரு படத்துலயாவது நடிக்கணும். அப்புறம் ஷங்கர் சார் டைரக்ஷன்ல நடிக்கணும்" என்பது விஜய்யின் ஆசை.



விஜய்-ரீமாசென்
படம்: பகவதி

# 'பகவதி' சினிமா விமர்சனம்

எங்கிருந்துதான் இப்படிப்பட்ட கதையைக் கண்டு பிடிச்சுக் கொண்டு வருகிறார்களோ தெரியவில்லை! ஏழைக் குடும்பத்து இளைஞனான விஜய்யின் தம்பி மந்திரி மகளைக் காதலிக்கிறார். சாதாரண டீக் கடைக்காரன் தம்பிக்கு என் மகளைக் கொடுப்பதா என வழக்கம் போல் மந்திரி மல்லுக்கு நிற்கிறார். அந்தக் கலவரத்தில் தம்பி இறந்து போக தம்பியின் வாரிசைக் காப்பாற்ற ஆயுதம் தூக்குகிறார் விஜய். அப்புறம் என்னாகிறது என்பது கதை. விஜய்க்கே உரிய மசாலாத்தனங்களோடு சொல்ல முனைந்திருக்கிறார்கள். முதல் பாதி பரவாயில்லை. இரண்டாவது பாதியில் கொடுத்த காசுக்கு நிம்மதியாகத் தூங்கலாம் ஏ.ஸி. இருக்கிற தியேட்டராக இருந்தால்.

படம் தொடங்கும் போது 'பாட்ஷா' ஸ்டைலில் படு ஸ்பீடாகப் போகிறது. அதுக்கப்புறம் அங்கங்கே ஸ்பீட் பிரேக்கர்ஸ்.

விஜய்யின் ஃபார்முலா என்ன என்பதை மிகச் சரியாகப் பிடித்திருக்கிறார் இயக்குநர் ஏ.வெங்கடேஷ். படு பவ்யமாக நடந்து கொள்வது... ஸ்டைலாக டீக் கிளாசைத் தூக்கிப் போட்டுப் பிடிப்பது.... சண்டைக் காட்சிகளில் தூள் கிளப்புவதென்று ஜமாய்க்கிறார். அதிலும் ரீமாசென்னிடம் காலியான ரைஃபிலைக் கொடுத்துவிட்டு மல்லுக்கு நிற்பது புதுசு. இரசிக்கும்படியாகப் பண்ணியிருக்கிறார்கள்.

தம்பிக்காகப் பெண் கேட்டுப் போகும் போது... மந்திரி ஆசிஷ்வித்யார்த்தி "என் ஷூவைத் துடைத்துவிடு... அதற்குள் யோசித்து சொல்கிறேன்" என்று சொல்ல... கொஞ்சமும் யோசிக்காமல், தோளில் கிடக்கும் துண்டால் துடைத்துவிடுவது நெகிழ்ச்சி என்றாலும் ரஜனி படம் ஞாபகத்துக்கு வருவதைத் தவிர்க்க முடியவில்லை!

அப்பாவியான விஜய் ஆயுதம் தூக்குகிற காட்சியை இயல்பாகச் சொல்லியிருந்தாலும் 'ரன்' படம் பார்த்த ஞாபகம் வந்து போகிறது.

கலகலப்பான... கஷ்டத்துக்கு உதவுகிற ஆசாமி என்கிற ஒரே காரணத்துக்காக.... ஒரு நீதிபதியின் மகளான ரீமாசென்னுக்கு காதல் வருகிறது என்பதெல்லாம் ஸாரி டூமச். ரீமாவுக்கு வயசாயிருச்சா... அல்லது ரீமாசென் மீது கேமராமேனுக்குக் கோபமா என்று தெரியவில்லை! சில இடங்களில் மட்டுமே இளமை!

ஆசிஷ்வித்யார்த்தி இன்னும் எத்தனை நாளைக்குத்தான் உட்கார்ந்த இடத்திலிருந்து உறுமிக்கொண்டிருக்கப்போகிறார் என்பது தெரியவில்லை. வில்லன் பவர்ஃபுல்லான ஆள் என்று சொல்கிறார்கள். ஆனால் அதற்கேற்ப காட்சிகளோ... புத்திசாலித்தனமோ இல்லாமல் அப்பாவியாகக் காட்டியிருக்கிறார்கள். விஜய்யை நேருக்கு நேர்

## கவனமாக நடிக்கும் சிம்ரன்

இப்போதும் சிம்ரனின் கால்ஷீட் படு பிஸிதான். முன்பு மாதிரி அதிகப்படியான படங்கள் இல்லை என்றாலும் ஒவ்வொரு படத்தையும் கவனமாக ஏற்று நடித்து வருகிறார் அவர். குறிப்பாக, தன்னைக் கீழிறக்கி விடக் கூடாது என்பதில் படு உஷாராக இருக்கும் நடிகை ஒவ்வொரு படமாக நடிக்கலாம் என்ற முடிவிலும் இருக்கிறார். அதிலும் முன்னணி நடிகர் மற்றும் இயக்குநரின் படங்கள் என்றாலே அவர்கள் கேட்கிற கால்ஷீட்டைக் கொடுக்கிறார். அந்த அளவுக்குக் கெடுபிடிகள் இல்லாமல் நடந்து கொள்கிறார். அதனால் புதுமுக இயக்குநர்கள் கூட இப்போது சிம்ரனிடத்தில் தேவையான நடிப்பைக் கேட்டு வாங்கலாம் என்கிற மனநிலைக்கு இப்போது வந்திருக்கிறார்கள்.

## பொங்கல் வெளியீடாக விஜயகாந்தின் 'சொர்க்கத் தங்கம்'

முதன்முறையாக கே.பாக்யராஜ் இயக்கத்தில் விஜயகாந்த் நடிக்கும் படம் 'சொர்க்கத் தங்கம்'. இதில் கதாநாயகியாக சவுந்தர்யா நடிக்கிறார். விஜயகாந்தின் தங்கையாக சுமித்ராவின் மகள் உமா நடிக்கிறார். தற்போது இந்தப் படத்தில் விஜயகாந்தைத் திருமணம் செய்ய ஏங்கும் பெண்ணாக சுவாதி ஒப்பந்தமாகி இருக்கிறார். அவரது அண்ணனாக பிரகாஷ்ராஜ் நடிக்கிறார். இந்தப் படத்தின் படப்பிடிப்பு பொள்ளாச்சியில் இடைவிடாமல் நடந்து வருகிறது.பொங்கலன்று படம் வெளியாகிறது.

## ஜோதிகாவும் ரீமாசென்னும் ரொம்ப குளோஸ்

'தூள்' படத்தில் விக்ரமுடன் இணைந்து நடிக்கும் ஜோதிகாவும், ரீமாசென்னும் போட்டி போட்டுக் கொண்டு ஒருவரை ஒருவர் கொஞ்சி மகிழ்வதை நம்ப முடியாமல் பார்த்து இரசித்துக் கொண்டிருக்கின்றனர் அந்தப் படப்பிடிப்புக் குழுவினர். இரண்டு ஹீரோயின்கள் இருந்தாலே ஷூட்டிங் ஸ்பாட்ல ஏதாவது சண்டை சச்சரவு இருக்கும்.

ஆனால், 'தூள்' ஷூட்டிங் ஸ்பாட்ல அந்தப் பிரச்சனையே கிடையாது. ஜோதிகா சீன் படமாகிறப்ப ரீமா பார்த்துக்கிட்டு இருப்பார். ரீமா சீன் படமாகிறப்ப... ஏதாவது ஐடியா கொடுப்பார் ஜோதிகா.

ஒற்றுமை வாழ்க.



அருண்குமார்-பிரியங்கா திரிவேதி
படம்: ஜனனம்

# மினி சினி

★ 'பிதாமகன்' படத்தில் டைரக்டர் பாலாவுக்கும் விக்ரமுக்கும் இடையே தகராறு. அதனால் விக்ரமுக்குப் பதில் முரளி நடிக்க வைக்கப்படுகிறார் என்ற தகவலை முரளியே பரப்பி விட்டுள்ளார்.

இது தெரிந்த பாலா, முரளியைக் கண்டித்து இருக்கிறார். "விக்ரமும் சூர்யாவும்தான் இணைந்து நடிக்கின்றனர். அதில் எந்தவித மாற்றமும் இல்லை" என்கிறார் பாலா.

★ 'ஜெய்' படம் வெளிவந்து அதன் வெற்றிச் செய்தியைக் கேட்டதும் திருமணம் செய்து கொள்ள இருக்கிறாராம் பிரசாந்த்.

★ 'பாண்டவர் பூமி' படத்துக்குப் பின் திரையுலகில் தலைகாட்டாமலிருந்த ராஜ் கிரண் 'செட்டிநாடு ஹவுஸ்' படத்தில் அதிரடியாக இரட்டை வேடத்தில் நடிக்கிறார். ஒன்று வழக்கம் போல் முரட்டு வேடம், இன்னொன்று காமெடி கலந்த வேடம். இந்த இரண்டு வேடங்களுக்கும் ஜோடிகளாக மீனாவையும், சிம்ரனையும் நடிக்க வைக்க முயற்சி நடந்து வருகிறது.

★ ஏவி.எம். தயாரிக்கும் படத்திலிருந்து ஸ்ரீகாந்த் விலகியதும், ஷாமை நடிக்க வைக்கப் பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. இதே போல் சரண் இயக்கத்தில் ஸ்ரீகாந்த் நடிப்பதாக இருந்த படத்தில் இருந்தும் விலகிக் கொண்டார்.

★ 'அன்பே சிவம்' படத்தை முடித்துவிட்டு, நவம்பர் ஏழாம் தேதி தன் பிறந்த நாளைக் கொண்டாடிய கையோடு வெளிநாடு செல்கிறார் கமல். இரண்டு மாதங்களுக்குப் பின்தான் திரும்புகிறார். அடுத்த படத்துக்கான ஆயத்தம்?

அடுத்து எந்த நடிகரை இயக்கலாம் என்று காத்துக் கிடந்த மணிரத்னமும், அடுத்த இயக்குநரைத் தேடிக்கொண்டிருந்த கமல்ஹாசனும் ஒருவரோடொருவர் கைகோர்க்கிறார்கள். இருவரின் அடுத்த படமும் அதுதான்.

★ என்னதான் முதல் படம் வெற்றியடைந்தாலும் அந்தப் பட நாயகி அடுத்த படத்திலிருந்துதான் புகழ் பெற ஆரம்பிப்பார்.

ஆனால், த்ரிஷா கதை வேறு. முதல் படம் இன்னும் ரிலீஸாகவில்லை. முதலில் ரிலீஸாகும் படம் எது என்று கூடத் தெரியாத நிலையில் 'மௌனம் பேசியதே', 'லேசா லேசா', "உனக்கு 18 எனக்கு 20', 'திருடா', 'மனசெல்லாம்', என்று அரை டஜன் படங்களைக் கையில் வைத்துக் கொண்டிருக்கிறார்.

தொடர்ந்து தயாரிப்பாளர்கள் அவரை மொய்த்துக் கொண்டிருக்க... இதற்கெல்லாம் சிகரம் வைத்தது போல் சமீபத்தில் 'மௌனம் பேசியதே' படத்தின் பாடல் வெளியீட்டு விழா அமைந்தது. அந்த நிகழ்ச்சியில் திரையிடப்பட்ட ஒரு பாடலில் த்ரிஷா தோன்றியதும் கைதட்டலில் அரங்கம் அதிர்ந்தது. முதல் முதலில் தோன்றிய காட்சியிலேயே இரசிகர்களின் உள்ளத்தைத் த்ரிஷா கொள்ளையடித்த மர்மம் தெரியாமல் இன்னும் குழம்பிக் கொண்டிருக்கிறது கோலிவுட்.



விது
படம்: காலாட்படை

...து ஒரு துப்பாக்கிக் குண்டால் ரொம்ப சாதாரணமாகக் கொலை செய்கிற ... 'தேமே' என்று நின்று கொண்டிருக்கிறார். சுட்டால் கதை முடிந்து போகும் ... ஆசிஷின் ஆட்கள் கூட பாதி நேரம் துப்பாக்கியை பாண்டுக்குள் சொருகி ...கொண்டு மல்யுத்தம் பண்ணுகிறார்கள்.

...டுக்குள்ளேயே நுழைந்து ரவுடிகளை வெட்டிச் சாய்க்கிறார் விஜய். அப்புறம்... ...தால் கிடைக்கிற பணத்தில் ஏழைகளுக்கு உதவுகிறார். அப்படிப்பட்ட ஒருத்தரை ...முதல்வர், "நான் பதவியில இருந்து கொண்டு செய்வதை நீ வெளியில் இருந்து ... செய்கிறாய்" என்று சொல்வது அபத்தத்தின் உச்சம்!

...கொடுமை க்ளைமாக்ஸ். இங்கேயும் தலையைச் சுற்றி மூக்கைத் தொடுகிற ... ஆட்டோ ஓட்டுகிற மாதிரி ஆனாலுக்கு ட்ரெயினை ஓட்டிக்கொண்டு போகி... வரியில் சொல்வதனால் லாஜிக்கே இல்லாமல் ஒரு படம் எடுத்திருக்கி... இரண்டு பாடல்கள் தாளம் போட வைத்தாலும்... 'போடாங்கோ' என் ...பாட்டெழுதி... அதையும் ஆக்ஷனோடு பாடுவது விஜய் மாதிரியான ... அழகல்ல!

...ஆறுதலான ஒரே விசயம்- வடிவேலு. டபுள் ஆக்ஷனில் அவர் அடிக்கிற ...அட்டகாசம். அதுக்காக இரண்டரை மணிநேரம் உட்காரச் சொல்வது... ...ஓவர்!

## ...கத்தில் ஷாம்

...இயக்கிய 'ஏய் நீ ரொம்ப அழகா ...' பெரிய அளவில் வெற்றி ...தால் ஷாமின் எதிர்பார்ப்பு ... அவரது மார்க்கெட் பெரிய ... உயரும் என்று எதிர்பார்த்த ... பொய்யானது. அதனால் ஷாமிற்கு ... பல படங்கள் பாதை மாறிச் ... அதனால் தற்போது குறைவான ... கைவசம் வைத்திருக்கும் ஷாம் ...கொண்டிருக்கும் 'பாலா' படத்தை ... எதிர்பார்க்கத் தொடங்கியிருக் ... அந்த அளவுக்குப் படத்தின் கதை அவருக்கு எதிர்பார்ப்பினைக் கொடுத்திருக்கிறதாம்.

## கிரணின் 'தில்'

தற்போதைய புதிய வரவு நடிகைகளில் தில்லாகப் பேசும் ஒரே நடிகை கிரண்தான். இன்னும் தனக்கு ஒரு அங்கீகாரம் கிடைக்கவில்லை என்ற போதிலும் கூட கதை விசயத்திலும், சம்பள விசயத்திலும் ரொம்பவே கறாராக இருக்கிறார். அது மட்டுமா மற்ற மொழிப் படங்களும் இப்போது நடிகைக்கு புக்காகி வருகிறதாம். அதனால் ஒவ்வொரு மாநிலங்களுக்கும் பறந்து கொண்டேயிருக்கிறார். இப்படி நடிகை அடித்துப் பேசிய போதும் அவருக்குப் படங்கள் ஒன்றும் குறைந்த பாடில்லை. இப்போதும் கை நிறையப் படங்கள் வைத்திருக்கிறார் கிரண்.




## முகப்பில்

## வாய்ப்புத் தேடும் லைலா

புதிய நடிகைகளின் வரவு லைலாவை மறக் கடித்துவிட்டது என்றே சொல்லலாம். ஆனாலும், தமிழ் சினிமாவை விட்டு விலகிவிட அவர் மனம் இடம் கொடுக்கவில்லை. எப்படியாவது சென்னையிலேயே இருந்து கொண்டு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என்றே நினைக்கிறார்.

அது மட்டுமின்றி முன்பு தான் கால்ஷீட் தராமல் இழுத்தடித்த கம்பெனிகளைக் கூட இப்போது அணுகி வருகிறார். ஆனால், அவர்களோ இப்போதைய நிலைவரப்படி நடிகைக்கு மார்க்கெட் சுத்தமாக இறங்கிக் கிடப்பதால் அவரது வேண்டுகோளைச் செவி கொடுத்துக் கேட்பதாக இல்லை.

ஆனாலும் சோர்ந்து போகாமல் தன் மனேஜரைத் தூதுவிட்டு எதற்கும் தயார் என்று அறிவிப்பு விடுத்து வருகிறார். லைலா தமிழ் சினிமாவுக்கு குட்பை சொல்ல எடுத்த முடிவை மீள் பரிசீலனை செய்திருக்கிறார்.



## விந்தியாவுக்கு செக்கியூரிட்டி

பெற்றோரை விட்டுத் தனியாகப் பிரிந்து வந்த விந்தியா, சென்னை அடையாறு பகுதியில் ஒரு வாடகை வீட்டில் வசித்து வருகிறார். அவர் தனியாக இருப்பதை எப்படியோ தெரிந்து கொண்ட முகம் தெரியாத சில நபர்கள், சமீப காலமாக அவரை மறைமுகமாக நோட்டம் விட்டுக் கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது! யார் அவர்கள்? எதற்காக அவரது வீட்டை நோட்டம் விடுகிறார்கள் என்று விந்தியாவுக்கே தெரியவில்லை. இதனால் மனம் கலங்கிய அவர், தனியார் செக்கியூரிட்டி ஒருவரைத் தனது பாதுகாப்புக்காக நியமித்துள்ளாராம்! உஷாரம்மா... உஷாரு...

## லாரன்ஸின் ஹீரோ ஆசை

நடனத்தில் ஓரளவு பெயர் பெற்று வரும் நேரத்திலேயே லாரன்சுக்கு ஹீரோ சான்ஸ் கிடைத்துவிட்டதால் தற்போது பாடலுக்கு நடனமாடுவது மற்றும் நடன மாஸ்டராகப் பணியாற்றுவதில் அவருக்கு அதிகப்படியான ஆர்வம் இல்லை. 'அற்புதம்' படமும் வெற்றி பெற்றிருப்பதால் பிரபுதேவா ஸ்டைலில் இனி முழு நேர ஹீரோவாகிவிட வேண்டியதுதான் என்று நினைப்பவர், அடுத்தடுத்துத் தனக்குப் பட வாய்ப்புத் தருவதாகச் சொன்ன கம்பெனிகளிடத்தில் தீவிரமாகப் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறார். தமிழில் மட்டுமல்லாது அவரது தாய் மொழியான தெலுங்கிலும் இந்தத் தீவிர வேட்டை நடைபெற்று வருகிறது.

## மீனாவின் எதிர்பார்ப்பு

அவ்வப்போது ஓரிரு படங்கள் வந்து மீனாவுக்குக் கைகொடுத்து வருவதால் இப்போது இதுவரையில் நடித்ததை விடவும் இனிமேல் வித்தியாசமான வேடங்களில் நடிக்க வேண்டும் என்ற முடிவில் இருக்கிறார் அவர். குறிப்பாக அஜித்தின் 'வில்லன்' படத்தில் மிக வித்தியாசமான வேடமாம் மீனாவுக்கு. அதைத் தொடர்ந்து தனக்கு வித்தியாசமான வேடங்கள் தர வேண்டும் என்று இயக்குநர்களுக்குத் தோன்றும் என்ற நம்பிக்கையும் வைத்திருக்கிறார் மீனா. அதே சமயம் முன்பு மாதிரி இளம் நடிகர்களுடன் நடித்தாக வேண்டும் என்கிற முயற்சிகளில் எல்லாம் இப்போது மீனா இறங்குவதில்லை.

## மும்தாஜ் அவுட்

மின்னலாக சம்பளம் குறைந்தது மட்டுமின்றி மும்தாஜுக்குப் படங்களும் குறைந்துவிட்டது. மும்தாஜ் படத்தில் இருந்தால் விற்பனைக்கு உதவும் என்று நினைத்த காலம் மலையேறிவிட்டது. இதற்கு என்ன காரணம் என்றால் புதுமுக நடிகைகள் மும்தாஜ்யையே மிஞ்சும் அளவுக்குக் கிளாமராக நடிக்க முன் வந்திருப்பதுதான். அதனால் தமிழை மட்டுமே நம்பியிருந்தால் கதை நடக்காது என்று இப்போது அக்கம்பக்கத்து மாநில மொழிப் படங்களில் நடிப்பதில் தீவிரம் காண்பித்து வருகிறார் அவர்.

## விதுவுக்குப் பாடவும் தெரியுமாம்

விமானப் பணிப்பெண்ணாகப் பணி புரிந்துவிட்டு 'காலாட் படை' படத்தில் கதாநாயகியாக நடிக்க வந்திருப்பவர் விது. 'பஞ்சதந்திரம்' படத்தில் நடித்ததை மறைத்துப் பேட்டியளிக்கும் அவர், பியானோ வாசிப்பதில் ஐந்து கிரேடுகளை முடித்துவிட்டாராம். தவிர ஸ்விம்மிங், கார் டிரைவிங், நடனம் எனப் பல கலைகளிலும் தேர்ச்சி பெற்றுள்ளார். இனிய குரல் வளம் படைத்த விது, சினிமாவில் சொந்தக் குரலில் பாட வாய்ப்புக் கிடைத்தால் வெளுத்து வாங்கி... ஸாரி, பாடிவிடுவாராம்!


சினி விசிட்


## தமிழில் நடிக்கக் காத்திருக்கும் மற்றொரு கவர்ச்சிப் புயல்

புதுப்பட வாய்ப்பே கிடைக்காமல் சோர்வடைந்து காணப்பட்ட சுமா ரங்கநாத், முதல் கணவரை விவாகரத்துச் செய்துவிட்டார். பிறகு இரண்டாவது கணவருடன் இரகசிய வாழ்க்கை நடத்தி வரும் அவர், 'ஸ்தரி' படத்தில் படுக்கை அறைக் காட்சிகளில் ஆபாசமாக நடித்துள்ளார்!

மற்றக் கதாநாயகிகளை விட டபிள் மடங்கு கிளுகிளுப்புக் காட்டி நடித்து, படப்பிடிப்புக் குழுவினரையே எதுவும் பேச முடியாமல் செய்துவிட்டாராம் சுமா! இந்தக் கிளுகிளுப்புக் காட்சிகளைப் பார்த்த பிறகாவது தமிழ்ப் பட வுலகம் தன்னைக் கண்டு கொள்ளாதா என்ற எதிர்பார்ப்பில் இருக்கிறாராம் அவர்.



பிரியங்கா திரிவேதி
படம்: ஜனனம்

# தேன் கிண்ணம்

## பிரளயம்...

நீண்ட ஏகாந்த
ராத்திரிகளால்
உருவம் புதைந்த
வந்த போன
உறவு ரட்சகியே...
என்
தூக்கத்தினைத்
துரத்தியடிக்க
சாபமிட்டவள் நீ தானா...?
!!
என்
அடையாளம்
மழுங்கடிக்கப்படும் போது
துருவங்களின் கற்பிதங்கள்
துன்பத்தினையல்லவா...?
உதிரியாக்குகின்றது.
!!
துயிலில்லத்தின்
கல்லறைக் காணியில்
கழனியிருப்பது
ஒரு சில
இடைவெளிகள் தான்
உன்
பரிதாபத்துக்குரிய
பரிவுப் பொதிகளை
சுமக்க வைக்காதே....?
!!
கோவில் படிக்கல்லில்
அடிபட்டு உடையும்.
தேங்காய் சிதைவாய்
என்
நெஞ்சின் மீது
நூறாயிரம் ஞாபகங்கள்
வெடித்துச் சிதறுகிறது.
!!
நம்
காதலின் நிறையை
கண்ணீர் கரைவுடன்
வரைந்த மடல்களை
தபாற்காரன்
அஞ்சலாக்கும் வரை
அனுதாபப்படும் தெரு...
!!
நேசத்தின்
வெடிச் சத்த ஒய்விலும்
என்
காயங்கள் ஆறவில்லை
ஆன்மாவோடு
போர் தொடுக்கிறதே...?
!!
நான்
லௌகிக வாழ்க்கையை
ஈடு செய்து
யோகியாகப் போகிறேன்
!!
விரும்பினால்
யாத்திரைகளுக்கான
சந்நிதான மடங்களுக்குள்
தேடு.... ஆனால்
ஆன்மீகத்தை மட்டும்
கலைக்க முற்படாதே...
நான் நிஜமான
நம்பிக்கையோடு தான்.

**கோ. நாதன் (வசீகரன்), பொத்துவில்.**

## அருவம்

எண்ணத்தை இடறவிட்டேன்...
எல்லையில்லா முகில் போலே- அது
ஓடிக் கொண்டேயிருக்கின்றது...
ஓயாத குருதி போலே,
வண்ணம் தீட்டியது போன்ற
வறட்சி வாழ்க்கை
உண்மையென்று தானே
உணர்வுகளிற்கெல்லாம்...யான்
உருவம் கொடுத்திட
அருவம் நம்பினேன்,
○○
அவனி நிலையென
ஆண்டவன் உரைத்திடின்
ஆத்மா வாழ்ந்திடலாம்...
அவன் கூட இங்கே
ஊமையாய்ப் போனானே,
○○
கற்பனைகள்...கனவுகள்
கல்லான நினைவுகள்
எல்லாமே அருவமாய்...
எப்படி நம்பினேன்...?
ஏமாந்து போனேனா...
ஏய்க்கப் பட்டு விட்டேனா..?
○○
உறவுகள் எனதென்று
உண்மை அன்பென்றேன்...
அருவம் ஆனதவை
அனைத்தும் எனக்கே.
○○
நேசமென்று
நெருங்கிப் போனேன்- எனை
நெருங்க வேண்டிய
ஆத்மா கூட- அன்பின்
ஆழம் கேட்டது...
எனது வாழ்வு
அருவம் ஆனது...!

**சி. மதியழகன், திக்கம்.**

## இதுவும் காதலா..?

அவசர அவசரமாக
பேருந்துக்காக ஓடியபோது
வழியில் வளையல் கடை

வண்ண வண்ண
நிறங்களில் வாங்கி
கைகளில் அடுக்கிக்
கொண்டேன்.
○○
ஓடிச் சென்று பேருந்தில்
ஏறியபோது!
முன்னால் என் காதலன்
தன் புதிய காதலியுடன்
சலங்! நொருங்கியது
என் வளையல்கள் மட்டுமா?
கூடவே என் இதயமும்
○○
விழிகளில் நீர் கசிய
கடற்கரையில்
இருக்கிறேன்
கடலின் அலையைப் போல்
மனமும் அலைகிறது.
○○
நீயோ முடிவைத்த
முத்தைப்போல் மௌனமாய்
புதிய காதலியுடன் மகிழ்ச்சியில்
செத்துப்போன ஜூலியஸ் சீஸரின்
உடைவாள் செயலற்றுப்
போனது போல் நீ
கூறிய வார்த்தையும்
செயலற்றுப் போனதே!
○○
உன்மீது நான் கொண்ட
காதலுக்காகச் சிந்திய
கண்ணீரைச் சேமித்திருந்தால்
சுதந்திர இந்தியாவில்
தண்ணீருக்குப் போராடும்
தமிழக மக்களின்
காவிரி பிரச்சனை
தீர்ந்திருக்கும்!

**ஆர். யசோ, வெள்ளவத்தை.**

## சுகம் எது? சுமை எது?

மண்ணை முத்தமிடும்
மழைத்துளியிடமும்...
அத்துளியை ஏற்கும்
தரையிடமும்...
மொட்டவிழ்ந்த மலரிடமும்
அம்மலரை நுகர்ந்த
வண்டிடமும்...
உலாப் போகும்
நிலாவிடமும்...
நிலாக்காயும் இராவிடமும்...
கவி வடிக்கும் நெஞ்சிடமும்...
கவலை கொண்ட
மனத்திடமும்...
கனவு நிறைந்த
கண்களிடமும்...
கலைந்து போன கனவிடமும்...
கருவைச் சுமக்கும்
தாயிடமும்...
தாயைப் பிரிந்த
சேயிடமும்...
காதல் கொண்ட
இதயத்திடமும்...
தோற்றுப் போன
காதலிடமும்...
கேளுங்கள்!...
சுகம் எது? சுமை எதுவென்று?...
அவை உரைக்கும்!...

**பா. சுபாஜினி, பொத்துவில்.**

## கனலாய் ஒரு காதல்...

கையில் சேர்ந்த உன் காதல்
கற்பனையாய் ஆனதென்ன?
காதில் கேட்ட உன் பாடல்
காற்றோடு போனதென்ன?
★★
கண்ணுக்குள் நீ இருந்தே!
கண்ணீரை ஏன் வடித்தாய்....?
கனவுக்குள் தினம் வந்தே!
கண்களை ஏன் கெடுத்தாய்...?
★★
பிரியமுடன் நீ வைத்த பாசம்
பிரிவால் ஆனதே வேஷம்
உயிரில் பாதி நீ செல்ல
உறவை எப்படி நான் சொல்ல
★★
உயிருக்குள் உயிராகி உள்ளுக்குள்ளிருந்தும்
உறவேனோ முடித்துவிட்டாய்...?
தொட்டுப் பேசி சிரித்தும்
தொடர்வதேனோ மறுத்துவிட்டாய்...?
★★
நினைவுக்குள் நீங்காதிருந்தவளே!
நேசத்தை நீயோ மறந்துவிட்டாய்
சொந்தமென்று என்னோடிருந்தவளே
சோகத்தை ஏனோ தந்துவிட்டாய்....
★★
என்னைப் பிரிந்தே நீ சென்றால்
என் வாழ்வு முடிவாகும் பெண்ணே!
வானம் பூமி அழிந்தாலும்....
வாழும் காதல் நிலையாகும் கண்ணே!

**எம். நவாஸ்சௌபி, இறக்காமம்.**

## பேனா நண்பர்கள்



பெயர்: எம்.ஏ.யூசுப்
வயது: 20
முகவரி: வீ. இல: 493,
சிராஜ் நகர்,
தம்பலகாமம்.
பொழுது போக்கு:
பத்திரிகை வாசித்தல்,
கவிதை எழுதுதல்.



பெயர்: ஏ.சி.சுஜீத்
வயது: 20
முகவரி:
1ம் வட்டாரம்,
எருக்கலம்பிட்டி,
மன்னார்.
பொழுது போக்கு:
பத்திரிகை. கிரிக்கெட்.



பெயர்:
I.M.Moujood (Anees)
வயது: --
முகவரி:
P.O.Box No. 91412,
Doha Qatar.
பொழுது போக்கு:
ரி.வி., பத்திரிகை.

## என் வாழ்வின் வசந்தமே...!

உனைப் பிரிய நேரிட்டால்
உயிர் பிரிவேன் என்றாய்...
என் உயிர் பிரியும் வரை
இணை பிரியேன் என்றாய்...
வேண்டாம் உயிரே!
எனைப் பிரிய நேரிட்டு- உன்
உயிரை நீ பிரிவதை விட,
என் உயிர் உள்ளவரை...
இணை பிரியாமல்,
உண்மைக்கு உதாரணமாய்...
அன்பிற்கு ஆசானாய்...
என் வாழ்வில் நீ
வலம் வந்தாலே போதும்.

**செந்துஜா-தெஹிவளை.**

## சிறகு விரிக்க மாட்டாயா?

வசந்தத்தின் வெளிச்சமான- உன்
வருகைகள்....,
சுகந்தம் சுமந்தசையும்
தென்றலான-உன்
தீண்டல்கள்....,
தாமரையில் ஊடுருவி
தடாகத்துட் கூட
தகிப்பூட்டும் -உன்
சூரியப் பார்வை...,
தொட்டாற் சுருங்கியாய்
என்னை உன்னில்
அஸ்தமிக்க வைத்த- உன்
பாசப் புன்னகை...,
சிட்டிற்காகவே தேன்சுமந்து
மொட்டவிழ்ந்த மென் இதழ்கள்,
சிட்டிற்குச் சேதி சொல்ல,
மொட்டிற்குள் தென்றலின்
முகர்ச்சிகளைத் தூதுவனாய்...
சிறகு விரிக்க மாட்டாயா சிட்டே,
இச் சிறுமலரை நோக்கி என!!!

**பிரியவதனா, வவுனியா.**

## இது கண்ணீர்த் துளிகளின் மொழிபெயர்ப்பு



மறக்க வேண்டும்
எல்லாவற்றையும்

கண்கள் தொட்டுக் கடந்த
சோகங்களையும்,
நெஞ்சில் நஞ்சு செருகிய
துரோகங்களையும்,
விஷம் தடவிய வார்த்தைகளையும்

ஞாபகங்களில் உறைந்து போன
காயங்களையும்,
பறிக்கப்பட்ட
என் இளவேனிலையும்,

கருகிப் போன
அந்தக் கவிதையையும்,
மறக்க முடியாத
அதன் வரிகளையும்,

நினைவுகள் அரித்தே
செத்துப் போவதற்கு முன்,

மறக்க வேண்டும்,
உயிர் தின்னப் பார்க்கும்
அத்தனை ஞாபகங்களையும்.

**மூங்கிலூர்ப் புல்லாங்குழல், நிக்கொல்ல.**


# நினைத்து, நினைத்து சிரிக்க

### எதிர்பாராதது




ஒரு பெண் தன் உடல் இளைக்க வேண்டும் என்று டாக்டரிடம் போய் யோசனை கேட்டாள். டாக்டர், "குதிரைச் சவாரி செய்யுங்கள். உடல் இளைக்கும்" என்று சொல்லித் தனக்குத் தெரிந்த ஒரு குதிரைக்காரனின் விலாசத்தையும் கொடுத்தார். ஒரு மாதம் கழித்து அந்த பெண்ணிடமிருந்து ஒரு காசோலையும், "உங்கள் யோசனை பிரமாதம். இப்போது என் எடை பத்துக் கிலோ குறைந்துவிட்டது" என்று ஒரு கடிதமும் வந்தது. மறுநாள் இன்னொரு கடிதமும் வந்தது. அதில், "உங்கள் யோசனையால் என் குதிரையின் எடை இருபது கிலோ குறைந்துவிட்டது. நீங்கள் தான் நட்டஈடு தர வேண்டும்" என்று எழுதி பில் அனுப்பியிருந்தான், குதிரையை வாடகைக்குக் கொடுத்தவன்.

### எதார்த்தமான குடிமகன்



செல்லப் பிராணிகள் விற்பனை செய்யும் கடைக்கு ஒருவன் போய், "எனக்கு 15 கரப்பான் பூச்சி, 8 பல்லி, 50 மூட்டைப் பூச்சி, 16 எலிகள் எல்லாம் தேவை. இருக்கிறதா?" என்று கேட்டான். அதற்குக் கடைக்காரன், "எலிகள் மட்டும்தான் இருக்கின்றன. ஆமாம் பல்லி, கரப்பான் பூச்சி, மூட்டைப் பூச்சியெல்லாம் எதற்கு?" என்று குழப்பத்துடன் கேட்டான். அதற்கு வந்தவன், "நான் குடியிருக்கும் வீட்டைக் காலி செய்ய வேண்டும் என்று வீட்டின் உரிமையாளர் சொல்லிவிட்டார். அவர் எனக்கு வீட்டைத் தரும் போது, வீடு எந்த நிலையில் இருந்ததோ அது போலவே நான் வீட்டை திருப்பித் தர வேண்டும். அப்போதுதான் அட்வான்ஸைத் தருவேன் என்று சொல்லிவிட்டார்" என்றான் கவலையோடு.



ஒரு தர்ம காரியத்துக்கு நிதி வசூலிக்கப் பணக்காரன் ஒருவனின் வீட்டுக்கு முல்லா போனார். வாசலில் இருந்த வேலைக்காரனிடம், "உன் முதலாளியைக் கூப்பிடு" என்றார். வீட்டுக்குள் போய்விட்டு வந்த வேலைக்காரன் "முதலாளி வீட்டில் இல்லை" என்று சொன்னான். முல்லாவுக்குக் கோபம் வந்தது. காரணம் அவர் வரும் போதே மாடியில் நின்ற பணக்காரனைப் பார்த்துவிட்டுத்தான் வீட்டிற்குள் நுழைந்தார். எனவே கோபத்துடன் வேலைக்காரனிடம் சொன்னார்.

"இனி உன் முதலாளி போகும்போது அவரது தலையையும் மறக்காமல் எடுத்துக் கொண்டு போகச் சொல். பாவம்! அது மட்டும் மாடி ஜன்னல் ஓரம் தனியாக இருப்பதைக் கண்டேன்" என்றார்.

## கவிதை நெஞ்சங்களுக்கு!

**இவ்வாரச் சிறப்புக் கவிதைகளாக** 'வலை'யில் கண்ட வெண்பாக்கள் சிலவும் தமிழ் நாட்டுக் கவிதைகள் இரண்டையும் தருகிறோம்.

### ஒரு திக்குவாயனின் காதல் வெண்பாக்கள்

எ..என்பேர் இளங்கோ இளவயசு தொட்டே
உ..உன்மேல் வ..வச்சேன் உ..உசிரு-என்னை
ம..மக்குன்னு மட்டும் நெனைக்காதே கொஞ்சம்
தி..திக்குவாய் அவ்வளவு தான்.

திக்குவாய் என்றாலும் தீங்கனியே என்னுள்ளம்
கக்குகின்ற காதல் கடற்பெருக்கை-மிக்க
அழகுதமிழ்ப் பாவில் அமைத்தளிப்பேன் இன்னும்
பழகுதற் கேது பயம்?

கிட்டே வருங்கால கிளுகிளுப்பு பூந்தளிர்க்கை
பட்டவுடன் மேனி படபடப்பு- வட்டவிழி
வெட்டில் வெடவெடப்பு என் கண்ணே! என் கண்ணே
பட்டுவிடும் நீதள்ளிப் போ!

நேற்றுந்தான் கண்டேன் நிலவை நெகிழவில்லை
காற்றுந்தான் என்றும்போல் காற்றிற்று-மாற்றமின்று
ஏன்வந்த தென்ற பதிரவிழ்க்க என்மனத்தில்
தேன்பாய்ச்சிச் சென்றவளைக் கேள்

-அநந்த்

### மத்தளராயன் வெண்பா நான்கு

#### கிரோம்பேட்டை ரயில்வே கேட்

வடிவாய் உடுத்த வனிதை குனிந்து
அடியில் கடக்க முடியின் -நெடியே
முகரும் குருக்கள் முகமும் வியர்க்க
நகரும் சரக்கு ரயில்.

#### விற்பனையாளர்

ஆழ யழைப்புமணி அங்கே கதவம்தான்
தாழவே மெல்லத் திறந்திடும்-சூழவெங்கும்
மோதும் புகைநடுவே சீட்டாடும் கூட்டமொன்று.
ஊதுபத்தி விற்கவந்த பெண்.

#### போலீஸ் குடை

பின்னிரவில் பெய்ததெனச் சொன்னார் சுவடெதுவும்
சன்னமாய் வீதியில் கண்டாயா? -முன்னேபார்.
காலையில் சின்னதாய்க் காளான் துளிர்விட்டுச்
சாலையில் போலீஸ் குடை.

#### ஓய்வு பெறும் ஸ்டேஷன் மாஸ்டர்

விடிந்து பதவி முடியும் நினைப்பில்
பிடித்த கொடியும் தளரும்- படிந்து
முகத்தில் புகையும் விலகக் கடந்து
நகரும் சரக்கு ரயில்.

### வயிற்று நெருப்புடன்....

மேகம் துப்பிய மழையில்
ஒடுகிறது சோடியம் வேப்பர் நதி
இந்த ரயில்வே
சந்திப்பில்
மழைவரும் முன்பே
சாய்ந்தவர்கள்
எழுந்தார்கள் மிரண்டவாறே
கான்கிரீட் தளங்களுக்கும்
குளிரெடுக்கிறது
காலணி தாண்டி
விரல்களிலேறிய குளிர்.

ஜனங்கள்
குடைச் சீருடைகளுடன்
படிகளில் இறங்குகிறார்கள்
பலவித குடைகள்
நிறங்களில் வேறுபட்டு
அழகூட்டிப் போயின.

சந்திப்பு வாசலில்
நின்ற 'மெட்டடோர்' தேடி
கால்களை நனைக்கிறது
கல்யாணக் கூட்டமொன்று
லட்சம் ரூபாய்களை
தொலைத்த கவலையோடு
நிற்கிற குடையில்லா கவ்வோதிகள் சிலர்
தலையும், தோள்பட்டையும்
நனைந்தபடி நிற்கும்
ரிக்ஷாக்காரன்.

முதுகுப் புறத்தில்
மழலைகள் அழுகை கேட்கிறது
ரயில் விட்டிறங்கி
சந்திப்பில் நுழைவதற்குள்
நனைந்தவர்கள்
தலை சிலுப்பிக் கொண்டனர்.

சிமெண்ட் ஜன்னலின் வழியே
வாகனங்களில்லாத
வெறுந்தரையை வெறிக்கிறார்கள்.
மழை வெகு நேரமாய்
கொட்டுகிறது...
சோடியம் வேப்பர்- மழையில் கூடி
வெகு நேரமாய்
நதியாய் ஒடுகிறது.

வயிற்று நெருப்பிலும்
இக் காட்சிகள் அழகு.

-புத்தகன்.

## சிறப்புக் கவிதை

### கை விரி

தாகமாயிருக்கிறது.

ஒரு காலத்தில்
நான் அமுதசுரபி...
பொங்குமாங்கடல்...

இன்றைக்கு
பாளமாய்ப் பிளந்த
தோலாய்த் தளர்ந்த
தாயிர் மார்பு...

வெள்ளமாய்....
மழைப் பிரவாகமாய்
சுழலாய்
கரை உடைத்து
நுரை சுழித்து
நிற்காமல்
ஒரு காலத்தில்
ஓடிக் கொண்டிருந்தேன்.

இன்றைக்கு
ஓடாத மணல் ஆறு.

பயிருக்கு
உயிர் கொடுத்து,
உயிருக்குப்
பயிர் கொடுத்து
யுகம் யுகமாய்த்
தாகம் தீர்த்தேன்.

இன்று
காகம் குடிப்பதற்கும்
நீரின்றிக்
கை விரித்தேன்.

ஆடிப் பெருக்கினிலே
தண்ணீரே தீபமாச்சு
இன்று-
மணலே தண்ணீராச்சு.

அரசுகள் மாறுகின்றன...
கூட்டங்கள் கூடுகின்றன...
சட்டங்கள் போடுகின்றன...
ஆறுகள் வாடுகின்றன...

தாகமாயிருக்கிறது.
தண்ணீர் தாருங்களேன்.

ஆண்டாள் பிரியதர்ஷினி.

# சென்ட் வாங்கும் முன்...

அழகு சாதனங்களில் தவிர்க்க முடியாத ஒரு விசயமாகி விட்டது சென்ட். ஆனால் அதைத் தேர்ந் தெடுக்கவெனச் சில வழிகள் உள் ளன. சென்ட் வாங்கும் போது கவ னத்தில் கொள்ள வேண்டிய சில விசயங்கள்...

சென்ட்டில் மூன்று வகைகள் உள்ளன. ஒரு வகை வாசனை வந்து அடுத்த சில நொடிகளில் மறைந்து விடும். அடுத்தது சென்ட் போட்டுக் கொண்ட நபர் அந்த இடத்தை விட்டு நகர்ந்த பின்னரும் வாசனையை அப்படியே தரும். மூன்றாவது ரகம், கொஞ்சம், கொஞ் சமாக மறையும். இதில் உங்கள் தேவை எப்படிப்பட்டது என்று பார்த்துத் தேர்ந்தெடுங்கள்.


நம் நாடு வெப்பமானது என்ப தால் ரொம்பவும் அதிக வாசனை யில்லாத, மிதமான வாசனையுடன் கூடிய சென்ட்டையே தேர்ந்தெடுக் கவும்.

சரும வகைக்கேற்ப சென்ட்டைத் தேர்ந்தெடுக்க வேண்டும். கறுப்பு நிற சருமங்கள் சென்ட் வாசனையை நீண்ட நேரம் தக்க வைத்துக் கொள் ளும் குணமுடையவையாம். வறண்ட சருமம் சீக்கிரமே வாசனையை இழந்துவிடுமாம். நல்ல பிராண்ட் சென்டுகளாகவே தேர்ந்தெடுக்கவும்.

புதிய ரக சென்ட்டுகளை வாங் கும் போது எப்போதுமே சிறிய அளவில் வாங்கி உபயோகித்துப் பாருங்கள். எப்போதாவது உபயோ கிக்கும் சென்ட் பாட்டில்களை ஃப் ரிட்ஜில் வைத்து விடலாம். அப் போது அவற்றை ஒரு வருடம் வரை கூட வைத்திருந்து உபயோ கிக்க முடியும்.

சென்ட் வாங்கும் போது முத லில் அதில் சிறிதை எடுத்து மணிக்கட்டில் தடவிப் பாருங்கள். அப்போதுதான் உங்களால் சரி யான வாசனையை உணர முடியும்.

சென்ட்டுகளில் பல வகை உண்டு. சில ஸ்பிரே வகை சென்ட்டு கள் உடைகளில் கறைகளை உண் டாக்கி விடும். கைக்குட்டையில் வைத் துக் கொள்கிற மாதிரியான சென்ட்டு களும் உண்டு.



பொதுவாக சென்ட்டைக் காது ஓரங்களிலும், மணிக்கட்டிலும்தான் தடவிக் கொள்ள வேண்டும். ஒரு சிறிய பஞ்சில் சென்ட்டைத் தெளித்து உள்ளாடைக்குள் வைத்துக் கொண் டால் வியர்வை நாற்றமின்றி இருக் கும்.

சென்ட்டுகளை எக் காரணம் கொண்டும் வெறும் உடம்பில் அப் படியே நேரடியாக ஸ்பிரே செய்து கொள்ளக் கூடாது. அதிலுள்ள இர சாயனங்கள் சரும அலர்ஜியை உண் டாக்கலாம்.

ஆண்களுக்கெனவும், பெண் களுக்கெனவும் தனித்தனி சென்ட்டு கள் உள்ளன. மலர்கள், பழங்கள் போன்ற வாசனைகள் கொண்டவை பெண்களுக்கானது.

அதே மாதிரி காலை நேரத் துக்கு உபயோகிக்க, மாலையில் உபயோகிக்க எனப் பிரத்தியேக சென்ட்டுகள் உள்ளன. அவற்றைப் பார்த்து வாங்கி உபயோகிக்க வேண்டும்.

# நிறத்தைச் சொல்லுங்கள் 'அதை' சொல்கிறோம்

உங்கள் செக்ஸ் வாழ்க்கைக் கும், உங்கள் விருப்ப நிறத்துக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்றால் நம்ப முடிகிறதா?

ஒவ்வொரு நிறத்துக்கும் ஒவ் வொரு செக்ஸ் குணம் இருப்பதை நிரூபித்திருக்கிறார்கள். செக்ஸில் நீங்கள் எப்படிப்பட்டவர் என்று தெரிந்து கொள்ள வேண்டுமா? இங்கே கொடுக்கப்பட்டிருக்கும் கலர்களில் பிடித்த கலரைத் தேர்வு செய்து படித்துப் பாருங் கள். சிவப்பு, வெள்ளை, கறுப்பு, பச்சை, நீலம், மஞ்சள், ஆரஞ்சு, பிங்க், ஊதா, கிரே, ப்ரவுன். உங் கள் நிறத்திற்கும் செக்ஸ் விசயத்தில் உங்கள் குணத்திற்கும் தொடர் பிருக்கிறதா என்று சரிபார்த்துக் கொள்ளுங்கள்.

## சிவப்பு

காதலின் நிறம் சிவப்பு என்றே சொல்லலாம். சிவப்பை விரும்பு வோர் செக்ஸ் பிரியர்களாம். செக்ஸை அணுஅணுவாய் இர சிப்பவர்களாம். புதுப் புது வழி களில் செக்ஸ் இன்பம் அனுபவிக்க நினைக்கும் இவர்கள், அதில் பரிசோதனைகளையும் செய்து பார்ப்பார்கள். இவர்களுக்குக் காதல் நெருப்புப் பற்றிக் கொண்டு விட்டால் லேசில் அணையாது.

## வெள்ளை

வெள்ளை நிறம் பிடிக்கிற வர்கள் செக்ஸ் என்பது ஒரு பாவச் செயல். உதட்டோடு உதடு சேர்க்கும் முத்தமெல்லாம் இவர் களைப் பொறுத்தவரை டூமச்! துளி வெளிச்சமும் இல்லாத இருட் டில் செக்ஸ் வைத்துக் கொள்ளவே இவர்கள் விரும்புவார்கள். உற வுக்கு முன்பும், பின்பும் குளிக்கிற அளவுக்கு ஆசாரமானவர்கள். வெள்ளை விரும்பிகளுடன் செக்ஸ் வைத்துக் கொள்வது கொடுமை.

## கறுப்பு

கோபத்தையும், ஆத்திரத்தையும் வெளிப்படுத்தும் ஒரு செயலே செக்ஸ் என்பது கறுப்புப் பிரி யர்களின் எண்ணம். இவர்கள் பிறரைத் துன்புறுத்தி இன்பம் காணும் சேடிஸ்ட்டுகள். சுயநல வாதிகள். இரக்கமில்லாதவர்கள். செக்ஸ் குற்றவாளிகளைப் பற்றி ஆராய்ந்து பார்த்தபோது அவர் களில் பெரும்பாலானவர்கள் கறுப்புத்தான் எனக்குப் பிடிச்ச கலரு என்று சொன்னது தெரிய வந்திருக்கிறதாம்.

## பச்சை

கல்யாணத்துக்கு முன்னாடி செக்ஸ் என்பதோ, கல்யாணத்துக் குப் பிறகும் கணவன் அல்லாத வேறு நபர்களுடன் செக்ஸ் என் பதோ பச்சையை நேசிப்பவர்களி டம் செல்லுபடியாகாது. ரொம் பவும் உணர்ச்சிபூர்வமானவர்கள். கல்யாணமாகிப் பல வருடங்கள் ஆனாலும், செக்ஸ் உறவைப் பொறுத்தவரை தினம் இவர்கள் புது முகங்களாகவே நடந்து கொள் வார்கள்.

## நீலம்

கணவனே கண்கண்ட தெய்வம் என்கிற ரகத்தைச் சேர்ந்தவர் கள் நீலப் பிரியைகள். செக்ஸில் இவர்களது அணுகுமுறை அழ



காக, புதுமையாக, திருப்தியாக, தாராளமாக இருக்கும். தன்னைத் தவிர வேறு பெண்ணை ஏறெடுத் தும் பார்க்காத அளவுக்குக் கண வனைத் தன் செக்ஸ் சில்மிஷங் களால் கட்டிப் போட்டு வைக்கக் கூடியவர்கள்.

## மஞ்சள்

மஞ்சளை விரும்பும் பெண் களை அடைகிற ஆண்கள் அதிர்ஷ்டசாலிகள். மஞ்சள் விரும் பும் பெண்கள் செக்ஸில் சுய ஆசை களோ, எதிர்பார்ப்புகளோ இல்லா தவர்கள். கணவன் கொடுக்கிற சாவிக்கேற்ப ஆடும் பொம்மைகள். செக்ஸ் என்பது பெண்ணுக்கும் பொது, அவளது தேவைகள் அறிந்து நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு அவள் கணவனுக்கும் உண்டு என்பதையெல்லாம் பற்றி அலட்டிக் கொள்ள மாட்டார் கள். இவர்களைப் பொறுத்தவரை செக்ஸ் என்பது கணவனுக்காற் றும் கடமைகளில் ஒன்று. அவ்வளவு தான்.

## ஆரஞ்சு

முந்தைய நிற விரும்பிகளுக்கு நேர் எதிரானவர்கள் இவர்கள். ஆரஞ்சை விரும்புவோருக்கு சுயநலம்தான் மேலோங்கி நிற் கும். உறவின் போது அர்த்தமில்லா மல் பிதற்றுவது, காதைக் கடிப்பது போன்ற அற்ப விசயங்களில் எல் லாம் சுகம் காண்கிற ரகம் இவர்கள். செக்ஸ் என்பது இவர்களைப் பொறுத்தவரை ஒரு நபர் நாடகம். அதனாலேயே அதன் இன்பத்தைக் காலத்துக்கும் அனுபவிக்கத் தவறிவிடுவார்கள்.

## பிங்க்

செக்ஸில் தினம் புதுமைகளை, புது நபர்களை எதிர்பார்க்கும் பெண்களுக்கு இந்த நிறம் மிகவும் பிடிக்குமாம். இவர்களைப் பொறுத் தவரை செக்ஸ் என்பதெல்லாம் சும்மா ஒரு ஜாலிக்கு! அது புனித மானதென்றெல்லாம் காதில் பூ சுற்ற மாட்டார்கள். செக்ஸ் பிடித் தாலும் ஆண்களை வெறுக்கும் குணம் இவர்களுக்கு இருக்கும். பெரும்பான்மையான விலைமா தர்களுக்குப் பிடித்த நிறம் பிங்க்.

## ஊதா

ஊதா விரும்பிகளைப் பொறுத் தவரை செக்ஸ் என்பது நேரத்தை வீணடிக்கும் ஒரு செயல். இந் நிறத்தை விரும்புவோர் சதா சர்வ காலமும் தன் அழகைப் பற்றி, மேக்கப்பைப் பற்றி, தோற்றத்தைப் பற்றியே கவலைப்பட்டுக் கொண்டி ருப்பார்கள். செக்ஸில் ஈடுபடுவது இதையெல்லாம் வீணாக்கி விடும் என்பது அவர்களது நம்பிக்கை.

## கிரே

கிரே நிறத்தை விரும்பு வோர் பொதுவாகவே எந்த விசயத் திலும் சட்டென முடிவெடுக்க முடி யாதவர்கள். இவர்களுக்கு செக்ஸ் என்பது போர். குழந்தை பெற் றுக் கொள்ள மட்டுமே செக்ஸ் தேவை என நினைக்கிற ரகம் இவர்கள். குழந்தை பெற்ற பிறகு செக்ஸை மறந்து விடுவார்கள்.

## பிரவுன்

கிலோக் கணக்கில் அன்பைக் கொட்டிக் கொடுக்கிற ரகம் பிர வுன் விரும்பிகள். தொட்டாற் சிணுங்கிகளும் கூட. தனிமை விரும் பிகள். ரொம்பவும் தயங்கித் தயங் கித்தான் உறவில் ஈடுபடுவார் கள். ஆனால், அதில் பார்ட்னருக்கு அதிருப்தி இல்லாமல் பார்த்துக் கொள்ளும் சாமர்த்தியம் தெரிந் தவர்கள். அணுகுமுறையில் மிக மிக மென்மையானவர்கள்.

செல்வாஸின் 7
சல்வார் பரிசுப் போட்டி
நவநாகரீக மங்கையர்
தரமான சல்வார்களுக்கு
தலைநகரில் நாடும் ஒரே இடம்
SELVAS
No. 4, Nelson Place
Wellawatta, Colombo-06. Tel: 552328
மகளிர் மட்டும் : மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே சல்வார் பரிசு வழங்கப்படும்.
★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)
★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

செல்வாஸின் வாரம் ஒரு சல்வார் Ay
பெயர்:............................
முகவரி:............................
............................
தொழில்:............................
உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப்படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 30- 11-2002
அனுப்பவேண்டிய முகவரி:- 'செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

## இந்த வாரம் யாருக்கு சல்வார்?
## மன்னார் வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் சல்வார் பரிசுபெறும் வாசகி இவர்தான்

ம.பிறேமலதா
மூர் வீதி, மன்னார்.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.
அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!
இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

# டிப்ஸ்

★ வாரம் 5 முறையாவது தவறாமல் உடற்பயிற்சி செய்ய வேண்டும். உடற் பயிற்சியால் கொழுப்பு கரைகிறது, எடை குறைகிறது, பல நோய்களி லிருந்தும் பாதுகாப்பு கிடைக்கிறது.

★ உதடுகளின் வடிவத்தை லிப் லைன ரைக் கொண்டு வரைந்து, அதன் பிறகு அதற்குள் லிப்ஸ்டிக்கால் நிறத்தை நிரப்புவது நல்லது. லிப்ஸ் டிக் உதட்டைவிட்டு வெளியே பரவு வதை இது தடுக்கும்.

★ ஆரஞ்சு ஜூஸ் முகத்தில் தடவி 20 நிமிடம் கழித்து முகம் கழுவினால் முகம் பளபளப்பாகப் பொலிவுடன் தோன்றும்.

★ கசகசா ஊற வைத்து அரைத்து முகத்தில் தடவவும். காய்ந்ததும் கழுவினால் முகத்தில் சுருக்கம் விழாமல் பாதுகாக்கலாம்.

★ பப்பாளி ஜூஸ் தடவினால், வியர் குரு, கொப்பளங்கள் மறைந்து முகம் பளபளக்கும்.

★ கொத்தமல்லி இலையை அரைத்துப் பூசினால் முகம் வசீகரமாக மாறும்.

★ எல்லா வித பழங்களும் முகத்திற்கு நல்லது. அவற்றை மசித்து முகத்தில் பூசினால் முகம் உடனுக்குடன் சுத்த மடைந்து பளபளப்பாய் காட்சி தரும்.

★ தக்காளிச் சாறு சருமத்தை மிருதுவாக்கி ஒளிரச் செய்யும்.


★ பப்பாளி முகத்தில் சுருக்கம் விழு வதையும் தற்காலிகமாக ஒத்திப் போடும்.

★ கண்களுக்கு அடியில் வீக்கம் இருந் தால் உருளைக் கிழங்குத் துண்டு களை கண்ணுக்கடியில் வைக்கவும். வீக்கம் குறையும்.



கண்ணன் மனநிலையைத் தங்கமே தங்கம்
கண்டுவர வேணுமடி தங்கமே தங்கம்;
எண்ண முரைத்துவிடில் தங்கமே தங்கம்
– பின்னர்
ஏதெனிலுஞ் செய்வமடி தங்கமே
– தங்கம்.

**சுப்பிரமணிய பாரதியார்–**



# மதியூகம்



## பாப்பா முரசு சிறுகதை

விகடகவி என்றாலே சிரிக்க வைக்கின்ற ரகத்தினர் என்று குறைவாக மதிப்பிடுகிறவர்கள் உண்டு. அப்படி இல்லை. அவர்கள் சிந்திக்க வைப்பதிலும் கில்லாடிகள்.

அதனை சரித்திரத்தில் நிரூபித்தவர்கள் தெனாலி ராமனும் பீர்பாலும், தெனாலி ராமனுக்குக் கிருஷ்ணதேவ ராயர் அரச சபையில் இடம் கிடைத்தது. பீர்பால், அக்பரைத் தனது மதியால் கவர்ந்து அவரது மனதில் மட்டுமின்றி மாளிகையிலும் இடம் பிடித்தார்.

கிட்டத்தட்ட சரித்திரத்தில் எல்லா மன்னர்களின் அரச சபையிலுமே 'காக்கா' பிடிக்கும் கோஷ்டிகள் இருந்திருக்கின்றன. அப்படிப்பட்டவர்கள் 'காக்கா' பிடிப்பதற்காகச் சில நேரங்களில் அப்பாவிகளை வம்பில் இழுத்துவிட்டு விடுவார்கள்.

அப்படித்தான் இந்த விசயம்.

அன்று...

சரியாக விடியும் முன்னே அக்பர் தூக்கம் கலைந்து எழுந்துவிட்டார். எழுந்து, மாடத்தில் நின்று அருகில் ஓடும் நதியைப் பார்த்தார். நதியில் ஒரு சலவைக்காரர் துணிகளை வெளுத்துக் கொண்டிருந்தார்.

பின்பு அக்பர் தன் வழக்கமான வேலைகளில் ஈடுபட்டார். கிட்டத்தட்ட முற்பகல் 11 மணிக்கு மேல், தர்பாருக்குள் செல்ல அடியெடுத்து வைத்தார். லேசாகக் கீழ்ப் படியில் கால் விரல் தட்டுப்பட்டுச் சிறியதாகக் காயம் ஏற்பட்டுவிட்டது.

'காக்கா' பிடிக்கும் கோஷ்டிகள் ஓடோடி வந்து, மன்னரின் உயிருக்கே ஆபத்து வந்துவிட்டதைப் போல வழிந்து, வழிந்து பேசினார்கள்.

ஒருவர் மகா பெரிய 'காக்கை'யாக இருப்பார் போல் தெரிகிறது. அவர், "மன்னா! நீங்கள் இன்று யார் முகத்தில் விழித்தீர்கள். மோசமான ஒருவரது முகத்தில் விழித்ததால்தான் இந்த மாதிரி அசம்பாவிதம் ஏற்பட்டுவிட்டது. அதனால் அந்த ஆளுக்குத் தண்டனை கொடுக்க வேண்டும்" என்றார்.

மன்னனின் மனக் கண்ணில் அந்தச் சலவைக்காரரின் முகம் தெரிந்தது. அவருக்குத் தண்டனை தர மன்னருக்கு விருப்பம் இல்லை. ஆனாலும் அந்தக் காக்கா கோஷ்டியினர் விடாமல், தண்டனைக்கு மன்னரைச் சம்மதிக்க வைத்துவிட்டனர்.

தண்டனை என்ன தெரியுமா?

50 கசையடி.


விசயம் பீர்பாலின் காதில் விழுந்தது. ஓடோடிச் சபைக்கு வந்தார்.

"மன்னா! காலையில் எழுந்து நீங்கள் சலவைக்காரர் முகத்தில் விழிக்காதீர்கள். சலவைக்காரர் பொழுது விடியும் முன்னே நதிக்கு வந்துவிட்டதால், அவர் முதன் முதலில் உங்களைத்தான் பார்த்திருக்கிறார். அதாவது அவர் உங்கள் முகத்தில் விழித்திருக்கிறார். அவர் முகத்தில் நீங்கள் விழித்ததால் ஏற்பட்டது மிகச் சிறிய விரல் காயம். ஆனால், அவர் உங்கள் முகத்தில் விழித்ததற்கு 50 கசையடி தண்டனையா? இந்தத் தண்டனையை நீங்கள் கொடுத்தால், மன்னர் வருகிறார் ஓடு... ஓடு... என்று கூறி, உங்கள் முகத்தில் விழிக்கவே மக்களுக்கு அச்சம் வந்துவிடும்" என்றார்.

மன்னருக்குப் 'பளிச்'சென்று உண்மை புரிந்தது.

"பீர்பால் சொல்வது சரிதான். சலவைக்காரருக்குக் கசையடி கொடுக்க வேண்டாம்" என்று அக்பர் சொல்லிவிட்டார்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!




மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **30.11.2002.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **472**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 469

பரிசுக்குரியவர்:
**தானிஷ் பாருக்,**
அசோகா வித்தியாலயம், கண்டி.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| **மு.கிஷாந்தன்,** நு.த.ம.வி, கொட்டகலை. | **ம. துஷ்மிகா,** பாலர் பாடசாலை, மண்டூர். |
| **எம்.எஸ். துசான்,** தரும் துத்த கல்லூரி, பதுளை. | **ச. பவித்ரா,** கொ/ இந்துக் கல்லூரி, மோதரை. |
| **ஷாகிர் ஹுசைன்,** 145 பஜார் வீதி, குருநாகல். | **ஜனனி,** பாலர் பாடசாலை, கொழும்பு-10. |
| **யு.சகானா,** கமு/ இ.மிஷன் பாடசாலை, அக்கரைப்பற்று. | **பா. மதன்ராஜ்,** தெ/தமிழ் வித்தியாலயம், தெஹிவளை. |
| **ஜி. உமாபிரியா,** பு.அ.த.ம.வி, கொழும்பு-14. | **மா. ரவி,** உ.த.ம. வித்தியாலயம், உடையார்கட்டு. |

## விடுகதைகளும் விடைகளும்

1. நித்திரையின் தூதுவன் நினையாமல் வருவான் அவன் யார்?
2. ஒரு துரைக்கு இரண்டு தொப்பி அது என்ன?
3. ஊளை மூக்கன் சந்தைக்கு போகிறான் அவன் யார்?
4. காய்க்கும் பூக்கும் கலகலக்கும் காக்காய் உட்கார இடமில்லை அது என்ன?
5. நித்தம் கொட்டும் சத்தம் இல்லை அது என்ன?
6. கறுத்த பாறைக்கு வெளுத்த வேர் அது என்ன?
7. ஓடும் சாடும் ஒற்றைக்காலி நிற்கும் அது என்ன?
8. வரிக்குதிரை ஓடியது வாய்ப் பாட்டு பாடியது அது என்ன?
9. பச்சைப் பாம்பு கல்லை தூக்கும் அது என்ன?
10. நாலு கால் உண்டு நடுவில் உடல் இல்லை அது என்ன?

### விடைகள்.

1. கொட்டாவி
2. பட்டாணிக்கடலை
3. பனை நுங்கு
4. நெற்கதிர்
5. கண் இமைகள்
6. யானைத் தந்தம்
7. கதவு
8. இசைத்தட்டு
9. படலங்காய்
10. கட்டில்.

## பார்வை



சிலந்திக்குக் கால்களைப் போலவே கண்களும் 8 இருக்கின்றன. வதவதவென இவ்வளவு கண்கள் இருந்தும் அதற்குப் பிரயோசனம் இல்லை. ஏனென்றால் சிலந்திக்குப் பார்வைத் திறன் வெகு குறைவு.

ஆந்தையின் பார்வைச் சக்தி இரவு நேரம் அபாரமாக இருக்கும். ஒரு கிலோ மீட்டர் தூரத்துக்கு அப்பால் எரியும் ஒரு சிறிய மெழுகுவர்த்தி வெளிச்சத்தின் உதவியால் கூட ஆந்தையால் தனது இரையை வேட்டையாட முடியும்.






நமக்கு இந்த மாதிரி இரவு நேரத்தில் கூர்மையான பார்வை இல்லையே என்று யாரும் வருத்தப்பட வேண்டாம். இதற்காக தோற்றப் பெருக்கி என்ற சாதனத்தைக் கண்டுபிடித்துள்ளனர். இந்தக் கருவியைக் கார்களில் பொருத்திக் கொண்டு பயணம் செய்தால் ஹெட் லைட் இல்லாமலே எதிரே வரும் வாகனங்களைத் தெரிந்து கொள்ள முடியும். இதற்காக டிரைவரின் முன்பாக ஒரு திரையும் வைக்கப்பட்டிருக்கும்.

## கடல் கடக்க உதவும் காம்பஸ் கருவி!

இது மிகச் சிறிய கருவிதான். ஆனால், இது மட்டும் கண்டு பிடிக்கப் படாமல் இருந்தால்? உலகின் மிக முக்கிய கடல் பயணங்களும், கண்டுபிடிப்புகளும் நடந்திருக்காது! இந்தக் கருவியின் பெயர் காம்பஸ். தமிழில் 'திசை காட்டும் கருவி' என்று சொல்லலாம். கி.மு. நான்காம் நூற்றாண்டிலேயே சீனர்களால் காம்பஸ் உருவாக்கப்பட்டுவிட்டது. இருந்தாலும் கடல் பயணத்துக்கு உதவும் காம்பஸ் 1117-இல்தான் முழுமையாக உருவானது. ஐரோப்பியர்கள் 1190– ஆம் ஆண்டில் காம்பஸ் உபயோகிக்க ஆரம்பித்தார்கள்.


காந்தவியல் பற்றிய முழுமையான விவரங்கள் வெளிவராத காலம் அது. "மாலுமிகள் வெங்காயம் சாப்பிட்டால் காம்பஸ் சரிவர வேலை செய்யாது" என்று நம்பினார்கள் சில கப்பல் காப்டன்கள்! வெங்காயத்துக்குத் தடையும் விதிக்கப்பட்டது. பதினைந்தாம் நூற்றாண்டில் கடல் தாண்டி, கண்டம் விட்டுக் கண்டம் போகும் கடும் பயணங்கள் தொடங்கின.

## இந்த வாரப் புதிர்



## அறிவுத் தேடல்

சென்றவாரப் புதிரின் விடை:




இந்த செவ்வகத்தை 8 சமபாகங்களாகப் பிரிக்க வேண்டும் பிரிந்த ஒவ்வொரு பகுதிக்குள்ளும் ஒரு நட்சத்திரம் இருக்க வேண்டும். உங்களால் முடியுமா? முயற்சித்துப்பாருங்கள்.

# புதிர் விலகிய நேரம்



**சாய்ந்தமருதூர் எம்.அஷ்ரப் இஸ்மாயில்**

தோட்டத்தின் மத்தியிலிருந்த ஒரு மரத்தினடியில் அமர்ந்திருந்தான் கமலநாதன். அவன் உடம்பெல்லாம் வியர்வையால் கழுவப்பட்டுக் கொண்டிருந்தது. உடம்பிலிருந்து பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருந்த வியர்வை காரணமாக அவன் வேட்டி கூட முற்றாக நனைந்துவிட்டிருந்தது.

இதற்கிடையே அங்கு வந்த அவனது தாயார் அவனை ஒரு புதிரைப் பார்ப்பது போல் பார்த்துக் கொண்டிருந்தார். ஒருநாளும் இப்படி தகப்பனாருடன் உதவிக்குக் கூட வந்து வேலை செய்யாதவன், ஏன் இன்று யாரும் சொல்லாமல் தனியாக வந்து வேலை செய்து வியர்த்துக் கொட்டிக் கொண்டிருக்கிறான் என்று அவருக்கு ஆச்சரியமாக இருந்தது.

சிந்தனை வயப்பட்டிருந்தவன் தாயாரின் சத்தம் கேட்டுத் தன்னை விடுவித்துக் கொண்டு எழுந்தான்.

"தம்பி, உன் உடம்புக்கு ஏதாவது" என்று, தாயார் தொடங்கு முன் "ஒன்றும் இல்லையம்மா, அலுப்பாயிருந்தது அதுதான், இங்கே வேலை செய்வோமெண்டு வந்தனான்" என்றான். பின்னர் தாயாரைச் சமாளித்துவிட்ட திருப்தியில் வீட்டுக்குள் சென்றான்.

வீட்டுக்குள் வந்தும் கூட அவன் மனம் நிம்மதியடையவில்லை. சுமதி மீது அவனுக்கு ஆத்திரமாகவே வந்தது. அவன் வாய் அவனையுமறியாமல் "துரோகி" என்று முணுமுணுத்துக் கொண்டது.

அவன் யார் சொன்னாலும் அந்தச் செய்தியை நம்பியிருக்கமாட்டான், அவளது உயிர்த்தோழி உமா சொன்னதிலிருந்துதான் அவ்விடயத்தை முற்று முழுதாக நம்பினான். இதற்கு முன்னரும் சுமதி பற்றிப் பலவிதமான செய்திகளைப் பலர் வாயிலாகக் கேள்விப்பட்டிருந்தான்.

அவன் சுமதியைக் காதலிக்கத் தொடங்கியதிலிருந்து யாரும் அவனிடம் எந்தக் கூடாத வார்த்தையையும் அவள் பற்றிக் கூறுவதில்லை. அவள் மீது தற்போது அவனுக்கிருந்த நம்பிக்கை காரணமாகவும் முன்னர் கேள்விப்பட்டவற்றை நம்ப மறுத்ததோடு, அப்படிக் கேட்டால் தன்மீது அவள் வருத்தப்படுவாள் என்றும் நினைத்து அவற்றையெல்லாம் அவன் மறந்தவனாக அவள்மீது பூரணமான நம்பிக்கை வைத்திருந்தான்.

இன்று உமா சொன்னதிலிருந்தும், சில சந்தர்ப்ப சூழ்நிலைகளையும் வைத்து ஆராய்ந்து பார்த்தான். அவனுக்கு ஒருசில உண்மைகள் உதயமானது.

அவன் பல கடிதங்கள் எழுதியும் அவள் பதில் எழுதாததற்கு இதுதான் காரணமாயிருக்கும் என்று நினைத்தவனுக்கு ஆத்திரம்தான் மேலிட்டுக் கொண்டிருந்தது.

அதுதான் உடனே வந்தவன் ஆத்திரம் தீருமட்டும் தோட்டத்தைக் கொத்தி வேலை செய்தான். பின்னர்தான் களைத்துப்போய் மரநிழலில் சாய்ந்து கொண்டான். அந்த நேரத்தில்தான் அவனது தாயாரும் அங்கு வந்திருந்தார்.

அன்று அவன் அவளைப் பற்றிக் கேள்விப்பட்டதெல்லாம் அவளது வீட்டில் அவளது மாமாவின் மகன் வந்து தங்கியிருக்கிறான். அவனுடன் சுமதி மிக நெருக்கமாக இருக்கிறாள். இருவரும் ஊரில் ஒன்றாகக் கடைகளுக்கு வந்து போனதைப் பல நண்பர்கள் கண்டிருக்கின்றார்கள். இவற்றை அவர்கள் சொன்னபோது முன்னர் அவன் நம்பித்தான் இருந்தான். பின்னர்....

ஒருநாள் அவளாக வந்து அவளின் காதலைச் சொன்னபோது அவளை நம்பினான். முன்னர் கேள்வியுற்றவற்றை மறந்துவிட்டான். காரணம் அவள் வேறு ஒருத்தனைக் காதலித்திருந்தால் அவனிடம் வந்து தனது காதலைச் சொல்லியிருப்பாளா?

ஆனால், சுமதி நீ என்னை வஞ்சித்துவிட்டாய். உன்னால் அன்று எனக்கேற்பட்ட அவப்பெயர்கள்தான் எவ்வளவு? பாடசாலையில் உன்னையும் என்னையும் இணைத்துப் பேசாத வாய்களுண்டா? எங்கள் பெயர் எழுதப்படாத சுவர்கள்தான் உண்டா?

எங்களுக்குள் இருந்த அன்பு காரணமாக நாங்கள் எங்களைப் பற்றித்தான் சிந்தித்தோம். மற்றவர்களைப் பற்றி, வெளி உலகத்தைப் பற்றி, பெற்றோர்களைப் பற்றியெல்லாம் சிந்திக்க மறந்துவிட்டோம். வெளி உலகமும் கண்களை மூடிக்கொண்டிருக்கிறது என்று நாம் நினைத்திருந்தது தான் நாம் விட்ட தவறு. அது அகலத் திறந்த கண்களால் எங்கள் செய்கைகளைப் பார்த்துக்கொண்டிருந்தது, விமர்சித்துக் கொண்டிருந்தது.

திடீரென்று சுமதி பாடசாலையை விட்டு இடை நிறுத்தப்பட்டாள். அப்போதுதான் அவன் கண்களைத் திறந்து வெளி உலகத்தைப் பார்த்தான். அவர்கள் பெயர் எழுதப்படாத சுவர்கள் இல்லாதிருப்பதை அப்போதுதான் கண்டான். துடியாய்த் துடித்தான், வேதனைப்பட்டான். "நான் ஆண் எப்படியோ சமாளித்துக் கொள்வேன், பெண்பிள்ளை அவள் பாவம்" என்று அவன் தன்னையே நொந்து கொண்டான்.

அவள் பெற்றோருக்கும் இது தெரியவந்ததால்தான் அவளின் பாடசாலை வாழ்க்கைக்கு முழுக்குப் போட்டுவிட்டார்கள் என்பதையறிந்து மிகவும் கவலையடைந்தான். அவளை மறக்க முடியாமல் பல கடிதங்கள் வரைந்துவிட்டான், எதற்கும் பதிலில்லை. உண்ண முடியாது, உறங்க முடியாது மிகவும் கஷ்டப்பட்டான்.

பாவம்! வீட்டார்களின் கட்டுப்பாட்டில் அவள் இருப்பதனால்தான் அவனுக்குப் பதில் வரைய அவளால் முடியவில்லை, தனது கடிதங்களைக் கூட அவளிடம் காட்டினார்களோ என்னவோ என்று பலவாறு சிந்தித்துக் கொண்டிருந்தபோது, அவளின் பாடசாலை வாழ்க்கை அவனால் பாழடிக்கப்பட்டுவிட்டதை எண்ணிக் கலங்கிக் கொண்டிருந்தபோது.....

அவனின் நிலைமையைப் பார்த்த அவனது நண்பர்களுள் ஒருத்தன் சொன்னான். "நீ ஏன் மச்சான் அவளை இன்னும் நினைத்துக் கலங்கிக் கொண்டிருக்கிறாய்? அவள் இப்போது அவளின் மச்சான் முறைப் பொடியனை லவ் பண்ணுகிறாளடா" என்று சொல்லி முடிக்கவில்லை. "யாரைப்பற்றியடா இந்த வார்த்தை சொல்கிறாய்? என் சுமதி அப்படிப் பட்டவளல்ல" என்று அவனுடன் சண்டைக்கே போய்விட்டான். மற்ற நண்பர்களெல்லாம் அங்கு இருந்ததால் அவர்கள் ஓடிவந்து விலக்கி விட்டனர். இல்லாவிட்டால் சண்டை பெரிதாக இருந்திருக்கும்.

இதிலிருந்து யாரும் இதைப்பற்றி அவனிடம் பேசுவதில்லை. இப்படி இருக்கும் போதுதான் அவளது தோழி உமா வந்து 'சுமதி வேறு ஒருத்தரைக் காதலிப்பதாகவும், அவரையே திருமணம் செய்து கொள்ள இருப்பதாகவும், அவளின் வீட்டாருக்கும் இதில் பூரண திருப்தி, அவர்களின் சம்மதத்துடன்தான் இக் கல்யாணம் நடக்க இருக்கிறது' என்றும் சொன்னாள்.

உமா சொன்னவற்றை நம்பவும் முடியவில்லை, நம்பாமல் இருக்கவும் முடியவில்லை, சுமதி இப்படிச் செய்வாளா என்று நினைத்தவனுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. இதை அவன் நண்பர்கள் கேள்விப்பட்டால் என்ன சொல்வார்கள். அன்று ஒருவன் அப்படிச் சொன்னதற்குத்தானே நான் ஆராய்ந்து பார்க்காமல் சண்டைக்குப் போய் அசிங்கப்படுத்திவிட்டேன். இன்று அவன் முகத்தில் எப்படி விழிப்பது? நானே போய் அவனிடம் நீ சொன்னதுதான் சரி என்று எப்படிச் சொல்வது?

அவளின் யோக்கியதையைப் பற்றிக் கேள்விப்பட்டால் என்னில் காறி உமிழ மாட்டானா? அவன் மனம் அவளையே திட்டித் தீர்த்துக் கொண்டிருந்தது.

"நீ நினைத்தபடி யாரை வேண்டுமானாலும் லவ் பண்ணு. எப்படி வேண்டுமானாலும் நடந்துகொள். என் நிம்மதியையெல்லாம் நீ ஏன் கெடுக்க வேண்டும்" என்று அவளின் துரோகத்தை நினைத்து நினைத்தே கமலநாதனின் இரு நாட்கள் நிம்மதியின்றிக் கடந்தது.

மூன்றாம் நாள் அவனுக்கு ஒரு கடிதம் வந்தது, இந்த நாளில் அவனுக்குக் கடிதம் போட யாரும் இருக்கவில்லை. சந்தேகத்தோடு அதனைப் பிரித்துப் படித்தான்.

அவனையே அவனால் நம்ப முடியவில்லை, அவன் யாரைத் துரோகி என்று திட்டித் தீர்த்துக் கொண்டிருந்தானோ, அதே சுமதிதான் இவ்வளவு காலத்திற்குப் பின் கடிதம் எழுதியிருந்தாள்.

'கமல், என்னை என் பெற்றோர் உங்களிடமிருந்து பல நாட்களாகப் பிரித்து விட்டார்கள். ஆனால் நான் உங்களிடமிருந்து ஒரு கடிதமாவது வருமென்று இவ்வளவு நாட்களும் எதிர்பார்த்துக் காத்திருந்தேன். ஆனால் நீங்கள் என்னை நினைத்ததாகவேயில்லை. ஒரு தரமாவது நீங்கள் என்னை வந்து பார்த்திருக்கலாம். ஏன் என்னை மறந்துவிட்டீர்களா?! நீங்கள் ஆண்தானே! நான் இல்லாவிட்டால் இன்னுமொருவள். நான் பெண், என்னால் என்ன செய்ய முடியும்?! உங்களை மறக்க முடியவில்லை.

என்னை என் வீட்டில் உங்களுடன் பழகியது தெரிய வந்ததும் பாடசாலையிலிருந்து இடை நிறுத்தியதோடு மாத்திரமல்லாமல் சிறு வயதிலிருந்து எங்கள் வீட்டுக்கு வந்து பழகிக் கொண்டிருந்த மச்சான் முறையான ஒருவருக்குக் கட்டிவைக்க முயற்சி எடுக்கிறார்கள். சிறுவயதிலிருந்து பழகிய அவரை மச்சான் முறையாகப் பார்க்க என்னால் முடியவில்லை. ஒரு சகோதரன் போன்றே நினைக்கிறேன் என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்து விட்டேன். வீட்டாரும் கேட்கிறார்களில்லை. அவரும் கேட்கிறார் இல்லை. திருமணம் நடந்தால் சரியாகிவிடும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

அன்றொருநாள் அவரின் வற்புறுத்தலின் பேரிலும், வீட்டாரின் நச்சரிப்பினாலும் அவரின் வெளியிலிருக்கும் அக்கா எனது ஒரு போட்டோவை எடுத்து அனுப்பச் சொன்னாளாம் என்று அவருடன் சென்று போட்டோ எடுத்துக்கொண்டு வரும் போது என் நண்பியும் உங்கள் நண்பர்களுள் ஒருவனாகிய ரகுவின் காதலியுமான உமாவைச் சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.

நீங்கள் வேறு யாரையோ விரும்புவதாகவும் எனது நினைப்பே அற்று இருப்பதாகவும் கூறினாள். என்னால் நம்பவும் முடியவில்லை. அச் செய்தியைத் தாங்கிக் கொள்ளும் சக்தியும் என்னில் இருக்கவில்லை. அப்படியே மயங்கிவிட்டேன். பின்னர் கண்விழித்துப் பார்த்தபோது நான் வீட்டில் இருந்தேன். எப்படி கமல் உங்களால் இப்படி மாற முடிந்தது. அதுதான் என்னைச் சந்திக்க, கடிதம் எழுத முயற்சிக்கவில்லையா?'

"ஐயோ உமா, உன்காதலனுடன் சண்டைக்குப் போனதை காரணமாக வைத்து ரகுவுடன் சேர்ந்துகொண்டு என்னை வஞ்சித்து விட்டாயே, உன்னைப்போல் பெண்தானே அவளும், உன்னை சுமதி எப்படி நண்பியாக வைத்திருந்தாள். நீ ஒரு நச்சுப் பாம்பு என்பதை நிரூபித்து விட்டாயே, நான் உன்னை நம்பியது எவ்வளவு பெரிய தப்பு. அதேபோல் சுமதியும் உன்னை நம்பியதால் வேதனைக்குள்ளாகிவிட்டாளே" என்று கூறியவாறு அழுதான். "பார்த்தீரா உன் பெற்றோர் கூட என் கடிதங்களை மறைத்து விட்டார்களே" என்று பதறியவன் கடிதத்தைத் தொடர்ந்தான்.

"உங்களுக்குத் தந்த என் உள்ளம், என் உயிர் உள்ள வரை உங்களுடனேயே இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டேன். தற்போதைய நிலையைப் பார்த்தால் அது முடியாது போல் தெரிகின்றது.

வீட்டில் திருமணத்திற்கு நாள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கு வந்தும் உங்களுடன் சேர முடியாதவாறு உங்கள் மனதில் இன்னுமொருவள். என்னால் என்ன செய்ய முடியும், சாவதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை.

நான் இறுதியாக வாழ்ந்த நாட்கள் அவ்வளவும் உங்கள் நினைவாகவே வாழ்ந்துவிட்டேன். அது போதும் எனக்கு. என் இறுதி யாத்திரையிலாவது கலந்து கொள்ளுங்கள் "என்று எழுதியிருந்தாள்.

கடிதத்தைப் படித்த அவனுக்குக் கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை, உடனே தன்னைத் தயார்படுத்திக்கொண்டு அவளின் ஊருக்குச் சென்று அவளின் வீட்டை அடைந்தான். அவள் அங்கு இல்லை. அங்கிருந்தவர் ஒரு ஆஸ்பத்திரியைச் சொல்லி அங்கு சென்று பார்க்குமாறு கூறினார்.

அவன் பதைபதைத்து அந்த ஆஸ்பத்திரிக்கு ஓடினான். அவள் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டுக் காப்பாற்றப்பட்டு அந்த ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தாள். இன்னும் அவளுக்கு நினைவு திரும்பவில்லை. உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்தாள். டாக்டர்கள் பிழைப்பது கஸ்டம் என்று சொன்னார்கள்.

அவளின் பெற்றோர்கள் வெளியே குழுமியிருந்தனர். அவன் உள்ளே சென்றான். அவள் நிலைமையைப் பார்த்துக் கண்ணீர் விட்டான். "அவசரப்பட்டுவிட்டியே சுமதி" என்றவாறு அவளின் தலையைக் கோதிவிட்டான்.

அப்போது யாரும் எதிர்பாராத வகையில் அவள் கண்விழித்தாள். எல்லோருக்கும் ஆச்சரியம், எல்லோர் முகங்களும் மலர்ந்தது. அவனைப் பார்த்து முறுவலித்தாள். அவன் அவளது கையைப் பற்றிக் கொண்டான். அவளது கை அவனைப் பற்றியவாறு இறுகியது. கண்கள் அவனைப் பார்த்தவாறு அப்படியே நிலைத்தன.

அங்கு நின்றோர் எல்லோரும் "சுமதி" என்று உரத்துக் கத்திய குரல் அந்த ஆஸ்பத்திரியையே அதிர வைத்தது. அந்தச் சத்தத்துள் கமலநாதனின் சத்தமும் கலந்திருந்தது. மறு கையால் அவளின் கண்களை மூடியவாறு அவன் மயங்கிக் கீழே சாய்ந்தான்.

# சவால்

"அம்மா! என்னம்மா நீ அண்ணாக்குக் கூடவா ஒரு வாய் சோறு குடுத்திட்டியே. நான் எண்ணிக் கொண்டுதான் இருந்தனான். போ நான் உன்கூட போஸ். ம்.. ம்.. ம்.. ம்...." அழுது கொண்டே பிரியா சென்று வானத்து நிலவொளி ஊடுருவாத இடத்தைத் தேடி அதிலே சுருண்டு கொண்டாள். கீர்த்திபனை எழுப்பி, தண்ணீர் அருந்தச் செய்து விட்டு, காய்ச்சலுக்கான மாத்திரையையும் போடச் செய்து, ஒரு மூலையில் புடவைத் தலைப்பில் படுக்க வைத்துவிட்டு, தன் வயிற்றில் இருக்கும் மூன்று மாதக் குழந்தைக்காக இரண்டு வாய் சோற்றுக் கட்டிகளை உண்டுவிட்டு, தனக்கென்று வெயிலிலும் மழையிலும் காக்கும் வீட்டின் மூலையில் முடங்கிக் கொண்டாள் நிர்மலா. கண்களை அவள் மூடினாலும் கண்ணீர் அடைபடாமல் வெளியே பீறிட்டது. முந்தானையால் துடைத்துக் கொண்டாள். நடு இரவில் பிரியா தூக்கக் கலக்கத்தில் அரற்றினாள். "அம்மா அம்மா நீ சாப்பிடும்மா. அம்மா அம்மா". அவளின் வாய் நிறைந்த "அம்மா" என்ற வார்த்தைக்காகத்தான், நிர்மலா இன்னும் உயிரோடு இருக்கிறாள். ஞானதர்ஷன் இறந்து இரண்டு வருடமாகிறது. இந்த இரண்டு வருடத்துக்குள் எத்தனை எத்தனை மாற்றம். நிர்மலா தன் வயிற்றையும் பார்த்துக் கொண்டாள். "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்பார்களே. அப்படிப்பட்ட தாய் தந்தையரே தன்னை ஒதுக்கிவிட்டனர் எனும் போது நிர்மலாவால் அழுகையை அடக்க முடியவில்லை.

"புள்ள நிர்மலா இண்டைக்கு என்னால முடியல்ல, எசமானி அம்மாட வீட்ட வேலைக்குப் போயேன். நாளைக்கு, நாபோறன்". என்ற அம்மாவின் பேச்சைத் தட்ட முடியாது, பதினொன்று வரை படித்துவிட்டு வீட்டிலிருந்த நிர்மலா வேலைக்குப் புறப்பட்டாள். அன்றிலிருந்து தனது வாழ்க்கை தடம் மாறப் போகிறது என்பதை நிர்மலா அறிந்திருக்கவில்லை. காண்டீபன். வசீகரத் தோற்றமும், முக அமைப்பும், கொண்டவன். எசமானி அம்மாளின் ஒரே தவப் புதல்வன். "கண்டதும் காதல்" என்பதனை நிர்மலா அப்போதுதான் அறிந்தாள். நாட்கள் செலல்ல நிர்மலா காண்டீபன் காதலும் மொட்டாகி, பூவாகி, பூத்து மலர்ந்தது. அன்றே வாடி விடுவது பூக்களுக்கும் தெரியாதே! விசயம் அறிந்த நிர்மலாவின் தாய் தந்தை, எசமானி அம்மாளுக்குத் தெரியு முன்பே தாய் மாமன் ஞானதர்சனுக்கு நிர்மலாவைத் திருமணம் செய்து வைத்தார்கள். கீர்த்திபனையும், பிரியாவையும் நிர்மலாவின் கையில் கொடுத்து விட்டு மாரடைப்பால் இறந்து போனான் ஞானதர்ஷன். நிர்மல்ா கதியற்றுப் போனாள். திருமணத்தை நடாத்தி வைத்ததோடு பெற்றோரின் கடமை முடிந்துவிட்டதாகவே நினைத்தனர், நிர்மலாவின் தாய் தந்தையர். நாலு வீடுகளில் பாத்திரம் தேய்த்து அதில் கிடைக்கும் வருமானத்தில் சிக்கனமாக குடும்பம் நடத்தினாள் நிர்மலா. மீண்டும் எசமானி அம்மாளின் கடையிலேயே தனக்குத் தேவையான பொருட்களை வாங்கத் தொடங்கினாள். அதன் பிறகு "வாடிய பூவிற்கு தண்ணீர் ஊற்றினார்கள்". ஆம் காண்டீபன் குறைவான பணத்தை எடுத்து, நிறைவாக பொருட்களை நிர்மலாவிற்கு கொடுக்கத் தொடங்கினான். அன்பற்றிருந்த நிர்மலாவிற்கு அன்பு ஒரு வழியில் கிடைத்ததும் தன்னையே காண்டீபனுக்குக் கொடுத்ததுதான் தாமதம், தாசி, விபசாரி என்ற பட்டங்களுடன் ஊரைவிட்டு ஒதுக்கப்பட்டாள் நிர்மலா. இப்போது தெளிவான வானத்தை வீட்டின் உள்ளிருந்தே பார்த்துக்கொண்டிருந்த நிர்மலாவின் கண்களும் தீர்க்கமான முடிவினைக் காட்டிக் கொண்டிருந்தது. ஆம் அவள், "குழந்தைகளை ஊர் போற்றும்படி வாழ வைப்பேன்" என்று உறுதியோடு அவ்வூர் மக்களுக்குச் சவாலாய் எழுந்து நின்றாள். ■

**திருமலை–கஸ்தூரி**

## அங்கம் 09




**மு**ம்பை

பொலிஸ் கமிஷனர் விஷ்ணுவர்தன்- அந்தரங்க ஆலோசனை அறையில் மற்ற அதிகாரிகளுக்கு மத்தியில் கவலையாய் தெரிந்தார்.

சுவர்க் கடிகாரம் ஏழு மணியைக் காட்டிக் கொண்டிருந்தது. ஏர்க்கண்டிஷனரின் மெலிதான ரீங்காரிப்புக்கு நடுவில் ஒரு அதிகாரி ஹிந்தியில் வேகமாய் பேசிக் கொண்டிருந்தார்.

"கடத்தல் பேர்வழிகள் விடுத்துள்ள எந்தக் கோரிக்கைகளுக்கும் நாம் வளைந்து போகக்கூடாது. கோரிக்கைகளுக்கு ஒத்துப் போகிற மாதிரி நடித்துக் கொண்டே அவர்களை நாம் நெருங்க வேண்டும். சமயம் பார்த்து அதிரடிப் படைகளை அனுப்பித் தாக்க வேண்டும்."

"யூ ஆர் ராங் மிஸ்டர் நந்தா. நாம் நடிக்கிறோம் என்று அவர்களுக்குத் தெரிந்து போனால் விளைவு மகா மோசமாயிருக்கும்."

"பின்னே என்ன செய்யலாம்?"

"பெங்களூர் ஏர் போட்டில் ஃபிளைட் லேண்ட் ஆனதும் கடத்தல் பேர்வழிகள் எப்படியும் தொடர்பு கொள்வார்கள். அப்படித் தொடர்பு கொள்ளும் பொழுது பேச்சுவார்த்தைக்கு அழைத்து ஒரு சுமுகமான முடிவுக்கு வரலாம்."

"அவர்கள் பேச்சுவார்த்தைக்கு வருவார்களா?"

"வர வைக்கலாம்."

இன்னொரு அதிகாரி எழுந்தார். "இந்த விமானக் கடத்தல் நாம் எதிர்பார்க்காத ஒன்று. நாம் சிறிது கவனக் குறைவாக நடந்து கொண்டா



லும் விமானத்தில் இருக்கிற இருநூத்திசொச்ச பிராணிகளும் கொல்லப்படுவார்கள். காரணம், கடத்தல் பேர்வழிகள் ஏராளமான கோபத்திலும் ஆத்திரத்திலும் இருக்கிறார்கள்."

கமிஷனர் பெருமூச்சு விட்டார். "மிக மிக கவலை தரும் விமானக் கடத்தல் இது. தெரிந்தோ தெரியாமலோ இன்னொரு ஆபத்தில் நாம் சிக்கியிருக்கிறோம்."

எல்லோரும் கமிஷனரையே பார்க்க-

அவர் தொடர்ந்தார். "தமிழ்நாட்டு க்ரைம் பிராஞ்ச் ஆபீஸர் மிஸ்டர் விவேக்கும் அவருடைய மனைவியும் அதே விமானத்தில் இருக்கிறார்கள். விவேக் நம்முடைய யோசனைப்படி பெயரை மாற்றிக் கொண்டு பயணம் செய்தாலும் கடத்தல் பேர்வழிகளுக்கு உண்மை தெரிந்துவிட்டால்- அந்த நிமிஷமே சுட்டு விடுவார்கள்."

கமிஷனர் சொன்னதைக் கேட்டு அதிகாரிகள் அதிர்ச்சியோடு ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கொண்டார்கள்.

சீட்டை வாங்கிப் பிரித்துப் பார்த்த கவியின் உதட்டில் விகாரமாய் ஒரு புன்னகை அரும்பியது. தோள்களை குலுக்கிக் கொண்டே சொன்னான்.

"மதிப்பிற்குரிய பயணிகளே! ஆண்டவன் தன்னுடைய சித்தத்தை எனக்குத் தெரிவிச்சுட்டான். டாக்டர் நீங்க உட்கார்ங்க. பொணமா மாற உங்களுக்கு இன்னும் நேரம் வரலை. என்ஜினியர் ஸார் நீங்களும் தப்பிச்சிட்டீங்க. மாஜி அமைச்சர் தமிழ்நாட்டில் இன்னும் நிறைய ஊழல்களைப் பண்ண வேண்டியிருக்கிறதுனால அவரும் தப்பிச்சுட்டார். லாயரும் லிஸ்டியிலிருந்து விலகி விட்டார். ஸோ, மிஞ்சியிருக்கிறது நடிகை ஜெயந்தி ஸ்ரீதான்."

"நோ....ஓ.ஓ.ஓ.ஓ."

ஜெயந்தி ஸ்ரீ அவலமாய் வீறிட்டாள்.

கவி, அவளை நோக்கி மெல்ல நடந்து போனான்.

"ஏம்மா இப்படி கத்தறே...? துப்பாக்கியாலே சுட்டா வலிக்குமேன்னு பார்க்கிறியா? வலிக்காமே நீ சாகலாம். சரியா துல்லியமா இருதயத்துக்குக் குறி வெச்சு சுட்டா சுலபமா உயிர் போயிடும்."

சொல்லிக் கொண்டே பிஸ்டலை அவளை நோக்கித் திருப்பினான். ஜெயந்தி ஸ்ரீ வியர்த்துக் கொண்டே மரண பயத்தில் உறைந்து போன கண்களோடு சுற்றும் முற்றும் பார்த்து இருக்கைக்குள் கீழே ஒளிய முயன்றாள்.

முடியாமல் நிமிர்ந்தாள்.

கவி பிஸ்டலின் ட்ரிக்கரை இயக்க தோட்டா ரகசியம் பேசுகிற மாதிரி ஒரு புயல் வேகத்தோடு ஜெயந்திஸ்ரீயின் தொண்டையை நோக்கிப் பாய்ந்தது.

புளிச்சென்று ரத்தத்துளிகள் முன்புற இருக்கைகளின் மீது சிதற ஜெயந்தி ஸ்ரீ சரிந்தாள். விழிகள் சாய்

எழுதுவது
**ராஜேஷ்குமார்**

வாய் வெறித்தன.

"ஜெயராஜ்."

"என்ன கவி?"

"கலைக்கு சேவை செஞ்ச அம்மாவை- அந்தப் பெரியவரோட பிணத்துக்குப் பக்கத்துல இழுத்துப் போடு! முடிஞ்சா டோர் பக்கம் கொண்டு போயிடு. பெங்களூர் ஏர்போர்ட் வந்ததும் ரன்வேயில் வீசியெறிய வசதியா இருக்கும்."

ஜெயராஜ், ஜெயந்தி ஸ்ரீயை நோக்கிப் போனான். கவி பிஸ்டலின் வாயை ஊதிக் கொண்டே இருக்கைகளுக்கு மத்தியில் மெதுவாய் நடந்து கொண்டே பேசினான். "நம்மோடு பயணம் செஞ்ச ரெண்டுபேர் இந்த நிமிஷம் உயிரோடு இல்லை. இந்த நிலைமை உங்கள்ல யார்க்கு வேணுமானாலும் வரலாம். எங்க கோரிக்கைகளுக்கு அரசாங்கம் இணங்கிட்டா உங்களுக்கு ஆயுசுகெட்டி. இணங்கலைன்னா உங்களையெல்லாம் அமரர் ஆக்கிறதை தவிர எங்களுக்கு வேற வழியில்லை."

கவியை எல்லோரும் மௌனமாய் பயமாய் பெண்கள் கண்ணீர் கோட்டிங்கோடு- பார்த்துக் கொண்டிருக்க விவேக் மட்டும் யோசனையோடு பார்த்தான்.

"கையில் பிஸ்டலோடு அலையும் இவனை குபீரென்று தாக்கி வீழ்த்த முடியும். ஆனால், மற்றவர்கள் உஷாராகி விடுவார்களே!"

"இவர்களிடம் பிடிபட்டால் நிச்சயம் சுட்டு விடுவார்கள்"

"என்ன செய்யலாம்....?"

விவேக் தீவிரமாய் யோசித்துக் கொண்டிருக்க - கவி அவனைத் தாண்டிப் போனான். நான்கடி நடந்தவன் சட்டென்று நின்று திரும்பினான்.

கண்கள் இடுங்க விவேக்கைப் பார்த்தான். பிஸ்டலில் மூக்கைச் சொறிந்து கொண்டே கேட்டான்.

"உன்னை எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கே..உம்பேரென்ன?"

"மனோஜ்குமார்" விவேக் உட்கார்ந்து கொண்டே சொன்னான். கவி உன்னிப்பாய் பார்த்தான்.

மனோஜ்குமாரா...? உனக்கு என்ன உத்யோகம்...?"

"உத்தியோகமில்லை....பிசினஸ்."

"என்ன பிசினஸ்?"

"நைலான் பெல்டிங்...கோயமுத்தூர்ல 'ராஜேஷ் ட்ரேடர்ஸ்'ங்கிற கம்பெனியை நடத்திக்கிட்டு வர்றேன்..."

"ராஜேஷ் ட்ரேடர்ஸா?"

"ஆமா..."

"இவ உன்னோட மனைவியா...?"

"ஆமா..."

"அழகாயிருக்கா..."

விவேக் கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள- கவி சிரித்துக் கொண்டே காக்பிட்டுக்குள் நுழைந்தான். ஹெட் போனோடு உட்கார்ந்து- வியர்வை பெருகி ஃபிளைட்டை இயக்கிக் கொண்டிருந்த பைலட் திரும்பிப் பார்த்தார். கவி கேட்டான்.

"பெங்களூர் ஏர்போர்ட் வர எத்தனை நிமிஷமாகும்?"

"பத்து நிமிஷம்..."

"ஃபிளைட்டை வழக்கமான இடத்துல லாண்ட் பண்ணி நிறுத்தக் கூடாது. நூறடி தள்ளித்தான் நிறுத்தணும்."

"சரி..."

"சரி ஸார்ன்னு செல்லேன். குறைஞ்சா போயிடுவே?"

"சரி ஸார்..."

"உன்னோட ஃபிளையிங் ஸவர்ஸ் எவ்வளவு?"

"பத்தாயிரம் மணி நேரம்...."

"அப்போ எக்ஸ்பிரியன்ஸ் ஹேண்ட்தான் நீ...?"

என்று சொன்ன கவி, மெல்லிய குரலில் கேட்டான்.

"பெங்களூர் ஏர்போர்ட் கண்ட்ரோல் டவர் ஆபீஸர் கிட்டே நான் பேசணும். லைனை உசுப்பி குடு."

பைலட் கொடுத்தார்.

மைக்ரோ போனில்- கவி பேசினான்.

"கண்ட்ரோல் டவர்...?"

"எஸ்...."

"இந் நேரம் உங்களுக்கு விவரம் தெரிஞ்சிருக்கலாம். மும்பை போக வேண்டிய ஃபிளைட் 509 இந்த நிமிஷம்- எங்க கண்ட்ரோல்லதான் இருக்கு. பெங்களூர் ஏர்போர்ட்ல ஃபிளைட் லாண்ட் ஆக அனுமதி வேணும்...."

"அனுமதிக்கிறோம்."

"ரொம்ப தாங்க்ஸ். இன்னொரு உதவி."

"என்ன?"

"ஃபிளைட்ல ரெண்டு டெட்பாடி இருக்கு. அதை ரன்வேயில் எடுத்து வீசிடுவோம். கொஞ்சம் சிரமம் பார்க்காமே பொறுக்கிட்டுப் போயிட நீங்களா?"

"டெ...டெ... டெட் பாடியா?"

"எஸ்... ஏதோ எங்களாலே முடிஞ்ச சின்ன காணிக்கை. நாங்க டிமாண்ட் பண்ணியிருக்கிற கோரிக்கைகளை அரசாங்கம் நிறைவேத்தலைன்னா இன்னும் உங்களுக்கு அதிகமான காணிக்கை சேர ஆரம்பிச்சுடும்."

"பிரயாணிகளுக்கு எந்த ஆபத்தையும் உண்டாக்க வேண்டாம். உங்களுடைய கோரிக்கைகளை பரிசீலித்துக் கொண்டிருக்கிறார்கள்."

"இந்த பரிசீலிப்பு நாடகமெல்லாம் எங்ககிட்ட வேண்டாம். நாளைக்கு காலையில் சூரியன் பிறக்கும் போது- எங்களோட கோரிக்கைகள் நிறைவேறியிருக்கணும். இல்லேன்னா மோசமான விளைவுகளை நீங்க சந்திக்க வேண்டியிருக்கும். இந் நேரம் கமிஷனர் விஷ்ணுவர்தனுக்கு நியூஸ் போய்- அவர் தனி விமானத்தில் புறப்பட்டு பெங்களூர் வந்து கொண்டிருக்கலாம். அவர் பெங்களூர் ஏர்போர்ட் வந்ததும்- கண்ட்ரோல் டவரிலிருந்து என் கூட பேசச் சொல்லணும்."

"சரி..."

(குறி தொடரும்)

# ஆறுமனமே ஆறு!

## வெளிநாட்டு மோகமும் குடுமபச் சீரழிவும்

**வெ**ளிநாடு சென்று திரும்பிய புஸ்பவதி எனது அலுவலகத்திற்கு வந்திருந்தாள். அவளது தலையலங்காரமும், முகப் பொலிவும், உதடுகளில் பூசப்பட்டிருக்கும் லிப்ஸ்ரிக்கும்,, அவள் அணிந்திருந்த கவர்ச்சியான உடையும் சில தினங்களுக்கு முன்புதான் வெளி நாட்டிலிருந்து வந்திருக்க வேண்டும் என்று ஊகிக்கக் கூடியதாக இருந்தது.

புஸ்பவதியை எனது ஆலோசனை மையத்தில் அமர்த்தினேன். "சொல்லுங்கள் புஸ்பவதி! என்ன விடயமாக என்னிடம் வந்தீர்கள்?" புஸ்பவதியின் கண்கள் சிவந்தன. மளமளவென கண்ணீர் சொரிந்தது. அவளால் பேச முடியவில்லை. தொடர்ந்து அழுதாள். "புஸ்பவதி! மனிதராகப் பிறந்துவிட்ட நமக்குப் பிரச்சனை வருவது இயற்கைதான். பிரச்சனைக்குத் தீர்வு காண்பது நமது மன உறுதியிலேயே தங்கியுள்ளது. நீங்கள் என்னிடம் வந்தது உங்கள் பிரச்சனைக்குத் தீர்வு காண வேண்டும் என்பதற்காக. நிச்சயமாகத் தீர்வு வரும் என்ற நம்பிக்கையில் என்னிடம் உங்கள் பிரச்சனையை பகிர்ந்து கொள்ளுங்கள்." என்று புஸ்பவதிக்குத் தெம்பூட்டினேன்.

புஸ்பவதி பேசத் தொடங்கினாள்;

"அண்ணன்! நான் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பைச் சேர்ந்தவள். தற்போது மானாமதுரை முகாமில் வசித்து வருகிறேன். எனக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர். எனது கணவரும், முல்லைத்தீவு குமுளமுனையைச் சேர்ந்தவர். அகதிகள் முகாமில் வாழும் எனது கணவருக்குத் தொழில் வாய்ப்பு கிடைக்காததால் கஸ்டத்தின் நிமித்தம் நான் கொழும்பு சென்று வெளிநாடு சென்றேன். இரண்டு வருடம் நான் படாதபாடுபட்டுச் சம்பாதித்துக் கிட்டத்தட்ட ஒரு லட்சம் ரூபா எனது கணவருக்கும் பிள்ளைகளுக்கும் அனுப்பினேன். சென்ற வாரம்தான் நான் வெளிநாட்டிலிருந்து இந்தியா வந்தேன். இங்கே வந்து பார்த்தால் எனது புருஷன் இன்னுமொரு பொம்பிளையுடன் குடும்பம் நடத்துகிறார்." என்றவள் தன்னை மறந்து பெரிய சத்தமாக அழத் தொடங்கினாள். மிகச் சிரமப்பட்டு புஸ்பவதியின் அழுகையை நிறுத்தவேண்டியிருந்தது.

"புஸ்பவதி! கொஞ்சம் அமைதியாக இருங்கள். உங்கள் கணவருடைய பெயர் என்ன," என்று கேட்டேன்.

"தர்மலிங்கம்" என்றாள்.

"நீங்கள் எந்த நாட்டில் வேலை செய்தீர்கள்?" என்றேன்.

"சவுதி அரேபியா" என்றாள்.

"என்ன வேலை செய்தீர்கள்?" என்றேன்.

"வீட்டுப் பணிப் பெண்ணாக வேலை செய்தேன்" என்றாள்.

"சரி புஸ்பவதி! உங்கள் புருஷன் தற்போது குடும்பம் நடத்தும் பொம்பிளையின் பெயர் என்ன?" என்று கேட்டேன்.

"கலா என்பவளாம். அவள் வவுனியாவைச் சேர்ந்தவள்" என்று கூறினாள்.

"உங்கள் இரண்டு குழந்தைகளுக்கும் வயது என்ன?" என்று கேட்டேன்.

"மூத்த பிள்ளைக்கு வயது 12 பொடியன். மற்றப் பிள்ளைக்கு 10 வயது. பொம்பிளைப்பிள்ளை."

"பிள்ளைகள் தகப்பனோடுதான் இருக்கிறார்களா?" என்றேன்.

"ஓம்! தகப்பனோடுதான். ஆனால் என் பிள்ளைகள் அலைக்கழிந்து விட்டனர்." என்று மீண்டும் அழுதாள்.

"புஸ்பவதி! முகாமில் உங்கள் உறவினர்கள் யாரும் இருக்கிறார்களா?" என்று கேட்டேன்.

"இல்லை! இருந்திருந்தால் இவரின் நடத்தை பற்றி எனக்கு அறிவித்திருப்பார்களே!" என்று அங்கலாய்த்தாள்.

"சரி புஸ்பவதி. இன்று நீங்கள் எமது அலுவலகத்தில் மேல்மாடியிலுள்ள பெண்கள் தங்கும் விடுதியில் தங்கியிருங்கள். நாளைக்கு உங்கள் கணவர் தர்மலிங்கத்தை அழைத்துக் கதைக்கலாம்." என்று கூறி அன்றைய அமர்வை முடித்துக் கொண்டேன். தர்மலிங்கத்திற்கு எனது தொடர்பாளர் மூலம் தகவல் அனுப்பினேன். இரண்டு நாட்களாக வரவில்லை. பின்பு முகாம் தலைவர் ஊடாகத் தர்மலிங்கத்தை எனது அலுவலகம் அழைத்திருந்தேன். தலைவர் மயில்வாகனம் தர்மலிங்கத்தை அழைத்து வந்திருந்தார். இருவரையும் எனது ஆலோசனை மையத்திற்குள் அழைத்து அமர்த்தினேன்.

"தர்மலிங்கம்! உங்கள் குடும்ப கஸ்டம் காரணமாக உங்கள் மனைவி வெளிநாடு சென்று உழைத்து உங்களுக்கு அனுப்பியுள்ளார். இரண்டு வருடமாக வேலைக்காரிபோல வேலை செய்து உழைத்து அனுப்பிய உங்கள் மனைவி புஸ்பவதியை விட்டு கலா என்ற பொம்பிளையுடன் நீங்கள் குடும்பம் நடத்துகிறீர்களாமே?" என்று கேட்டேன்.

தர்மலிங்கம் தலைகுனிந்தபடியே இருந்தார். பேசவில்லை.

"அழகான மனைவி. வெளிநாட்டு வருமானம், இரண்டு குழந்தைகள் கஸ்டமில்லாத வாழ்க்கை. இத்தனை வசதியிருந்தும் உங்கள் மனைவியை வெறுத்து இன்னுமொரு பொம்பிளையுடன் வாழ வேண்டும் என்ற நிலை ஏன் ஏற்பட வேண்டும்?"

"நான் மனவியை வெறுக்கவில்லை." என்று தர்மலிங்கம் தொடர்ந்தார். "எனக்கு வயது 40. மனைவிக்கு வயது 36. புஸ்பவதி வெளிநாடு சென்றதிலிருந்து பிள்ளைகளுக்கு சமைத்துக் கொடுப்பது, அவர்களைப் பாடசாலை அனுப்புவதுமாக ஒரு பொம்பிளை மாதிரியே நான் இருந்தேன். இதே முகாமிலிருக்கும் கலாவுக்கு ஒரு குழந்தை இருக்கிறது. இவளுக்கு புருஷன் இல்லை. வயது 30. அவள் என் பிள்ளைகளுக்கும் எனக்கும் சமைத்துத் தந்தாள். பிள்ளைகளுக்கு வருத்தம் வியாதி வந்தால் கலாதான் கவனித்துக் கொள்வாள். அவளும் மிகக் கஸ்டப்பட்டவள். அவளுக்கு நான் பண உதவியும் செய்தேன்." என்றார் தர்மலிங்கம்.

### எஸ்.பி.லெம்பட் வங்காலை

"சரி, தர்மலிங்கம்! உங்கள் மனைவி வெளிநாடு சென்றிருப்பதால் சில உதவிகளைக் க்லா செய்தாள். நீங்களும் கலாவின் கஸ்டத்தின் நிமித்தம் பண உதவிகள் செய்திருக்கிறீர்கள் இது எல்லாம் நியாயமானதுதான். ஆனால் கலாவை உங்கள் வீட்டில் வைத்துக் குடும்பம் நடத்துவது எவ்வளவு நியாயமானது?"

"ஒருநாள் எனது மகளுக்குக் கடுமையான காய்ச்சல். அன்று இரவு கலா என் வீட்டில் தங்கினாள். இரவு முழுவதும் மகளுக்குக் காய்ச்சல் இருந்தது. அன்று மழை அதிகமாக பெய்தது. மழைக் குளிரில் கலா என்னைக் கட்டிப் பிடித்தாள். எனது உடல் முழுவதும் தடவினாள். என்னைப் பல தடவை கொஞ்சினாள். மனைவியை வெளிநாடு அனுப்பி ஒரு வருடமாக அடங்கிப்போயிருந்த உணர்ச்சி மேலீட்டால் நானும் கலாவின் நடவடிக்கைகளுக்கு விட்டு கொடுத்தேன் முத்தம் கொடுத்தேன். கணவனை இழந்து தவிக்கும் கலாவும் மனைவியை வெளிநாட்டிற்கு அனுப்பிவிட்டுத் தவிக்கும் நானும் அன்றிரவு கண்ட சுகத்தை என்னால் மறக்க முடியாது. கலாவைப் பிரிய முடியவில்லை. இதன் பின் கலா என்னுடன்தான் வாழ்கிறாள்.

தொடர்ந்து வரும்...

# சிறகு விரித்துப் பறப்போம்

ஒரு பறவை சிறகை விரிக்கிறது என்றால் அது உயரப் போகிறது என்று பொருள். இன்னொரு பறவை சிறகை விரிக்கிறது என்றால் தன் இளம் குஞ்சுகளை அன்பாக அழைக்கிறது என்று பொருள். புறா சிறகை விரித்தால் புறப்பட்டு மேலே போகிறது. கோழி சிறகை விரித்தால் குஞ்சுகள் ஓடிவந்து ஒண்டிக் கொள்கின்றன.

இன்றைக்குச் சிறகிருந்தும் அதை விரிக்கத் தெரியாமல் சிரமப்பட்டுக் கொண்டிருப்பவன் மனிதன் மட்டுமே. எனவே வாழ்வில் உயர விரும்புபவர்கள், உலகை அன்பால் நெருங்க விரும்புகிறவர்கள் முதலில் தெரிந்து கொள்ளவேண்டியது சிறகை விரிப்பது எப்படி என்பதுதான்.

அதற்கு உபயோகப்படும் விதமாகச் சில செய்திகளைச் சொல்லுவதுதான் இந்தக் கட்டுரையின் நோக்கம். உடனே எழுந்து நின்றுகொண்டு இடப்புறமும், வலப்புறமும் திரும்பி நமக்குச் சிறகு முளைத்திருக்கிறதா என்று பார்க்க ஆரம்பித்துவிடாதீர்கள். இதனைப் படியுங்கள். மெல்ல மெல்லச் சிறகுகள் உருவாகத் தொடங்கும். அதன் பிறகு பறக்கலாம்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். நோயுள்ள வாழ்க்கையென்றால், குறைவில்லாமல் செல்வம் இருந்தாலும் அதனால் பலனில்லை. நம் உடம்பு நல்லபடியாக இருக்க வேண்டும். இதுதான் எல்லோருடைய விருப்பமும். சரி... இதற்கு என்ன வழி? மூன்று வழிகளைச் சொல்லுகிறவர்கள் விவரம் தெரிந்தவர்கள்.

ஒன்று- நல்ல உணவு. இரண்டு- தேவையான உடற் பயிற்சி. மூன்று- கவலை இல்லாத மனம். இந்த மூன்றும் சரியாக இருந்தால் எந்த நோயும் நம்மை நெருங்காது என்று வல்லுனர்கள் சொல்கிறார்கள். இதுவரைக்கும் சரி.

இப்போது நான்காவதாக ஒன்றையும் அந்தப் பட்டியலில் சேர்க்கிறார்கள். அதுதான் கொஞ்சம் வேடிக்கையாக இருக்கிறது. அது என்ன தெரியுமா? மனித நேயம்! "மற்றவர்களை நேசியுங்கள். அடிக்கடி மற்றவர்களுக்கு உதவி செய்யுங்கள். அது உங்கள் உடல் நலத்துக்கு நல்லது" என்று சொல்கிறார்கள்.

அடுத்தவர்களை நேசிப்பதற்கும் நம்ம உடம்பு நல்லவிதமாக இருப்பதற்கும் என்ன சம்பந்தம்? கலிபோர்னியா பல்கலைக் கழகத்தில் இருக்கிற மருத்துவத் துறைப் பேராசிரியர் டாக்டர் கென்னத் பிரிடியர் இதற்கு விளக்கமும் கொடுக்கிறார். அவர் என்ன சொல்லுகிறார் தெரியுமா? பொதுவாக நாம் மற்றவர்களுக்கு உதவி செய்யும் போது... அல்லது மற்றவர்களை நாம் நேசிக்கிற போது நாம் மகிழ்ச்சியோடு இருக்கிறோம்.

அந்தச் சமயத்தில் நமது உடம்பில் இருக்கக்கூடிய நோயை எதிர்க்கும் செல்கள் (Cells of immune system) முழுச் சக்தியோடு இயங்குகிறது. அப்படி அவையெல்லாம் இயங்கும் போது நமது உடம்பில் நோய் ஏதும் வருவதில்லை.

ஆனால் அதே சமயம்... நாம் கவலையோடு இருக்கும் போதோ, தனிமையாக வாழும் போதோ...நோய்த் தடுப்பு செல்கள் உடம்பில் குறைவாகவே இருக்கின்றன என்ற உண்மை இப்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக இப்படிப் பட்டவர்களுக்குப் பிணிகள் ஏற்பட வாய்ப்பு அதிகம் என்பது அந்த டாக்டரின் கருத்து. இது தொடர்பாக சான்பிரான்சிஸ்கோவில்



கூட ஓர் ஆராய்ச்சி செய்து பார்த்திருக்கிறார்கள். எப்படித் தெரியுமா?

குடும்பத்தை விட்டுப் பிரிந்து தனியே வாழ்ந்து கொண்டிருக்கிற முதியவர்களைத் தேடிக் கண்டு பிடித்தார்கள். அவர்களுக்கு உடம்பில் என்னென்ன நோய்கள் இருக்கின்றன என்பதை விவரமாகக் குறித்து வைத்துக் கொண்டார்கள். அந்த முதியவர்களையெல்லாம் ஒன்றாகத் திரட்டி ஒரே இடத்தில் தங்க வைத் தார்கள்.அவர்களை மூன்று குழுவாகப் பிரித்தார்கள். ஒவ்வொரு பிரிவுக்கும் மற்றவர்களுக்கு உதவி செய்கிற மாதிரியான பொறுப்புகளைக் கொடுத்தார்கள்.

உதாரணமாக... ஒரு குழுவினர் சிறைச்சாலைக்குப் போய் அங்குள்ளவர்களுக்கு அன்பான அறிவுரைகளைச் சொல்ல வேண்டும். இன்னொரு குழுவினருக்கு... சின்னப் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கிற வேலை. இது மாதிரியான பொறுப்புகளைக் கொடுத்தார்கள். அதற்குப் பிறகு பார்த்தால் அந்தத் தாத்தாக்கள் எல்லாம் ரொம்ப சுறுசுறுப்பாகச் செயற்பட ஆரம்பித்துவிட்டார்கள். ஆறு மாதம் கழித்து அவர்கள் எல்லோரும் உடல் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார்கள். அந்தப் பரிசோதனை முடிவில் அவர்கள் தெரிந்து கொண்ட உண்மை.... அவர்களில் பாதிப் பேருக்கு நோயின் தன்மை வெகுவாகக் குறைந்திருந்தது!

அடுத்தவர்களுக்கு உதவுவது என்பது ஒரு வகையான மனித நேயம். அதை நம்ம ஊரில் பெரியவர்கள் எல்லாம், 'அடுத்தவர்களுக்கு உதவுவது புண்ணியம்' என்று சொல்லி வருகிறார்களே.... அதை இப்போது அறிவியலும் ஒப்புக்கொள்கிறது.

எனவே நண்பர்களே... அடுத்தவர்களுக்கு உதவுவோம். மனித நேயத்தையும் ஒரு மருந்தாகப் பயன்படுத்துவோம். இன்றைக்கு நாம் எந்த அளவுக்கு அடுத்தவர்கள் பேரில் அக்கறை செலுத்துகிறோம் என்பதை எண்ணும் போது சிரிப்புத்தான் வருகிறது.

ஓர் உதாரணம் சொல்கிறேன் கேளுங்கள்.

ஒரு மாநகரப் பேரூந்து ஏராளமான மக்களை அமர்த்திக் கொண்டு மெல்ல நகர்கிறது. ஓர் ஆசாமி உட்கார இடமில்லாமல் ஒரு பெரிய மூட்டை மீது அமர்ந்து பயணம் செய்து கொண்டிருக்கிறார். நெருக்கடியான சூழ்நிலை. நின்று கொண்டு பயணம் செய்கிறவர்களுக்கு அது இடைஞ்சலாக இருக்கிறது. கண்டக்டர் கத்திக் கத்திப் பார்த்தார். அந்த ஆசாமி அசையவே இல்லை.

அவர் பாட்டுக்கு அந்தப் பெரிய மூட்டை மீது சாவகாசமாக உட்கார்ந்திருந்தார். ஓர் இடத்திலே பேருந்து நின்றது. கண்டக்டருக்குக் கோபம் எல்லை மீறியது. அவரை எழச் சொல்லி அந்த மூட்டையை உருட்டி வெளியே தள்ளிவிட்டார். அப்போதும் அந்த ஆசாமி அசரவேயில்லை. சாவகாசமாக நின்று கொண்டிருந்தார்.

பக்கத்திலிருப்பவர் கேட்டார். "என்ன சார்.... உங்களுக்குக் கோபமே வரவில்லையா?" என்று. ஆசாமி சொன்னார். "நான் எதுக்குக் கோபப்படணும்? அந்த மூட்டை என்னுடையதில்லையே...!"

## பத்தாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
14.09.1959

மறைவு
10.12.1992

திதி: பிரதமை
21.11.2002

அமரர் திருமதி
சாந்தநாயகி பத்மநாதன்



ஆண்டுகள் பத்து ஆனதம்மா
அழியாத் துயரம் தொடருதம்மா
மீண்டு வரவே முனைகின்றோம்
மீள மீள மின்னலைப் போல்
உந்தன் முகம்- எம்
உள்ளங்களில்
நின் ஆன்ம ஈடேற்றத்துக்காய்
கண்ணீருடன் பிரார்த்திக்கும்.

பரமநாதன் (கணவர்)
ப.பத்மஸ்ரீ,
ப.நந்தஸ்ரீ (லண்டன்)
ப.புவனஸ்ரீ

நிரந்தர முகவரி:-
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

தற்போதைய முகவரி:
50, கண்டி வீதி, சாவகச்சேரி.

# காற்றுவாக்கில்...

## இந்துக்களுக்கு அநீதி?

இந்துக்கள் கந்தசஷ்டி விரதம் இருந்து, முருக வழிபாடு செய்து, சென்ற 11ஆம் தேதி காலை பாறணைச் சாப்பாட்டுடன் முடித்துக் கொண்டனர். கோயில்களில் நிகழ்ச்சிகள் மிகச் சிறப்பாக இலங்கை முழுவதும் நடத்தப்பட்டன. இது ஒரு முக்கியமான உற்சவம். சமாதானச் சூழ்நிலை நிரந்தரமாக உருவாகும் என்ற நம்பிக்கையில் கெடுபிடிகள் அற்ற ஓர் அமைதி காணப்பட்டதனால், மக்கள் சுந்திரமாகத் தமது சமயக் கடமைகளை நிறைவேற்றினர். இந்த விடயத்தில் இலங்கை வானொலி தன் கடமையைச் சரிவரச் செய்யத் தவறிவிட்டது. ஆண்டுதோறும் இவ்வுற்சவ காலத்தில் மாலை 6.15க்கு அல்லது 6.30க்கு சூலமங்கலம் சகோதரிகள் பாடி வைத்த கந்தசஷ்டிக் கவசத்தை கோயில்களுக்குச் செல்ல முடியாத அன்பர்களுக்கு வசதியாக, தமிழ்ச் சேவையினர் ஒலிபரப்பி வந்தனர். ஆனால், புதிய நிர்வாகத்தின் கீழ், அவ் ஒலிபரப்பை ஒருதலைப்பட்சமாக நிறுத்திவிட்டனர். இது இந்து மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியாகுமென்று விடயமறிந்தவர்கள் விசனம் தெரிவித்தனர். 'காற்றாடி' இது பற்றி விசாரித்துப் பார்த்ததில் தமிழ்த் தேசிய சேவையில் ஏற்பட்டிருக்கும் குளறுபடி தான் ஓரளவு காரணம் என்று

### காற்றாடி

தெரியவந்துள்ளது. இச் சேவையை நடத்துவதற்குப் பணிப்பாளர் ஒருவர் இல்லை; மேலதிகப் பணிப்பாளர் இல்லை; ஒரு கட்டுப்பாட்டாளர் கூட இல்லாமற் போய்விட்டது. இது தமிழ் மக்களின் துரதிர்ஷ்டமே. இச் சேவையின் பணிகளை 'மேலெழுந்தவாரியாக' ஒருவர் கவனிக்கிறாராம். "காலையில் கவசம் ஒலிபரப்பப்பட்டதுதானே! அது போதாதா? மாலையில் வேறு நிகழ்ச்சிகளுக்கு இடம் கொடுத்தாச்சு" என்று கருத்துப்பட அவர் பதில் சொன்னதாக ஒரு செய்தி. இதன்படி பார்த்தால், தமிழ்த் தேசிய சேவையின் கதி அதோ கதிதான் என்றல்லவா எண்ணத் தோன்றுகிறது.


இந்துக்களின் மாமன்றத்தார் எடுத்ததற்கெல்லாம் கண்டன அறிக்கை விடுக்கிறார்கள். இது பற்றி பேச்சில்லை; மூச்சில்லை. புரியாத புதிர்தான்.

## வேண்டியது ஆலோசகர்களே!

இதே வானொலியில் தமிழ்ச்சேவையை நன்றாக நடத்துவதற்கு இப்பொழுது ஆலோசகர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறதாம். இரண்டொருவரை மேலிடம், நேர்முகப் பரீட்சைக்கும் அழைத்துக் கலந்துரையாடியுள்ளதாம். அப்படி வந்தவர்கள் இன்னாரின் இன்னாருக்குத் தம்மைத் தெரியுமென்று கூறினார்களாம். அதுதான் ஆலோசகராவதற்குரிய 'தகுதி'யோ என்னவோ! அது ஒரு புறம் இருக்க, தமிழ்ச் சேவைக்கு இன்று முக்கியமாகத் தேவைப்படுபவர்கள் (Advisors) ஆலோசகர்கள் அல்ல, செயற்படக் கூடியவர்களே (Performers) என்று யாரோ கூறிய கருத்து காற்றுவாக்கில் காதில் விழுந்தது. எதைத்தான் சொன்னாலும் 'அவர்கள்' தமது "அந்தரங்க அஜெண்டா" (நிகழ்ச்சி நிரல்)வின்படி துரிதமாக முன்னேறி வருகிறார்கள் என்பதுதான் உண்மை போலும்! அந்த 'அஜெண்டா' என்ன என்பது 'காற்றுவாக்கில்' என்ற பத்தியைத் தொடர்ந்து படித்தவர்களுக்குத் தெரியாமல் இருக்க முடியாது.

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 30 03 1975



விண்ணில் 23 11 1996

கனகரெட்ணம் துஷ்யந்தன்

கோடி தடவைகள் எமக்கு நீர் வேண்டும்
கோடி தடவைகள் நாம் அழுதோம்
நாம் எல்லோரும் உம்மை இழந்துவிட்டோம்
பரலோகம் தாய்வீடு அதை தேடி- நீர்
ஓடிவிட்டீர்.
உயிர் வாழும் நாட்களெல்லாம் - உமது நினைவு மாறாது
வாடும் அப்பா, அம்மா, தம்பிமார், தங்கை
தகவல்:- திருமதி ஆ.கனகரெட்ணம்,
திருகோணமலை.

## மௌஸ் மாயம்



ஹாலிவட்டில் புதிய முயற்சிகளுக்கு எப்போதுமே பஞ்சமில்லை. அப்படி உருவான 3 டீ அனிமேஷன் படம்தான் 'ஸ்டூவர்ட் லிட்டில்' அந்தப் படம் உலகமெங்கும் ஓடி 300 மில்லியன் டாலர்களைச் சம்பாதித்தது. அந்த மாதிரிப் படங்களைத் தயாரிக்கவென்றே ஹாலிவட்டில் பேர் போன 'வால்ட் டிஸ்னி' நிறுவனம் இருக்க, அந்த டிரெண்டில் 'கொலம்பியா பிக்சர்ஸ்' தயாரித்த வெற்றிப் படம் அது. ஸ்டூவர்ட் பாத்திரம் கம்ப்யூட்டர் கிரா.ஃபிக்ஸில் உருவான எலி.

ஆடிய காலும் பாடிய வாயும் போல, ஓடிய படமும் சும்மா இருக்க விடுமா தயாரிப்பாளர்களை? இப்போது 'ஸ்டூவர்ட் லிட்டில்-2.'

'உயிரோட்டமுள்ள அந்த Mouse-இன் அசைவுகள் உருவாக்கப்பட்டது இன்னொரு (கம்ப்யூட்டர்) 'மவுஸ்'ஸின் அசைவுகளால் எனும்போது பிரமிக்க வைக்கிறது.

## ஹைமடிஸந்து

## சொர்க்கத்தில் திருமணம்!

திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன என்று கூறுவது வழக்கம். ஆனால், அதை நிகழ்த்திக் காட்டியிருக்கின்றனர் தாய்வானைச் சேர்ந்த இளம் காதலர்கள்.

தாய்வான் தலைநகர் தாய் பெய்க்குத் தெற்கே கீலங் நகரில் உள்ள ஓர் மருத்துவமனையின் பிணவறையில் இறந்த காதலர்களுக்குத் திருமணம் ஞாயிற்றுக்கிழமை நடத்தி வைக்கப்பட்டது.

பல் பிடுங்கியதால் ஏற்பட்ட உடல் கோளாறினால் அக்டோபர் 25 ல் இறந்தார் சென் பென்-ஜென் (26). இதனால் மனமுடைந்த அவரது காதலி சியாங் சியா-லிங் (21). சென்னின் இறுதிச் சடங்கு நடந்த நவ. 3 ம் திகதி தமது கல்லூரி விடுதியில் தீக்குளித்துத் தற்கொலை செய்து கொண்டார்.

காதலரையும் தம்மையும் ஒரே இடத்தில் புதைக்க வேண்டும் என்று கடிதம் எழுதி வைத்துவிட்டுத் தற்கொலை செய்து கொண்டார் சியா-லிங்.

அவரது விருப்பத்தைப் பூர்த்தி செய்யும் விதத்தில் சென்னின் சகோதரரும், சியாங்கின் சகோதரியும் காதலர்களின் படத்தை வைத்து கொண்டு தாலி கட்டினர். இத் திருமணத்தில் இரு குடும்பங்களையும் சேர்ந்த 30 பேர் கலந்து கொண்டனர்.

'என் மகன் மீது சியா-லிங் கொண்டிருந்த அளவு கடந்த காதலை நான் பாராட்டுகிறேன். ஆனால், அதை நிரூபிப்பதற்காக அவர் தற்கொலை செய்து கொண்டிருக்கத் தேவையில்லை' என்று சென்னின் தந்தை கூறுகிறார்.

தாய்வானில் உயிரோடு இருப்பவர் இறந்த தமது காதலர் அல்லது காதலியைத் திருமணம் செய்து கொள்வது எப்போதாவது நடப்பது வழக்கம். ஆனால், இவை தாய்வானில் சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்படுவதில்லை.

### வீரர்களை ஊக்கப்படுத்தப் போதை மாத்திரை;

## ஹிட்லரின் இரகசியத் திட்டம் அம்பலம்



இரண்டாவது உலகப் போரின் போது தனது போர் வீரர்களை ஊக்கப்படுத்துவதற்காகப் போதைப் பொருள் அடங்கிய மாத்திரைகளை சர்வாதிகாரி ஹிட்லர் தயாரித்த இரகசியம் தெரியவந்துள்ளது.

பேர்லின் நகரைச் சேர்ந்த வோல்ப் கெம்பர் என்ற குற்றவியல் நிபுணர் இத் தகவலைத் தெரிவித்துள்ளார். இந்த மாத்திரைகளுக்கு டி-எல் எக்ஸ் எனப் பெயரிடப்பட்டிருந்தது.

கைதிகளுக்கு இந்த மாத்திரைகள் முதலில் வழங்கப்பட்டுச் சோதித்துப் பார்க்கப்பட்டது. சாதாரணமாக 20 கிலோ எடையைத் தூக்கிச் செல்லும் கைதி இந்த மாத்திரைகளை உட்கொண்டவுடன் 90 கிலோ எடையுள்ள பொருள்களை ஓய்வின்றி எடுத்துச் சென்றது தெரியவந்தது.

எனவே இரண்டாவது உலகப் போரில் எப்படியாவது தனது வீரர்கள் வெற்றிபெற வேண்டும் என்பதற்காக இந்தப் போதை மாத்திரைகளை அவர்களுக்கு வழங்க ஹிட்லர் திட்டமிட்டிருந்தார். ஆனால் அதற்கு முன்பே அவரது படையினர் தோல்வியடைந்துவிட்டனர் என்று அந்த நிபுணர் கூறியிருக்கிறார்.

## செல்போன் பிச்சைக்காரர்கள்

சவூதி அரேபியாவில், அதிகாரிகள் தங்களைப் பிடிக்க வருவதை முன்கூட்டியே அறிந்து கொண்டு மாயமாகிவிடுகின்றனர் பிச்சைக்காரர்கள்.

இது எப்படிச் சாத்தியம் என்கிறீர்களா? நவீன தொழில் நுட்பம்தான்! அநேகமாக பிச்சைக்காரர்களில் பெரும்பாலானவர்களின் கையில் செல்போன் உள்ளது.

சவூதியில் பிச்சைக்காரர்கள் அதிகமாக உள்ளனர். அதுவும் நோன்பு இருக்கும் ரமழான் மாதத்தில் இவர்களின் எண்ணிக்கை பாதிக்கு மேல் அதிகரித்துவிடுகிறது. இவர்களில் பெரும்பாலானவர்கள் வெளி நாட்டவர்கள்.

பிச்சைக்காரர்களை ஒழிக்க சவூதி அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அவ்வப் போது திடீர்ச் சோதனை நடத்தி அவர்களைப் பிடிப்பதும் அதில் ஒன்று.


ஏதாவது ஒரு பகுதியில் அதிரடிச் சோதனை நடக்கும்போது அங்குள்ள பிச்சைக்காரர்கள் தங்களிடம் உள்ள செல்போன் மூலம் மற்றைய பகுதியில் உள்ள பிச்சைக்காரர்களுக்குத் தகவல் தெரிவித்துவிடுகின்றனர். இதையடுத்துப் பலரும் மாயமாக மறைந்துவிடுகின்றனர்.

தனி நபர்களுக்குப் (பிச்சைக்காரர்களுக்கு) பணம் தராதீர்கள். வசதியானவர்கள் தர்மம் செய்ய விரும்பினால் அறக்கட்டளைகளுக்கு உதவி செய்யுங்கள், அது தேவையானவர்களைச் சென்றடையும் என்று சவூதி அரசு கூறிவருகிறது.

## ஈராக் மீது போர் மூண்டால் லிபியாவில் தஞ்சம் புக 17500 கோடி;

## சதாம் இரகசிய பேரம்? 'டைம்ஸ்' தகவல்

முழு அளவில் போர் மூண்டால் அதிபர் சதாம் ஹுசைன் குடும்பத்தினர், மூத்த தலைவர்கள் மற்றும் அதிகாரிகள் லிபியாவில் அரசியல் தஞ்சம் புகத் திட்டமிட்டுள்ளனர். இதற்காக லிபியாவுக்கு ரூ. 17, 500 கோடி அளிக்கவிருக்கிறார் ஈராக் அதிபர் சதாம் ஹுசைன் என்று டைம்ஸ் நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது.



ஈராக்கில் இருந்து லிபியா அல்லது சிரியாவுக்குத் தப்பிக்கும் வழிகள் குறித்தும் இரகசியப் பேச்சு சமீபத்தில் நடத்தப்பட்டுள்ளதாக அந்தப் பத்திரிகைச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசியல் தஞ்சம் புகுவோரின் பட்டியலில் சதாம், அவரது மகன் உதய் இருவரின் பெயர்களும் இடம்பெறவில்லை. அரசியல் தஞ்சம் புக இவர்கள் இருவரையும் லிபிய அதிபர் கடாஃபி அனுமதித்தால், போர்க்குற்றவாளிகளான அவர்களை ஒப்படைக்குமாறு சர்வதேச நாடுகள் கடாஃபியை நெருக்கும்.

லிபியாவில் தஞ்சம் புகுவோரின் பட்டியலில் ஈராக் துணைப் பிரதமர் தரிக் அஸீஸ், வெளியுறவு அமைச்சர் நாஜி சாப்ரி, புரட்சிகர கமாண்டர் கவுன்சில் துணைத் தலைவர் இஸ்ஸத் இப்ராஹிம் அல்-தூரி மற்றும் சில உயர் அதிகாரிகளின் பெயர்களும் இடம்பெற்றுள்ளதாக லிபிய அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

செப்டெம்பர் 8 ல் ஈராக் இராணுவ ஜெனரல் அலி ஹாசன் அல்-மஜீத் லிபியத் தலைநகர் திரிபோலிக்குச் சென்ற போது இரகசிய பேரம் பேசப்பட்டதாகக் கூறப்படுகிறது. சதாமுக்கு மிகவும் நெருக்கமான மஜீத் அவரது ஒன்றுவிட்ட சகோதரர்.

ஈராக்கில் இருந்து தரை வழியாகத் தப்பிச் செல்வதற்கான பாதை குறித்து டமாஸ்கஸில் அக்டோபரில் விவாதிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

## 19 பெண் குழந்தைகளைப் பெற்றவர் மீண்டும் கர்ப்பம்

அடுத்தது ஆண் குழந்தை பிறக்கும் என்ற நம்பிக்கையில் நேபாளத்தில் ஒரு ஏழைப் பெண் தொடர்ந்து 19 பெண் குழந்தைகளைப் பெற்றார். 48 வயதான சுபத்ரா டாங்கி, இப்போதும் தன் முயற்சியைக் கைவிடவில்லை. மீண்டும் அவர் கர்ப்பமாக இருக்கிறார். "ஆண் குழந்தை வேண்டும் என்பதற்காகத்தான் இவ்வளவு கஷ்டங்களையும் நான் தாங்கிக் கொள்கிறேன்" என்று அவர் சிரித்துக் கொண்டே கூறுகிறார்.

அவருக்குப் பிறந்த 19 பெண்களில் 2 பேர் இறந்துவிட்டனர். 7 பெண்களுக்குத் திருமணமாகிவிட்டது. 10 பெண்கள் அவருடன் வசித்து வருகின்றனர். சுபத்ராவுக்கு 16 வயதில் திருமணமானது. கணவர் பெயர் ஷெ பகதூர் டாங்கி. திருமணம் ஆனதில் இருந்து ஒன்றரை ஆண்டுக்கு ஒரு முறை குழந்தை பெற்றுக் கொண்டே இருக்கிறார் சுபத்ரா.

## லண்டனுக்குப் போக நிர்வாண பூஜை?



ஸிம்பாப்வே நாட்டில் இப்போது வறுமையும் வேலையில்லாத் திண்டாட்டமும், பஞ்சமும் பட்டினியும் தலை விரித்தாடுகிறது. இதிலிருந்து மீள ஒரே வழி பிரிட்டனின் தலைநகரான லண்டனுக்குச் செல்வதுதான் என்று ஸிம்பாப்வேயில் விவரம் தெரிந்தவர்கள் கூறி வருகின்றனர்.

அதே சமயம், லண்டனுக்குச் செல்ல விசா கிடைப்பது குதிரைக் கொம்பாக இருக்கிறது. நிர்வாக நடைமுறைகளைக் கைவிட்டு, தமது பாரம்பரிய வழிமுறையைக் கையாண்டால் என்ன என்று நினைத்து ஒரு பெண்மணி மந்திரவாதியை அணுகினார்.

"விசாதானே, எளிதில் வாங்கித் தருகிறேன்-நான் கேட்கிற தட்சணையைக் கொடுப்பதுடன் நான் சொல்லுகிறபடி நீ நடக்க வேண்டும்" என்று உத்தரவிட்டார் மந்திரவாதி. அப் பெண்மணியும் சம்மதித்தார்.

ஏதோ மந்திரத்தை ஜெபித்தபடி உட்கார்ந்திருந்த மந்திரவாதி அப் பெண்ணைப் பார்த்து, "ஆடைகளை யெல்லாம் அவிழ்த்துவிட்டு நிர்வாணமாக என்னைச் சுற்றிவர உன்னைப் பிடித்திருக்கும் கெட்ட ஆவிகளை யெல்லாம் போக்குகிறேன்" என்று கூறினார். அவரும் அதை நம்பி அவர் கூறியபடியே செய்தார். செம்பில் வைத்திருந்த தண்ணீரால் அவ்வப் போது அப் பெண் மீது தெளித்த மந்திரவாதி ஸிம்பாப்வே டாலரில் 23 ஆயிரத்தைச் சடங்குக்கான கட்டணமாக வாங்கிக் கொண்டு அனுப்பினார்.

அவர் சொன்னபடி விசா கிடைக்கவில்லை. பணத்தைப் பறி கொடுத்தது கூட அப் பெண்ணுக்குப் பெரிய இழப்பாகத் தெரியவில்லை; நிர்வாணமாக நடக்க வைத்தானே என்ற கோபமே மிஞ்சியது. உடனே பொலிஸிடம் புகார் செய்தார். மந்திரவாதி இப்போது சிறையில் கம்பி எண்ணுகிறார்.

# மன்னாதி மன்னன்

131

நாராயண பண்டிதரின் மகனான சௌரிராசன் மகாவிஷ்ணுவைப் போல் வேடம் புனைந்து இளவரசி சித்திரரேகையை ஏமாற்றிவிட்டான். அவனுடைய பொய் வேடத்தைக் கண்டு ஏமாந்த இளவரசி தனது தகப்பனான பிரசன்ன மன்னனிடம், தன்னை கருடவாகத்தின் மீது ஏறிவந்த பரந்தாமன் திருமணம் முடிப்பதற்கு ஒப்புக் கொண்டுவிட்டார், ஆகவே திருமணத்திற்கான ஆயத்தங்களைச் செய்யுமறு கேட்டுக் கொண்டாள்.

மகள் திருமணத்திற்குச் சம்மதித்ததையிட்டு மகிழ்ச்சியடைந்த மன்னன் பிரசன்னன் இருவருக்கும் மிகச் சிறப்பாகத் திருமணம் முடித்து வைத்தார்.

தன்னுடைய மருமகன் சாட்சாத் பரந்தாமனே என்று எண்ணி மகிழ்ந்திருந்த மன்னன், தான் இதுவரை மாமன்னருக்கு செலுத்திவந்த கப்பம் இனிமேல் செலுத்த வேண்டியதில்லை என்று எண்ணி இறுமாந்திருந்தான். வாக்குப்படி வருடாந்தக் கப்பம் பணம் வந்து சேராமையினால் வெகுண்டெழுந்த பேரரசன் பெரும் படையோடு மங்காபுரம் நோக்கி விரைந்து வந்தான்.

அந்தப் பேரரசனின் பெரும் படைக்குத் தாக்குப் பிடிக்க முடியாமல் மங்காபுரத்தின் படைகள் அழிந்து போனது தவிர எஞ்சிய வீரர்கள் பின்வாங்கி ஓடினர். இதனைக் கண்ட மன்னன் பிரசன்னன் தன் மகளிடம் ஓடிச் சென்று, "மகளே மாமன்னன் பெரும் படையுடன் வந்து நமது நாட்டை முற்றுகையிட்டுவிட்டான். இதனை உன் கணவனிடம் கூறி அவருடைய சக்கராயுதத்தை ஏவி அந்த மாமன்னனுக்கு நல்ல பாடம் புகட்ட வேண்டும்," என்று கூறினான்.

சித்திரரேகை தன் கணவனிடம் ஓடிச் சென்று, தன் தந்தைக்கு உதவி புரிந்து நாட்டைக் காப்பாற்றுமாறு கேட்டுக் கொண்டாள்.

சௌரிராசன் என்ன செய்வதென்று திகைத்தான். இளவரசி சித்திரரேகையை மணமுடிப்பதற்காகத் தான் போட்ட பொய் வேடம் இப்பொழுது ஆபத்தை விளைவித்து விட்டதை எண்ணிப் பெரும் சங்கடப்பட்டான். இத்தகைய இக்கட்டான நிலையிலிருந்து தன்னைக் காப்பாற்ற உஜ்ஜயினி மாமன்னர் விக்கிரமாதித்தன் ஒருவரால்தான் முடியும் என்பதனை உணர்ந்து தனது கருடவாகனத்திலேறி உஜ்ஜயினிப் பட்டணத்தை அடைந்தான்.

மன்னர் விக்கிரமாதித்தனைக் கண்டு அவருடைய காலில் வீழ்ந்து தன்னுடைய உண்மைக் கதை முழுவதையும் கூறி, தன்னை இந்தப் பேராபத்திலிருந்து காப்பாற்றுமாறு கோரினான். விக்கிரமாதித்த மன்னர் சௌரிராசனையும் அழைத்துக் கொண்டு வேதாளத்தின் மீதமர்ந்து மங்களபுரி நகரை அடைந்து, அந் நகரை முற்றுகையிட்டிருந்த மன்னரின் படைகளைத் தோற்கடித்து அம் மன்னரையும் கொன்றொழித்தார்.

பிரசன்ன மன்னனிடம் சௌரிராசனை அழைத்துச் சென்று, அவனைப் பற்றிய உண்மைகளைக் கூறி, அவனைத் தண்டிக்கலாகாது என்று அறிவுறுத்தி, அம் மன்னனுக்கும் ஏராளமான பொருள் பண்டங்களை அளித்துவிட்டுத் தன் நகருக்குச் சென்றார்.

இக் கதையை இருபத்தொன்பதாம் படிக்கட்டுக்குக் காவலாக இருந்த சம்பிரதாயவல்லிப் பதுமை கூறியதும், போஜ மன்னர் அரியணைப் படிகளிலிருந்து கீழிறங்கித் தன் அரண்மனை சென்று ஓய்வெடுத்தார்.

அடுத்த நாளான முப்பதாவது தினத்தன்று காலை தன் காலைக் கடன்களை முடித்துக் கொண்ட போஜமன்னர் அரியணை வைக்கப்பட்டுள்ள மண்டபத்தை அடைந்தார், ஒவ்வொரு படியையும் ஏறிக் கடந்து முப்பதாவது படியில் காலடி எடுத்து வைத்ததும் அப் படிக்கட்டுக்குக் காவலான ருக்மினிவல்லிப் பதுமை போஜ மன்னனை இடைமறித்து விக்கிரமாதித்த பூபதியின் சிறப்பம்சங்களை விளக்கும் மற்றுமொரு கதையைக் கூறியது.

## இராஜகுமாரன்

உஜ்ஜயினி மாகாளிப் பட்டணத்தை அடுத்திருந்த காட்டுக்குள்ளிருந்து பயங்கரமான உருக்கொண்ட பன்றி ஒன்று நாட்டுக்குள் புகுந்து கொண்டது. அங்கிருந்த வயல் வெளிகளுக்குள் காணப்பட்ட பயிர் பச்சைகள் எல்லாவற்றையும் அழித்துத் துவம்சம் செய்தது. மக்கள் பலரும் கம்பு தடிகளை எடுத்து அப்பன்றியை விரட்டி அடிக்க முயன்றனர். ஆனால் அக் கொடிய பன்றி மக்களைத் தாக்கியது. அதனுடைய கொடூரம் தாங்க முடியாமல், மக்கள் மன்னன் விக்கிரமாதித்தனிடம் சென்று முறையிட்டனர். இத் தகவலை அறிந்த மன்னனுக்குப் பேரதிர்ச்சியாக இருந்தது. "என்னுடைய மக்களுக்கு இப்படி ஒரு சோதனையா?" என்று கோபங் கொண்ட மன்னர் தனது குதிரையிலேறித் காட்டுக்குள் புகுந்து பன்றியைக் கண்டார். அதனைப் பிடித்துவிடலாம் என்ற எண்ணத்துடன் அதனைத் துரத்திக் கொண்டு போனார்.

அப் பன்றி காடு மலை வனாந்தரங்களையெல்லாம் தாண்டி கனவேகமாக ஓடியது. இறுதியில் ஒரு பெரும் குகைக்குள் ஓடி மறைந்தது. மன்னரும் விடாமல் அப் பன்றியின் பின் ஓடிச் சென்றார். அக் குகைக்குள்ளும் நெடுந்தூரம் சென்றார்.

## பாதாள உலக வரவேற்பு

ஒரு குறிப்பிட்ட அளவு தூரம் ஓடிச் சென்றதும் குகைக்குள் பேரதிசயம் ஒன்று விக்கிரமாதித்த மன்னருக்கு காத்திருந்தது. பெரிய மாடமாளிகைகளைக் கொண்ட ஒரு பெருநகரம் அங்கு காட்சியளித்தது. ஆச்சரியத்தால் உறைந்து நின்ற விக்கிரமாதித்த மன்னரை எதிர் கொண்டு வரவேற்க, அங்கு ஒரு கூட்டம் காத்திருந்தது. மேளதாள வாத்தியங்கள் முழங்க அந்த நகரை ஆட்சி புரியும் மன்னர் விக்கிரமாதித்த மன்னரை வரவேற்றார்.

ஊர்வலமாக விக்கிரமாதித்த மன்னரை அழைத்துச் சென்று அங்கிருந்த அரண்மனை அரியாசனத்தில் அமரச் செய்தனர். அந் நகர அரசன் விக்கிரமாதித்தனை வணங்கி, "பாதாள உலகத்து மன்னன் யான். தங்களுடைய பெருமைகளையெல்லாம் அறிந்து தங்களை இப் பாதாள உலகத்துக்கு வரவழைக்கவே எமது ஏவலன் ஒருவனைப் பன்றி வேடத்தில் அனுப்பி வைத்தேன். என்னை மன்னியுங்கள். ஆனால் என் தந்திரம் பலித்தது. தங்கள் பாதங்கள் எமது பூமியில் பதியும் பாக்கியம் பெற்றோம்," என்று கூறி விருந்துபசாரம் எல்லாம் வைத்தான்.

பாதாள தேச அரசனின் உபசாரங்களை ஏற்ற மன்னர் விக்கிரமாதித்தன் அங்கிருந்து விடைபெற்றுக் கொண்டு தனது நகரம் திரும்புகையில், பாதாள உலக மன்னன் ஏராளமான பொன்னும் மணியும் திரவியங்களையும் தனது ஏவலாளர்கள் மூலம் மன்னர் விக்கிரமாதித்தனுடன் அனுப்பிவைத்தான்.

உஜ்ஜயினி மாகாளிப் பட்டணத்தை வந்தடைந்த மன்னர் விக்கிரமாதித்தன், அப் பெரும் செல்வங்களை பன்றியின் அக்கிரமங்களால் தங்கள் நிலைகுலைந்த மக்களுக்கெல்லாம் பகிர்ந்தளித்தார்.

இக் கதையைக் கூறிய முப்பதாவது படிக் கட்டில் நின்றிருந்த ருக்மினிவல்லிப் பதுமை, போஜ மன்னரைப் பார்த்து "போஜ மன்னரே இத்தகைய பரோபகாரமும் வீரமும் கொண்ட மாமன்னர் விக்கிரமாதித்த பூபதியின் ஆற்றல்களில் ஒரு சிலவாவது உம்மிடம் இருக்குமானால் நீர் இந்த அரியணையில் ஏறி அமரலாம்," என்று கூறியதும் தலை குனிந்த நிலையில் போஜமன்னர் படிகளிலிருந்து கீழிறங்கித் தனது அரண்மனை சென்றடைந்தார்.

(மன்னன் வருவான்...)

# காதிலப் பூ கந்தசாமி

நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய்.
பொய்யைத் தவிர
வேறொன்றுமில்லை
-காதில பூ கந்தசாமி-

கௌரவ வாசகர் அவர்களே!, நான் இப்போது இந்த வரவு செலவுத் திட்டத்தில் கலந்து விவாதிக்க வந்துள்ள விடயங்கள் பற்றி நீங்கள் எந்தளவுக்கு அக்கறை கொண்டிருக்கிறீர்களோ தெரியாது. ஏனெனில் இது நாட்டுக்கான வரவு செலவுத் திட்டமல்ல. வீட்டுக்கான பட்ஜெட்!

என்ன, முழிக்கிறீங்க? பாராளுமன்றத்தில பட்ஜெட் விவாதங்கள் நடக்குதில்லையா? அதுதான் நானும் இந்த நேரத்தில எங்கட உள்வீட்டு பட்ஜெட்டைப் பற்றிக் கொஞ்சம் விவாதிக்கலாமெண்டு வெளிக்கிட்டிருக்கிறன். கேளுங்கோ!

ஆம், நாட்டு பட்ஜெட்டைப் பற்றி நாவறளப் பேசிற எங்கட அரசியல்வாதிகள் எங்கட வீட்டு பட்ஜெட்டைப் பற்றி எப்பவேனும் சிந்தித்திருக்கிறார்களா?

இங்கேயும் துண்டு விழும் தொகை உண்டு. இங்கேயும் கடன் உண்டு. இங்கேயும் கஜானா காலியாத்தான் இருக்கு. அதனால் எப்படி எப்படி எங்கட வீட்டுச் செலவுகளைக் குறைக்கலாம் என்று எனது வாசகர்களுக்கு நானாவது சில ஐடியாக்களைச் சொல்லி உதவுவது எனது கடமையில்லையா?

முதலில் எங்கள் உணவுக்குச் செலவாகும் தொகையைக் குறைப்பது பற்றிப் பார்ப்போம். இப்போது ரமழான் மாதம் நிகழ்கிறது. முஸ்லிம்கள் நோன்பு இருக்கிறார்கள். இதுபோல் இந்துக்களிடமும் விரதங்கள் உள்ளன. கௌரி விரதம், கந்தஷஷ்டி விரதம், வெள்ளிக்கிழமை விரதம், சனி விரதம், இன்னும் ஒவ்வொரு கோயில் கொடியேற்றம் முதல் திருவிழாக் காலங்களிலெல்லாம் விரதங்கள் இருக்கிறார்கள். நான் கேள்விப்பட்டேன், வெறும் பச்சைத் தண்ணீரும் ஒரேயொரு மிளகும் மட்டும் உட்கொண்டு ஆறு நாட்கள் ஆகாரமில்லாமல் இருக்கும் விரதமும் உண்டென. இப்படியான விரதங்களைப் பல்கிப் பெருக்கி, வருஷத்தில் கால்வாசி காலத்தையாவது கடத்திக் கொள்வது ஒரு நல்ல ஐடியா.

மீதிக் காலத்தில் கிழமையில் ஒவ்வொரு நாளுக்கும் ஒவ்வொரு காரணம் சொல்லி, வெள்ளிக்கிழமை கோயிலுக்கு, வியாழக் கிழமை சாய்பாபாவுக்கு, செவ்வாய்க்கிழமை சக்திக்கு, என்று வகுத்து மரக்கறித் தினங்களாப் பிரகடனப் படுத்திக் கொள்ளுங்கள். மச்சத்துக்கான செலவு மீதியாகும்.

மரக்கறிகூட இப்ப எக்கச்சக்கமா விலையேறிக் கொண்டு போகுது. அதுக்கு எனக்கு வேற வழி தெரியேல்ல. இந்த சைனாக்காரர் ஜப்பான்காரரெல்லாம், நாய் இறைச்சி, பாம்பு இறைச்சி. தவளை இறைச்சியெண்டு தின்னிற மாதிரி நாங்களும் ஏன் இந்த மார்க்கெட் மரக்கறியை விட்டிட்டு, ஒரு சேஞ்சுக்கு இந்தப் புல்லு, பூண்டு, மாவிலை, பிலாயிலை, குருவிச்சையிலை, வாழையிலையெண்டு கறி காய்ச்சித் தின்று பார்க்கக் கூடாது. ஏன் ஆடு மாடுகள் தின்கின்றனதானே? அப்படிப் பழக்கப் படுத்திவிட்டால் அவர்கள் மார்க்கெட்டில கடை விரித்துக்கொண்டு காத்திருக்க, நாங்கள் வீட்டிலேயே குழையாஞ்சு பசியாறிட்டுப் படுத்திருக்கலாம், செலவில்லாமல்.

என்னயிருந்தாலும் சோத்துக்கு வழி தேடித்தானே தீரவேணுமென்று நீங்கள் அங்கலாய்ப்பது தெரிகிறது. அதுக்கும் ஒரு ஐடியா இருக்கு. முடிஞ்சால் ட்ரைபண்ணிப் பாருங்கோ. இந்த 'பிலீவ் இட் ஓர் நொட்' ரீவி புறோகிறாமில, ஒருத்தன் உந்தப் போத்திலோடு, தகர டப்பா, பிளேடெல்லாம் தின்கிறதக் காட்டினாங்கள். நீங்களும் கொஞ்சம் ட்ரைபண்ணி இந்த சும்மா கிடக்கிற மண்ணை அள்ளித் தின்னப் பழகிட்டீங்களெண்டால் சோத்துப் புறப்ளம் தீர்ந்துது.

(கோவிக்காதேங்கோ, நாட்டு பட்ஜெட் மோசமகிக்கொண்டு போகேக்க வீட்டு பட்ஜெட்டைச் சாமாளிக்க இப்பிடித்தான் ஏதும் புது வழிகள யோசிக்க வேண்டிக் கிடக்கு.)

சமையலுக்கு கேஸ் வேண்டாம், விறகு. அதுவும் இல்லாட்டில் பச்சையாச் சாப்பிட்டுப் பழகுங்கள், விற்றமின்களாவது உடம்பில் சேரும். எதையும் வேக வைக்க வேணுமென்றால், பேசாமல் எங்கள் பஸ்களில் பயணம் செய்யும்போது அதையும் ஒரு பார்சல் கட்டி கூடவே எடுத்துப் போங்கள். இறங்கும்போது வெந்து வரும்.

தண்ணீரைக்கூட வீணாக்காதீர்கள். நீங்கள் கை கழுவும்போது ஒரு வாளியை உங்கள் தண்ணீர்ப் பைப்புக்குக் கீழே வைத்துவிட்டு, வாளிக்குள் சேர்ந்திருக்கும் தண்ணீரின் அளவை டம்ளர் கணக்கில் அளந்து பாருங்கள். ஒரு டம்ளரில் கழுவக் கூடிய தண்ணீருக்கு நீங்கள் ஒன்பது டம்ளர் வீணாக்கியிருப்பதை உணர்வீர்கள். கைக்கே இந்தக் கணக்கென்றால் முகம் கழுவும்போது எவ்வளவு வேஸ்ட். அதனால் எப்போதும் பாத்திரத்தில் அளவான தண்ணீரை எடுத்துக் கொண்டு அதைச் சிக்கனமாய் உபயோகியுங்கள். கை கழுவிய தண்ணீரை, பின்னர் கோப்பை கழுவ வைத்துக்கொள்ளலாம். அதையும் சேமித்து வீடு கழுவுவது உங்கள் இஷ்டம்!

எங்கள் பெண்குலத்துக்கு ஒரு அட்வைஸ்! நீங்கள் கட்டும் ஒவ்வொரு பட்டுச் சேலைக்காகவும் பல்லாயிரம் பட்டுப்பூச்சிகள் மோட்சம் போகின்றன. அதனால் பட்டு உடுத்திப் பாவத்தைத் தேடிக்கொள்ளாமல், பட்டைத் தவிர்த்து லாபத்தைத் தேடிக்கொள்வது உசிதமல்லவா?

ஆண்களே, சிகரட்டிலிருந்து பீடிக்கு மாறுங்கள். முடிந்தால் பழைய தும்புத்தடியை உருவி கடுதாசியில் சுத்தி தம் இழுங்கள்! ஜடை வளர்ப்பது, தாடி வளர்ப்பது சலூன் காசை மீதமாக்க உசிதமான வழி. ட்ரௌஸர் கிழிந்தால் ஷோட்ஸாக்கி, அதுவும் கிழிந்தால் கோவணமாக்கிக்கொள்ளுங்கள். சப்பாத்தை பேக்கில் சுத்திக்கொண்டு செருப்போடு வேலைக்குப் போய் அலுவலகப் படிக்கட்டில் மாற்றிக்கொள்ளுங்கள். வரும்போது செருப்புக்கு மாற மறந்திட வேண்டாம்.

வீட்டில் மின்விசிறி இருந்தால், அதன் சுவிட்சை மூடிக் கட்டிவிடுங்கள். மின்விசிறிக்கு முன்னால் நீங்களே தலையை ஆட்டித் திருப்திப்படுங்கள்.

இப்படியெல்லாம் செலவைக் குறைத்தாலும் வருமானத்தைப் பெருக்க என்ன வழி? எனக்கு ஒரேயொரு வழிதான் தோனுது. ஒரு பூதக்கண்ணாடியை வாங்கிக்கொண்டு வந்து உங்கள் சம்பள நோட்டை அதனூடாகப் பாருங்கள்! பெரிசாய்த் தெரியும்! நோ அதர் வே! தேங்யூ.

யாவும் கலப்படமற்ற கற்பனை

## இந்தவாரம் உங்கள் பலன்

24.11.2002 தொடங்கி 30.11.2002வரை

சோதிட மாமணி
தில்லை

### கிரக நிலை

விருட்சிகம் - சூரியன், புதன், கேது, இடபம் - இராகு, மிதுனம் - சனி, கர்க்கடகம் - வியாழன், துலாம்-வெள்ளி, செவ்வாய்.

*சந்திரன் கர்க்கடகம், சிங்கம், கன்னி, துலாம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.*

**மேடம்**
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) தொழில் ரீதியாகவும், குடும்ப ரீதியாகவும் இருந்துவந்த கஷ்டங்கள் தீரும். பெரியோர் உதவியுண்டு. உத்தியோகத்தர்கள், மேலதிகாரிகளின் தொல்லைகளிலிருந்து விடுபடுவர். மாணவர்களுக்குக் கல்விச் சிறப்புண்டு. விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: திங்கள்.
அதிஸ்ட இல.: 1.

**இடபம்**
(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை) எதிர்பார்த்த கருமங்களில் வெற்றியும், மனமகிழ்ச்சியும் ஏற்படும். பணவரவு திருப்திதரும். உத்தியோகத்தில் சிலருக்கு திடீர் மாற்றங்களைத் தரும். மாணவர்கள் கல்வியில் கூடிய கவனமெடுப்பது நல்லது. விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: செவ்வாய்.
அதிஸ்ட இல: 4.

**மிதுனம்**
(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன்முக்கால்) தொழில் சிறப்பும், குடும்பத்தில் மகிழ்ச்சியும் ஏற்படும். எதிர்பாராமல் பணவரவுண்டு. உத்தியோகத்தர்கள் பதவிகளில அவதானமாக நடந்து கொள்ளவும். மாணவர்களுக்குக் கல்வியில் ஏற்பட்டிருந்த தடைகள் விலகும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: வெள்ளி.
அதிஸ்ட இல.: 6.

**கர்க்கடகம்**
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்) மனக்குறை நீங்கும். தொழில் உயர்ச்சியுடன், குடும்ப நன்மையும் உண்டாகும். உத்தியோக நிலையில் மனமகிழ்ச்சிக்குரிய சம்பவங்கள் நடந்தேறும். மாணவர்கள், கல்வியில் அக்கறையுடன் செயற்படுவது நல்லது. விவசாயிகள், வியாபாரிகள் இலாபம் அடைவர்.
அதிஸ்ட நாள்: புதன்.
அதிஸ்ட இல.: 7.

**சிங்கம்**
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) குடும்பத்தில் எதிர்பாராத பிரச்சனைகள் தோன்றும். தொழிலில் மறைமுக எதிர்ப்புக்களுக்கு இடமுண்டு. உத்தியோகத்தில் மேலதிகாரிகளினால் மனச்சஞ்சலம் உண்டாகும். மாணவர்கள் கல்வி நிலையில் முன்னேற்றம் அடைவர். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: புதன்.
அதிஸ்ட இல.: 3.

**கன்னி**
(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) தொழிலிலும், குடும்பத்திலும், முன்னேற்றம் உண்டாகும். உத்தியோகத்தில் வீண் மனஸ்தாபங்கள் ஏற்படும். மாணவர்கள் கல்வியில் குழப்பநிலை தோன்றும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: திங்கள்.
அதிஸ்ட இல.: 4.

**துலாம்**
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன்முக்கால்) தொழில் கஷ்டங்கள் தீரும், குடும்பத்தில் வார இறுதியில் துக்க நிகழ்வு ஒன்று இடம்பெறும். உத்தியோகத்தர்கள் திட்டமிட்டுக் கருமங்களைச் செய்வது நன்மைதரும். மாணவர்களுக்குக் கல்வி சிறப்பளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: செவ்வாய்.
அதிஸ்ட இல.: 7.

**விருட்சிகம்**
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை) வெளியிடப் பிரயாணங்களைத் தவிர்க்கவும். தொழிலிலும், குடும்பத்திலும் மறைமுக எதிர்ப்புக்களுக்கு இடமுண்டு. உத்தியோகத்தில் எதிர்பார்த்த நன்மைகள் தாமதமாகும். மாணவர்களுக்குக் கல்வியில் மந்தநிலை தோன்றும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: வெள்ளி.
அதிஸ்ட இல.: 6.

**தனு**
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) இனசன நன்மையும், குடும்ப மகிழ்ச்சியும் உண்டு. தொழில் கஷ்டங்கள் தீரும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் கெடுபிடிகளுக்கு இடமுண்டு. மாணவர்களுக்குக் கல்வியில் உயர்ச்சி ஏற்படும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: திங்கள்.
அதிஸ்ட இல.: 2.

**மகரம்**
(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை) குடும்பத்தில் வீண் மனஸ்தாபங்களுக்கு இடமுண்டு. தொழில் நிலையில் அவதானத்துடன் செயற்படவும். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளைப் பகைத்துக் கொள்ளாமலிருப்பது நல்லது. மாணவர்களுக்குக் கல்வியில் குழப்பநிலை தோன்றும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: வெள்ளி.
அதிஸ்ட இல.: 3.

**கும்பம்**
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால்) தொழில் மந்தமும், பணக்கஷ்டமும் ஏற்படும். குடும்பத்தில் மறைமுக எதிர்ப்புகள் தோன்றிச் சஞ்சலம் தரும். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளுடன் பகைத்துக் கொள்வர். மாணவர்களுக்குக் கல்வியில் பிரச்சனைகள் உண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: திங்கள்.
அதிஸ்ட இல.: 4.

**மீனம்**
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி) முயற்சிகளில் கூடிய கவனமும், தொழில் நிலையில் அவதானமும் தேவை. பொருள் வரவு சுமாராக இருக்கும். உத்தியோகத்தில் மனச் சங்கடங்கள் ஏற்படும். மாணவர்களுக்குக் கல்வியில் மந்த நிலை தோன்றும். விவசாயிகள், வியாபாரிகள் முதலீடுகளில் அவதானத்துடன் செயற்படுவது நல்லது.
அதிஸ்ட நாள்: செவ்வாய்.
அதிஸ்ட இல.: 5.

Regd. as a News Paper at the G.P.O. (QD/38/NEWS/2001)


ஸ்ரீ கல்யாணி ஜுவல்லஸ்
SRI KALYANY JEWELLS
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

உலக அழகிப் போட்டி ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் நடக்க இருக்கிறது. உலக அழகிப் போட்டியைத் தமது நாட்டில் நடத்துவதற்கு நைஜீரியாவிலுள்ள இஸ்லாமிய அடிப்படைவாத இயக்கங்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன. அவ்வாறு போட்டி நடத்தப்பட்டாலும் அதில் நைஜீரியா அழகிகள் பங்கு கொள்ளக் கூடாதென இத்தகைய அமைப்புக்கள் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளன. ஆனால் இந்த எச்சரிக்கைகளையும் மீறிப் போட்டியை நைஜீரியாவில் நடத்தியே தீருவது என ஏற்பாட்டாளர்கள் உறுதியாக இருக்கிறார்கள். தற்போது போட்டிக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டு அழகிகள் நைஜீரியா சென்றடைந்துள்ளார்கள்.

போட்டிகளுக்கு முன்னதாக அழகிகள் கலந்து கொண்ட விழா ஒன்றில் பல்வேறு நாடுகளையும் சேர்ந்த அழகிகள் அமர்ந்திருப்பதைக் காண்கிறீர்கள்.

இம்முறை உலக அழகு ராணிப் போட்டிக்கு இஸ்லாமிய தீவிரவாத இயக்கங்களால் ஆபத்து ஏற்படலாம் என்று கருதப்படுவதால் நைஜீரிய அரச போட்டி நடைபெறும் இடத்தைச் சுற்றிக் கடும் பாதுகாப்பை வழங்கியிருக்கிறது.

அழகிகளது சுதந்திரமான நடமாட்டத்திற்கும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருப்பதுடன் தங்களது பாதுகாப்புக் குறித்து எச்சரிக்கையாக நடந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டிருக்கிறார்கள்.


அருள் ஜுவலர்ஸ்
பெண்களின் அழகோ இரகசியம் அதை எங்களது வண்ண நகைகள் மின்னிப் பேசுகின்றன.
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
436331

# எதிர்ப்புக்கு மத்தியில் அழகிகள்







# அஸ்பிறின் மரம்

இது அஸ்பிறின் மரம் உலகம் முழுவதிலும் பரவலாக உபயோகிக்கப்படும் வலி நீக்கி மாத்திரையான அஸ்பிறின் முதன் முதலில் இந்த மரத்தின் பட்டைகளிலிருந்தே தயாரிக்கப்பட்டது. விலோ மரங்கள் என அறியப்படும் இம் மரத்தின் பல்வேறு பகுதிகளும் மருத்துவ ரீதியில் பிரயோசனம்மிக்கவை.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே சீனர்கள் இந்த மரத்தின் பட்டைகளின் உதவியுடன் அஸ்பிறின் மாத்திரைகளைத் தயாரித்ததாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. எவ்வாறெனினும் நவீன காலத்தில் இந்த விலோ மரங்கள் அஸ்பிறினுக்காக அல்லாமல் கிரிக்கட்டுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

அதாவது, இந்த மரப்பலகையினால் கிரிக்கட் மட்டை தயாரிக்கப்படுகிறது.



# அணு ஆயுதம் தேடி...

அமெரிக்காவின் தாக்குதலைத் தவிர்ப்பதற்கு ஈராக் தன்னாலான சகல இராஜதந்திர முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது.

ஆனால், ஈராக்கைத் தாக்கியே தீருவது என புஷ் நிருவாகம் கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கிறது.

ஈராக்கில் அபாயகரமான ஆயுதங்கள் இருக்கின்றனவா எனப் பரிசோதிக்க ஐ.நா. கண்காணிப்பாளர்களுக்கு பக்தாத் அனுமதி அளிக்க வேண்டுமென சமீபத்தில் நிறைவேற்றப்பட்ட ஐ.நா. சபைத் தீர்மானத்திற்கு அமைவாக தனது நாட்டுக்குள் வந்து சோதனை நடத்த சதாம் ஹுஸைன் அனுமதி அளித்திருக்கிறார்.

இந்தத் தீர்மானம் ஈராக்கின் இறைமையை அப்பட்டமாக மீறும் செயல் என்றபோதிலும் போரைத் தவிர்ப்பதற்காக ஆயுதக் கண்காணிப்பாளர்களை நாட்டுக்குள் அனுமதிப்பதாக ஈராக்கிய அரசாங்கம் கடந்த வாரம் அறிவித்தது.

இப்போது கண்காணிப்பாளர்கள் பக்தாத் செல்லத் தயாராகிறார்கள். அதிநவீன உளவு பார்க்கும் கருவிகள் இதற்கெனத் தயார் செய்யப்படுகின்றன.

ஈராக்கிற்குக் கொண்டு செல்லத் தயார் நிலையில் வைக்கப்பட்டிருக்கும் நவீன கமெராக்கள் சிலவற்றையே இங்கே காண்கிறீர்கள். இவை எத்தகைய சீதோஷ்ணத்திற்கும் ஈடுகொடுத்து வெளிச்சத்திலும் இருளிலும் படம் பிடிக்கக் கூடியவை.

எவ்வாறெனினும் அமெரிக்காவின் நோக்கம் வேறென்பதால் கண்காணிப்பு என்பது கண் துடைப்புத்தான் ஆதலால் ஈராக்குடன் போர் தவிர்க்கப்படுமென்று நிச்சயமாகக் கூற முடியாது.

வேண்டுமெனில் இந்த ஆயுதக் கண்காணிப்பு நடவடிக்கை ஈராக்கின் இராணுவ நிலைகளைப் படம் பிடித்துக் கொள்ள அமெரிக்காவுக்கு உதவும்.

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



திருகோணமலையைச் சேர்ந்த விஜயதாசன் [illegible] தம்பதிகளின் செல்வப் புதல்வி விஜோஜா தனது முதலாவது பிறந்தநாளை 18.11.2002ல் பிரான்ஸில் TORCY என்னும் இடத்திலுள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா, [illegible]

**செல்வி விஜயதாசன் விஜோஜா 18.11.2002**

பெரியப்பா [illegible] ... அம்பாளை வேண்டி வாழ்த்துகிறார்கள்.

தகவல்: சிசிவராசா அம்மப்பா-திருகோணமலை

## 1வது பிறந்த தின வாழ்த்து

**செல்வி ஜெ. அகல்யா 20.11.2002**

கழிபரதனைப் பிறப்பிடமாகவும் இங்கிலாந்து பேர்மிங்காமை வதிவிடமாகவும் கொண்ட ஜெயசந்திரன்-[illegible] தம்பதிகளின் செல்வப் புதல்வி அகல்யா தனது முதலாவது பிறந்தநாளை பேர்மிங்காமிலுள்ள தனது இல்லத்தில் 20.11.2002 அன்று வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். செல்வி அகல்யாவை அன்பு அப்பா, அம்மா, அன்பு அண்ணா காவியன், அன்பு அக்கா [illegible] ... அருள் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:- திரு.திருமதி.ஜெயசந்திரன் (இங்கிலாந்து)





இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 9A ஆம் இலக்கத்தில் டி.டி. என்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தால் பொரலஸ்கமுவவில் உள்ள சி.பி.டி. அச்சகத்தில் நவ. 24ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.